விலை: 30
பக்கங்கள்: 32

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

சுடர் 33 கதிர் 332 ஐப்பசி 07ஆம் நாள் புதன்கிழமை 24 ஒக்ரோபர் 2018 வள்ளுவர் ஆண்டு 2049

ஒற்றுமையை இப்போது சீர்குலைத்து

## வெண்ணை திரண்டு வரும்போது தாழியை உடைத்துவிடக்கூடாது

யாழ்ப்பாணம், ஒக். 24
நாங்கள் ஒற்றுமையாகச் செயற்படவேண்டும் என்றுதான் மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். இப்போது ஒற்றுமையைச் சீர்குலைப்பது, வெண்ணை திரண்டு வரும்போது தாழியை உடைப்பதற்குச் சமனானது. இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார். >> 29

## விக்கியின் கருத்துக்கு சிவாஜி பதிலடி

யாழ்ப்பாணம், ஒக். 24
வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம், முதலமைச்சர் கூறுவதைப் போன்று மக்கள் கிளர்ச்சியால் பின்வாங்கப்படவில்லை. கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் இராஜதந்திர நடவடிக்கையினாலேயே மீளப்பெறப்பட்டது. இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

'எனக்கு எதிராக நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டபோது மக்கள் தாங்களாகவே கிளர்ந்தெழுந்து குறிப்பாக இளஞ் சமூகம் அதனை முறியடித்தமையை நன்றியுடன் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் நினைவுபடுத்திக்கொள்கின்றேன்' என்று முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தனது உரையில் குறிப்பிட்டிருந்தார்.
இதற்குப் பதில் கூறும் விதமாகக் கருத்துத் தெரிவித்த அஸ்மின், முதலமைச்சர் இரா. சம்பந்தனின் காலில் >> 29

## இனத்தைக் காக்கவே ஒற்றுமை அவசியம்

இறுதி அமர்வில் விக்கி உரை

யாழ்ப்பாணம், ஒக். 24
எமது இனத்தை அழிப்பதற்கா அல்லது பாதுகாப்பதற்கா ஒற்றுமை வேண்டும் என்பதை நாம் தீர்மானிக்க வேண்டிய காலம் வந்துவிட்டது என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், மாகாணசபையின் இறுதி அமர்வில் நேற்று ஆற்றிய உரையில் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது: >> 29

# அடுத்த மாகாணசபையாவது சிறப்பாகச் செயற்படட்டும்

இறுதி அமர்வில் உறுப்பினர்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 24
அடுத்த வடக்கு மாகாணசபையாவது சிறப்பாகச் செயற்படட்டும். அதற்காக இந்த மாகாண சபை எதுவும் செய்யவில்லை என்று அர்த்தமில்லை. செய்யவேண்டிய பலவற்றைச் செய்யவில்லை. மக்கள் எங்களிடம் எதிர்பார்த்தது அதிகம். நாங்கள் அதனைப் பூர்த்தி செய்யவில்லை. இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் நேற்றுத் தமது இறுதி உரையில் ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்கள். >> 29

## விடயங்களை அரசியலாக்கியதே சபையின் தோல்விக்குக் காரணம்

தவராசா கருத்து

யாழ்ப்பாணம், ஒக். 24
வடக்கு மாகாணசபையின் தோல்விக்கு முக்கியமான காரணங்களைப் பட்டியலிட்ட எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா, மாகாணசபையின் தோல்விக்கு முக்கிய காரணங்களில் ஒன்று ஒவ்வொரு விடயத்தினையும் திறந்த கண்ணோட்டத்துடன் பார்க்காமல் அரசியலாக்க முனைந்ததன் விளைவு என்றே கருதக்கூடியதாக இருக்கின்றது என்று குறிப்பிட்டார்.

(எதிர்க்கட்சித் தலைவரின் முழுமையான உரை - பக்.15)

## இன்று கடைசி என்றா படம் எடுக்கிறியள்?

முதலமைச்சரின் கேள்வி



யாழ்ப்பாணம், ஒக். 24
வடக்கு மாகாண சபை அமர்வுக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் வருகை தந்தார். அவர் சபா மண்டப வாசலுக்கு நுழையும்போது ஊடகவியலாளர்கள் ஒளிப்படங்களை எடுத்தனர். அதன்போது அவருக்குப் பிறந்த நாள் வாழ்த்தும் தெரிவிக்கப்பட்டது. இதன்போது, இன்று கடைசி >> 26

## சபையின் இறுதி அமர்வில் வெளிவந்த உண்மைகள்

யாழ்ப்பாணம், ஒக். 24
வடக்கு மாகாண சபையின் இறுதி அமர்வில் உரையாற்றிய உறுப்பினர்கள் இதுவரை வெளியிடாத இரகசியங்களை உண்மைகளை நேற்றுப் போட்டுடைத்தனர். வடக்கு மாகாண சபையின் முன்னாள் சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், தான் அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கப்பட்டமை தொடர்பான விவகாரத்தை இறுதி அமர்வில் குறிப்பிட்டார். இது தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சர் >> 29



## இறுதி அமர்விலும் தொடர்ந்த சண்டை

யாழ்ப்பாணம், ஒக். 24
வடக்கு மாகாண சபையின் இறுதி அமர்வு சம்பிரதாய அமர்வாக இருக்கும் என்று அறிவிக்கப்பட்ட நிலையில், நேற்றைய அமர்விலும் வழமைபோன்று சண்டை தொடர்ந்தது.
அமர்வு ஆரம்பத்தில் திருமதி அனந்தி சசிதரன் தொடர்பில் கட்சியின் செயலரால் அவைத் தலைவருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தை, அவைத் தலைவர் சபையில் தெரியப்படுத்தியதால் சண்டை >> 29

## முதலமைச்சராக விக்னேஸ்வரனின் இறுதி நிகழ்வு இன்று மாலையே!

>> 29

## அனந்தியால் சபையில் நேற்றுப் பெரும் சர்ச்சை

யாழ்ப்பாணம், ஒக். 24
வடக்கு மாகாண சபை மகளிர் விவகார அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் உறுப்புரிமையிலிருந்து விலகுவதாக அறிவித்த கடிதத்தால் வடக்கு மாகாண சபையின் நேற்றைய இறுதி அமர்வில் பெரும் சர்ச்சை மூண்டது.
வடக்கு மாகாணசபையின் நேற்றைய இறுதி அமர்வில், அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தனது அறிவித்தலின்போது, திருமதி அனந்தி சசிதரன், இலங்கைத்தமிழ் >> 26

SEE MORE NEWS
newuthayan.com

## தனிப்பட்ட ஆளணியினரை நிரந்தரமாக்கும் தீர்மானம் சர்ச்சையுடன் நிறைவேற்றப்பட்டது

யாழ்ப்பாணம், ஒக். 24
வடக்கு மாகாண முதலமைச்சர், அவைத்தலைவர், அமைச்சர்கள், உறுப்பினர்களின் தனிப்பட்ட ஆளணியினரை நிரந்தர அரச சேவைக்குள் உள்ளீர்க்கும் தீர்மான வரைவு மீது கடும் வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்று, திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டது.
வடக்கு மாகாண சபையின் இறுதி அமர்வில் முதலமைச்சரால் தீர்மான வரைவு சமர்பிக்கப்பட்டது. அரச சுற்றறிக்கைக்கு அமைவாக முதலமைச்சர், அவைத் தலைவர், அமைச்சர்களின் தனிப்பட்ட ஆளணியினர் மூன்று ஆண்டுகள் தொடர்ச்சியாக பணியாற்றியதைக் கருத்தில் கொண்டு அவர் >> 29

## முடிந்தது 7½

யாழ்ப்பாணம், ஒக். 24
வடக்கு மாகாண சபையின் இறுதி அமர்வு நேற்று இரவு 7.30 மணியுடன் நிறைவுக்கு வந்தது.
முதலாவது வடக்கு மாகாணசபையின் இறுதி அமர்வு கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் நேற்றுக் காலை 9.50 மணிக்கு ஆரம்பமாகியது. முதலாவது மாகாணசபையின் காலத்தில் அமர்வு காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும் >> 26

## தேநீர் விருந்தில் பங்கேற்காத விக்கி

யாழ்ப்பாணம், ஒக். 24
வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நேற்றைய இறுதி அமர்வில், வழமை போன்று மதியத்துடன் வெளியேறினார். நேற்று மாலை தேநீர் விருந்துபசாரத்துக்கு ஒழுங்கு செய்திருந்த நிலையிலும் அதில் பங்கேற்கவில்லை.
வடக்கு மாகாண சபையின் இறுதி அமர்வான நேற்று, மாலை >> 29

## மாகாணசபையின் இறுதி அமர்வில்

(சபைச்செய்தியாளர்)

# சண்டை- உருக்கம்- கண்ணீர்

முதலாவதுவடக்குமாகாணசபையின்நேற்றைய அமர்வில் உறுப்பினர்கள் தங்களின் பல்வேறுஉணர்வுகளைவெளிப்படுத்தினர். வழமைபோன்று சண்டை, விவாதம், கோபப் பேச்சுக்கள், குத்தல் பேச்சுக்கள்,



சபை அமர்வு ஆரம்பம்


நையாண்டிக்கதைகள்.உருக்கமானஉரைகள் என்று தொடர்ந்து இறுதியில் கண்ணீருடன் பேரவைச் செயலகத்திலிருந்து விடைபெற்றார்கள்.

முதலாவது வடக்கு மாகாண சபையின் இறுதி

இறுதி அமர்வு நேற்று இடம்பெற்றது. மாகாணசபையின்அமர்வைப்பார்வையிடுவதற்காக வடமராட்சிக் கல்வி வலயத்தின் மெதடிஸ்த மகளிர் பாடசாலை, சித்திவிநாயகர் பாடசாலை, சென்தோமஸ் பாடசாலை ஆகியவற்றைச்சேர்ந்தமாணவர்நாடாளுமன்ற பிரதிநிதிகள் வந்திருந்தனர்.

சபை அமர்வு ஆரம்பமாவதற்கு முன்னர் சபாமண்டபத்துக்குச்செல்வதற்குசெங்கம்பளம்விரிக்கப்படும். பேரவைச்செயலகஊழியர்கள்நேற்றுக்காலைவழமைக்குமாறாக அதில்தடுமாறினர். அவைத்தலைவர்கொஞ்சம் சூடாகிவிட்டார். சபை அமர்வு 9.50 மணிக்குதொடங்கியது. வழமைக்குமாறாக எல்லா ஆசனங்களிலும் உறுப்பினர்கள் இருந்தார்கள். ஆளும்கட்சிஉறுப்பினர்சிவயோகன்மாத்திரம்வரவில்லை. அவர்மருத்துவமனையில்சேர்க்கப்பட்டிருப்பதாகதகவல்பரிமாறப்பட்டது.

வடக்கு மாகாண சபையின் கன்னி அமர்வு. கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் உள்ளிட்ட கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்



களால்நிறைந்திருந்தது. ஆனால்நேற்றைய அமர்வில், மாகாணசபையின் முன்னாள் உறுப்பினரும், இந்நாள்மாநகரசபைமுதல்வருமான ஆனோல்ட் மாத்திரமே வந்திருந்தார். ஏனைய இடங்களை அதிகாரிகளே நிரப்பியிருந்தனர்.

அவைத் தலைவர் சபையை ஆரம்பிக்கும் போதே, வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் 79ஆவது பிறந்த நாளுக்கு வாழ்த்துத் தெரிவித்தார். உறுப்பினர்கள்கைதட்டிவாழ்த்தினார்கள். அவைத் தலைவர்,மாகாணசபையின்கீதத்தைஅனுமதிக்காகச் சமர்பித்தார். அது சபையில் இசைக்கப்பட்டது. உறுப்பினர்கள் எழுந்து நின்றுமரியாதைசெலுத்தினார்கள்.

அமர்வு ஆரம்பமானது. முதலமைச்சரின் பிறந்தநாளுக்கு ஒரு விடயத்தைச்செய்யஅனுமதி வேண்டும் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் அகிலதாஸ் அவைத் தலைவரிடம் கோரினார். அவைத் தலைவர் என்ன என்று சொல்லாமல்எப்படிஅனுமதிப்பது என்று கேட்க, தயங்கியபடி பொன்னாடை போர்த்த வேண்டும் என்றார் அகிலதாஸ். அதனைச் செய்யுங்கள் என்றார். உடனே முதலமைச்சருக்கு பொன்னாடை போர்த்தி காலில் வீழ்ந்து வழங்கினார் அவர். சபை உறுப்பினர்கள் எழுந்து மரியாதை செலுத்தினர்.



சபையின் கீதம் இசைக்கப்பட்டது

சபையில் செங்கோலைத் தாங்கி வரும் படைக்கலச்சேவிதர்பணியைபுதியவர்ஒருவர் நேற்று மேற்கொண்டார். அதனாலோ என்னவோ, செங்கோலை குழு நிலையில் வைத்துவிட்டார். சபை அமர்வு ஆரம்பமாகி சிறிது நேரத்தின் பின்னரே அமைச்சர் குணசீலன் கண்டுபிடித்தார். அவைத்தலைவருக்குத் தெரிவித்தார். உடனே அவைநிலைக்கு செங்கோல் மாற்றி வைக்கப்பட்டது.

அனந்தியின் கட்சி விலகல் தொடர்பான கடிதத்துக்கு கட்சியின் செயலர் அவைத் தலைவருக்கு அறிவித்ததை, அவைத் தலைவர் சபையில் வெளிப்படுத்தியதால் சர்ச்சை மூண்டது. வழமையான ஆளும்கட்சிக்குள் இருக்கும் இரண்டு அணிகளின் மோதலாக அது உருமாறியது. இறுதி அமர்விலும் மோதலாஎன்றுபார்வையாளர்கள்கலரியில் இருந்தோர் முகம் சுழித்தனர். இதன் பின்னர் முதலமைச்சர், அவைத் தலைவர் ஆகியோரின் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதன்போது அவைத் தலைவர், எல்லோரும் அடுத்த முறை மாகாணசபைக்கு வருவினம் என்றில்லை கொஞ்சப் பேர் வருவினம் என்று கூறி என்ன ரவிகரன் என்று சிரித்தார். சபையிலும் சிரிப்பொலி எழுந்தது.

இதன் பின்னர் சபை தேநீர் இடைவேளைக்கு ஒத்திவைக்கப்பட்டது. இடைவேளை முடிந்து அமர்வு ஆரம்பமாகியதும் முதலமைச்சர் உரையாற்றினார். வழமைக்கு மாறாக இருந்து பேசுவதற்குஅனுமதிகேட்டுஉரையாற்றினார். சுமார் அரை மணிநேரம் சபை அமைதியாகஇருந்தது. முதலமைச்சரின் உரையின்போது ஒலிவாங்கி கோளாறு பண்ணியது. இது ஏனைய உறுப்பினர்களின் உரையின்போதும் தொடர்ந்தது. இதனால்பலநிமிடநேரம்வீணடிக்கப்பட்டது.

எதிர்க்கட்சித் தலைவர் உரையாற்றும் போது, முதலமைச்சர் மீது பல்குழல் தாக்குதல்தொடுத்தார். ஒருகட்டத்தில்முதலமைச்சர் எழுந்து பதில் கூறமுற்பட்டபோது, எதிர்க்கட்சித் தலைவருக்கும், முதலமைச்சருக்கும் இடையில் பெரும் வாக்குவாதம் ஏற்பட்டது. ஒலிபெருக்கிகள் கதறும் அளவுக்கும் இருவரும் உச்சஸ்தாயில் சண்டை பிடித்தனர். எதிர்க்கட்சித்தலைவரின் உரையின் இடையிடையே, ஆளும் கட்சி உறுப்பினர்கள் மேசையில்தட்டிஆதரவுதெரிவித்தனர்.

தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் சர்வேஸ்வரன், மாகாண அரசின் பல விடயங்களில் குடும்பி கொழும்பு அரசிடம்தான் இருந்தது. இதற்கு மத்தியிலும் வடக்கின் கல்வியில் முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளோம் என்று குறிப்பிட்டார். தொடர்ந்து சத்தியலிங்கம் உரையாற்ற முற்பட்ட போது, ஒலிவாங்கி கோளாறு செய்தது. இதனால் சபையை மதியபோசன இடைவேளைக்கு ஒத்திவைத்து பின்னர் நடத்தலாம்என்று யோசனை முன்வைக்கப்பட்டது. அதுஏற்றுக்கொள்ளப்பட்டு சபை மதியபோசன இடைவேளைக்குஒத்திவைக்கப்பட்டது.

ஆட்டுக்கறி விருந்துக்குச் சென்ற பலருக்கு ஏமாற்றமே மிஞ்சியது. சபை உறுப்பினர்களின் உதவியாளர்கள் மற்றும் ஏனையோர் ஆட்டுக்கறி தங்களுக்குக் கிடைக்கவில்லை என்று கூறி வருத்தப்பட்டனர். கைக்கு எட்டியும் வாய்க்கு எட்டவில்லை போலும்.

மதியபோசனத்தின் பின்னர் சபை அமர்வு ஆரம்பமாகியதும், சத்தியலிங்கம் உரையாற்றத் தொடங்கினார். வெளிநாட்டு நிதியைப் பெற்று தான் அமைச்சராக இருந்த காலத்தில் செய்த சேவையை நினைவுபடுத்தினார். மீள்குடியேற்றக்கொள்கை, மகளிர் விவகாரக் கொள்கை உள்ளிட்ட பலவற்றை உருவாக்கியதையும் அது கிடப்பில் போடப்பட்டதையும் வேதனையுடன் நினைவுகூர்ந்தார். மேலும், அமைச்சர்கள் மீதான விசாரணைஊடாகமுதலமைச்சர்தங்களை வஞ்சித்து விட்டார் என்பதையும், சபையிலிருந்துகனத்தமனத்துடனேவெளியேறுவதாகவும் குறிப்பிட்டார்.

தொடர்ந்து மற்றொரு முன்னாள் அமைச்சர் டெனீஸ்வரன் உரையாற்றத் தொடங்கும் போது அவைத் தலைவர் நேரக் கட்டுப்பாட்டைக் கூற, இன்றைக்குப் பின்னர் இனி எங்களைக் கட்டுப்படுத்தேலாதுதானே என்று சிரித்துக் கொண்டு கூறி தனது உரைக்குள் நுழைந்தார். இணைந்தபோக்குவரத்து அட்டவணையை நடைமுறைப்படுத்தவில்லை, முன்னாள் போராளிகளுக்கானவாழ்வாதார உதவிகள் தன்னிடம் இருந்து அமைச்சுப் பறிக்கப்பட்ட பின்னர் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றும்கூறினார். தன் முனைப்பாலே (ஈகோ) எல்லாம் பிரச்சினையாகியது என்று கூறினார்.

2016ஆம் ஆண்டு பான்கீமூன்யாழ்ப்பாணம் வந்த போது அவரைச் சந்திப்பதற்குவடக்குமாகாணஅமைச்சர்கள் முதலமைச்சர் தனியாகக் கூட்டிச் சென்றார். ஏன் கட்சித் தலைமையுடன் கூட்டிச் செல்லவில்லை. எல்லாப் பிரச்சினைக்கும் முதலமைச்சர்தான்காரணம்என்றார். தொடர்ந்து உரையாற்றிய லிங்கநாதன், அரசியல் விடயங்களை நாடாளுமன்ற உறுப்பினர்கள் பார்க்கவிட்டு, பொருளாதார விடயங்களை நாங்கள் பார்த்திருக்கவேண்டும். நாங்கள் எப்போது அரசியல் இங்கு பேசத் தொடங்கினமோ அப்போதே எல்லாப்பிரச்சினையும்வந்தது. மேலும், சபையைமாங்குளத்துக்கு மாற்றுமாறு கோரியபோதும் அது நடைபெறவில்லை என்றார்.

(3ஆம் பக்கம் பார்க்கவும்)



முதலமைச்சருக்கு பொன்னாடை போர்க்கும் உறுப்பினர் அகிலதாஸ்

தொடர்ந்து உரையாற்றிய விந்தன், முதலாவது மாகாண சபையினால் 5 ஆண்டுகளில் எல்லாவற்றையும் செய்து விட முடியாதுஎன்றார். அடுத்துஉரையாற்றியஆளும்கட்சிஉறுப்பினர் சயந்தன், முதலமைச்சருக்கு பிறந்தநாள் வாழ்த்துச் சொல்லலாம். அதனைவிட வேறு எந்தவொரு விடயத்துக்காகவும்வாழ்த்துச்சொல்லமுடியாதுஎன்றுமுதலமைச்சரை ஒரு வாங்கு வாங்கினார். முன்னாள் அமைச்சர்



சபை அமர்வு முடிந்து உறுப்பினர்கள் வெளியேறுகின்றனர்

த.குருகுலராஜா, சபையை கலைக்காமல் கொண்டு நடத்தியதே மைல்க்கல் என்றார். மக்கள் எங்கள் சபைக்கு எதிராக கிளர்ந்தெழுந்துபோராட்டம்நடத்தவில்லை. அரசியலில்வந்த சந்தேகம்தான் எல்லாப்பிரச்சினைகளுக்கும்காரணம்என்று கூறி முடித்தார்.

எதிர் கட்சி உறுப்பினர் ஜவாகிர் கண்ணீருடன் உரையாற்றினார். அவரது குரல் தழுதழுக்க உரையைத் தொடர்ந்தார். மனிதர்களைநேசிக்கின்றவர்களைஅடுத்தமுறைக்குஉறுப்பினர்களாகத் தெரிந்தெடுக்கவேண்டும் என்று அழுத்தி உரைத்தார். அடுத்துஉரையாற்றியதிருமதிஅனந்திசசிதரன் தனது அமைச்சின் செயற்பாடுகளைப் பட்டியலிட்டார். அமைச்சுதொடர்பானமீளாய்வுக்கூட்டமா நடைபெறுகின்றது என்று சந்தேகிக்கும் அளவுக்கு அவரது உரை அமைந்து விட்டது. வவுனியா மாவட்ட உறுப்பினர் தியாகாராசா வழமை போன்று சிரிப்புடன் தனது உரையைத் தொடர்ந்தார். இங்கு நடந்தநல்லதுகெட்டதுஎல்லாவற்றிலும்38உறுப்பினர்களுக்கும்பங்குஉண்டுஎன்றுபொறுப்புடன்பேசினார். எல்லோரும் வெளியில்ஒற்றுமையாகச்செயற்படவேண்டும்என்றுகோரிக்கையும் முன்வைத்தார். எதிர்க்கட்சி உறுப்பினர் அலிக்கார் சலிப்தனதுகவிப்புலமையால்சபையில்விளாசித்தள்ளினார். ஈழம்பட்டொளிவீசிப்பறந்திடவேண்டும்என்பதையும்தனது கவிதைக்குள் உட்புகுத்தியிருந்தார். முல்லைத்தீவு மாவட்ட உறுப்பினர் புவனேஸ்வரன், செய்ய வேண்டிய விடயங்கள் பலவற்றைச் செய்யவில்லை என்று ஆதங்கப்பட்டார்.

ஆளும்கட்சிஉறுப்பினர்ச.சுகிர்தன். 2014ஆம்ஆண்டுஎதிர்க்கட்சித்தலைவர்முதலமைச்சர்மீதுகுற்றம்சொல்லியிருந்தால் ஆளும்கட்சிஉறுப்பினர்கள்எல்லோரும்பதிலடிகொடுத்திருப்பார்கள். ஆனால்இன்றுஎதிர்க்கட்சித்தலைவர்முதலமைச்சர் மீது குற்றம் சுமத்தும்போது ஆளும் கட்சி உறுப்பினர்கள் மௌனமாகஇருக்கின்றார்கள். பாதைகள்பயணத்தைதீர்மானிப்பதில்லை. முடிவுகள்தான் பயணங்களைத் தீர்மானிக்கின்றன. என்பதைக்குறிப்பிட்டு, கூட்டமைப்புத்தான் பலருக்கு முகவரி தந்தது. ஆனால் பதவிக்காக அந்த முகவரியைப் பலர் சிதைக்கின்றனர் என்று நாசூக்காகச் சிலரைச் சாடினார்.

முல்லைத்தீவு மாவட்ட மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன், வழமைக்கு மாறாகச் சிற்றுரையாற்றினார். எல்லாத் தரப்புக்களும்நன்றிகூறுவதுடன்தனதுஉரையைமுடித்துக் கொண்டார். அடுத்து உரையாற்றிய அஸ்மின், தமிழ் முஸ்லிம் இணைப்புக்காக முயற்சித்தேன் என்றும் அதில் சிறு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

முஸ்லிம்களின் மீள்குடியமர்வு விவகாரத்தில் வடக்கு மாகாணசபை முழுமையான ஒத்துழைப்பு வழங்கவில்லை என்றும் சாடினார். மேலும், முதலமைச்சர் தனது உரையில் முன்வைத்த குற்றச்சாட்டுக்களுக்கு ஆதாரங்களை முன்வைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

கிளிநொச்சி மாவட்ட உறுப்பினர் அரியரட்ணம், வாக்கெடுப்புக்குப்போகாமல்பலவிடயங்களைநிறைவேற்றியுள்ளோம் என்றுபெருமைப்பட்டுக்கொண்டார்;. கம்பராமாயணக்கதையைக்கூறி, முதலமைச்சர்இங்குள்ள37உறுப்பினர்களிலும் நம்பிக்கை வைத்துச் செயற்படவில்லை. அவர் நம்பிக்கை வைத்துச் செயற்பட்டிருந்தால் இவ்வளவு பிரச்சினைகள் வந்திருக்காது என்று வருத்தத்துடன் தனது கருத்தைப் பதிவு செய்தார். யாழ்ப்பாண மாவட்ட உறுப்பினர் தர்மலிங்கம், அபிவிருத்தி விடயத்தில் மாகாணசபை எதையும் செய்யவில்லை என்று குறிப்பிட்டார். தான் இங்கு அடிக்கடி பேசுவதில்லை என்றும் மற்றையோர் பேசுவதை வைத்து மதிப்பீடு செய்து வைத்திருக்கின்றேன்என்றும்குறிப்பிட்டஅவர், இங்குபலரும் பேசியதைப்பார்க்கும்போதுவித்துவக்காய்ச்சல்என்றேதான் நினைப்பதாகக் கூறினார்.

அடுத்து உரையாற்றிய ஜெயசேகரன், அபிவிருத்தி சம்பந்தமாக தான் பலவற்றைக் கூறியும் சபையில் அது ஏற்றுக் கொள்ளப்படவில்லைஎன்றுகவலைவெளியிட்டார்.

அவைத் தலைவர் இனி தான் கருத்துத் தெரிவிக்கப்போகின்றேன்என்றுகூற, பல உறுப்பினர்கள்தாங்கள்பேசக்காத்திருப்பதாகத் தெரிவித்தனர். நீங்கள் எனக்கு துண்டுஅனுப்பவில்லை என்று அவைத் தலைவர் கூற, இறுதி அமர்வில் எல்லோரும் பேசலாம் என்று நீங்கள் தெரிவித்ததால், உங்கள்அழைப்புக்காகக்காத்திருப்பதாக உறுப்பினர்கள் தெரிவித்தனர். இன்னும் பலர் பேச வேண்டியிருப்பதாலும், நேரம் மாலை 4 மணியை எட்டியிருப்பதாலும்சபை தேநீர் இடைவேளைக்காக ஒத்திவைக்கப்பட்டது.

சபைமீண்டும்4.30மணிக்குஆரம்பமானது. அமைச்சர் குணசீலன், சிறு வயதிலேயே கட்டிப்போடப்பட்ட யானை எப்படிஅதன்பலம்தெரியாமல்இருக்கின்றதோ அதேபோன்று நாங்களும் எங்களின்பலம்தெரியாமல்இருந்துவிட்டோம் என்றுகுட்டிக்கதையூடாகஅதைச்சொன்னார். அடுத்துஉரையாற்றிய எதிர்க்கட்சி உறுப்பினர் ரியால், வடக்கு கிழக்கு இணைப்பு சாத்தியமற்றது என்று சொல்லமாட்டேன். வடக்கு கிழக்கு இணைப்பை முஸ்லிம் காங்கிரஸ் ஏற்றுக் கொள்கின்றது என்று கூறினார்.

அடுத்து உரையாற்றிய ஆளும் கட்சி உறுப்பினர் குகதாஸ், கொழும்பு அரசால் எங்கள் மீது பிரயோகிக்கப்பட்ட தடைகள் மக்களுக்குத்தெரியும். மக்களின்தேவைகளைநாங்கள்முழுமையாக நிறைவேற்றவில்லை என்றார். அடுத்து அமைச்சர் சிவநேசன் உரையாற்றினார். மக்கள் ஒற்றுமைக்காக ஆணைதந்தார்கள். அதனைமீறிவிட்டோம். வரட்டுக்கௌரவம்தான் முரண்பாடுகளுக்கு காரணம் என்றார். நாங்கள் விமர்சனங்கள்செய்துள்ளோம். ஆனால்சுயவிமர்சனங்களை ஏற்றுக் கொள்ளவில்லை என்று குறிப்பிட்டதுடன் பொது எதிரியார்என்பதைஅடையாளம்காணத்தவறிவிட்டோம்எனவும் தெரிவித்தார். தமிழ் மக்களின் தலைமைகள் பலவீனமானவர்கள், ஆளுமைகுறைந்தவர்கள்என்பதையும்சுட்டிக்காட்டி, பேரினவாதம் எங்கள் மாகாணசபையை திறம்பட இயங்காமல் இருப்பதற்கு பணம் வழங்கியுள்ளது என்று குறிப்பிட்டு உரையை முடித்தார்.

ஆளும் கட்சி உறுப்பினர் சயந்தனும், அஸ்மினும், சிவநேசனுடன் மல்லுக் கட்டினர். எங்கள் தமிழ்த் தலைவர்கள் மிதவாதத்தலைவர்கள். அவர்கள்ஆயுதம் தூக்காதவர்கள் என்பதை சிவநேசனுக்குகுத்திக்காட்டி, சிவநேசன் பணம்பெற்றாராஎன்பதைச்சபைக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்றனர். சர்ச்சையாவதற்கு முன்னர் தடுப்பதற்கு அவைத் தலைவர் முயன்றார். பொத்தம் பொதுவாக்க குற்றச்சாட்டுக்களை முன்வைத்து விட்டுப்போகமுடியாதுஎன்பதுசயந்தன், அஸ்மினதுவாதமாகஅமைந்தது. அவைத் தலைவர் நிலைமையைச் சமாளித்து அடுத்தவரை பேச அழைத்தார்.

முல்லைத்தீவு மாவட்ட மாகாண சபைஉறுப்பினர்கமலேஸ்வரன், அமைச்சரவை 4 மாதங்களாக இயங்காமையினால் பல விடயங்கள் நடைபெறவில்லை என்பதை வேதனையுடன் குறிப்பிட்டார். பரஞ்சோதி, அபிவிருத்தி விடயங்கள் தேவையில்லை என்று முதலமைச்சர் கூறியமைக்காக மக்களிடம் மன்னிப்புக் கோருவதாகத் தெரிவித்தார். அத்துடன் முதலமைச்சர்தான் பிளவை உருவாக்கினார், ஊக்குவித்தார் என்று குற்றம் சுமத்தினார். அடுத்து எதிர்க்கட்சி உறுப்பினர் தவநாதன், செத்த பாம்மை அடிக்க விரும்பவில்லை என்ற பீடிகையை தனது உரையின் முகவுரையாக்கினார். ஊழல் விவகாரத்தை வெட்கங்கெட்ட செயற்பாடுஎன்றுவிமர்சித்தார். கட்சிசார்பில்லாதவர்கள்தலைமையில் இருந்தால் விடயங்களை நகர்த்த முடியாது என்று முதலமைச்சருக்கு மறைமுகமாகப் போடுபோட்டார்.

ஆளும்கட்சிஉறுப்பினர்இந்திரராசா, இதுவரை கோமாவிலிருந்து வந்தவர் போல, முதலமைச்சர் மீது இவ்வளவு பிரச்சினைகள் இருக்கின்றன என்பதை இதுவரை ஏன் சொல்லவில்லை என்று கேள்வி எழுப்பினார். இவை தனக்கு முன்னரே தெரியாது என்றும் கூறினார். மேலும், முதலமைச்சர் விக்னேஸ்வரன், இரா.சம்பந்தன் இடையிலான உறவு ஒட்ட முடியாத ஒன்றல்ல எனவும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சி உறுப்பினர் அகிலதாஸ், தனக்கு அரசியல் பேசத் தெரியாதுஎன்றபீடிகையுடன்தொடங்கிஅரசியலில்வெழுத்து வாங்கினார். ஆளுநர் அலுவலகம் தெரியாத மாகாண சபை உறுப்பினரும் இருந்தார் என்று கூற, உறுப்பினர் சயந்தன் அவர் யார் என்பதைக் கூறுங்கள் என்று கேட்டார். அவைத் தலைவர்அதனைச்சொல்லவேண்டாம்என்றுசைகைசெய்தார். மக்களுக்காக 90 லட்சம் ரூபா இழந்துள்ளேன் என்றும் அவர்குறிப்பிட்டார். அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் முதலமைச்சராக இருந்திருந்தால் சிறப்பாக இருந்திருக்கும் என்றார். இதன்போது ஜெயசேகரன், அவைத் தலைவருக்கு பொன்னாடைபோர்த்தவில்லையேஎன்று, முதலமைச்சருக்கு பொன்னாடைபோர்த்தியதைக் குத்திக்காட்டினார்.

அடுத்து உரையாற்றிய பா.கஜதீபன், இன்னும் சில விடயங்களைச்செய்திருக்கலாம் என்றார். கடவுளே இந்த மாகாணத்தின் முதலமைச்சராக வந்தாலும், எதையும் சாதிக்க முடியும் என்று தான் நினைக்கவில்லை என்று, மாகாணசபையின் தோல்வியை நியாயப்படுத்தினார்.

ஆளும்கட்சிஉறுப்பினர்சிராய்வாஅடுத்துஉரையாற்றினார். மாவட்டத்தில்கூடியவிருப்புவாக்குகள்பெற்றதால்அமைச்சர் பதவிஎதிர்பார்த்தேன். ஆனால்இன்றுஅமைச்சர்பதவிகிடைக்காமல் விட்டதால், கடவுள் காப்பாற்றி விட்டார் என்று கடவுளுக்கு நன்றி கூறுகிறேன் என்றார். சபையில் இருந்த உறுப்பினர்கள் சிரித்தனர். மன்னார் மாவட்ட முன்னாள் ஆயர் இராயப்புயோசப்புக்கும்அவர்நன்றிகூறினார். கூட்டமைப்பில் முரண்பாடுகள் ஏற்பட்டபோது அதனைச் சீர் செய்தவர் ஆயர் என்று கூறினார். சபைக்குக் கூட்டமைப்பாக வந்தோம். ஆனால்தகப்பன்சரியில்லாதகூட்டுக்குடும்பம்சிதைந்ததைப் போலசிதைந்துவிட்டோம்என்றுதகப்பன்நிலையில்வைத்து முதலமைச்சரைச் சாடினார். முதலமைச்சர் தனது சொந்த அரசியல் லாபத்துக்காக கூட்டமைப்பை விமர்சிக்கின்றார் என்று காரசாரமாகக் கூறினார்.

அவரதுஉரைமுடிந்ததும்இறுதியாகஉரையாற்றசிவாஜிலிங்கத்தை அவைத் தலைவர் அழைத்தார். அவரை இறுதியாக அழைத்தமைக்கு இரண்டுகாரணங்கள் உண்டுஎன்றுகூறினார். உள்ளூராட்சி, மாகாணசபை, நாடாளுமன்றம், அரச தலைவர் என்று எல்லாத் தேர்தல்க் களங்களையும் கண்ட ஒருவர் என்று சிரித்துக் கொண்டே கூறினார், அடுத்து கடந்த காலத்தில் சிவாஜிலிங்கம்செங்கோல்உடைப்பதற்குதானும் ஒரு வகையில் காரணம் என்றும் அந்தக் குற்ற உணர்வு தன்னை உறுத்திக் கொண்டிருந்தது என்றும் அதற்காக மன்னிப்புக் கோருவதாகவும் அவைத் தலைவர் தெரிவித்தார். உரையாற்றிய சிவாஜிலிங்கம், முதலமைச்சர் நிர்வாக விடயத்தில் தோற்றுவிட்டார் என்பதையும், அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், பெற்றோலுக்குள்ளால்நெருப்பைபத்திரமாகக் கொண்டு செல்லும் பணியைச் சிறப்பாகச் செய்தார்



சபை அமர்வு முடிந்து உறுப்பினர்கள் வெளியேறுகின்றனர்

என்றும்மெச்சினார். நாடாளுமன்றத்தில்சபாநாயகர் இல்லாதபோது ஓர் அரைமணி நேரம் சபைக்கு தலைமை தாங்கியதாகவும், அதுவே போதும் போதும் என்றாகிவிட்டது என்றும் குறிப்பிட்டு, அந்தப் பணியின் சுமையை வெளிப்படுத்தினார். அவையில்பேசியஉறுப்பினர்கள்எல்லோரும்அவைத்தலைவரின் பணியை பெரிதும் சிலாகித்துப் பேசினார்கள்.

இறுதியாக அவைத் தலைவர் பேசினார். கண்கலங்கியபடி தனது உரையைத் தொடர்ந்தார். அதிகாரிகளின் பணிகளையும்மெச்சினார். அரைவாசிப்பேர்என்றாலும்அடுத்தசபைக்கு வருவார்கள். அவர்கள்முன்னுதாரணமாகச்செயற்படவேண்டும் என்றார். இறுதியில் மாகாணசபைக் கீதத்துடன் சபை அமர்வுமுடிந்தது. இறுதிவரையில்சுமார்20உறுப்பினர்களே அமர்வில்இருந்தனர். அமர்வுமுடிந்ததும், ஒருவருக்குஒருவர் கைலாகு கொடுத்து கட்டியணைத்து தங்கள் பிரிவு உணர்வுகளை வெளிப்படுத்தி வெளியேறினர்.



பிரிவுத் தருணங்கள்

# தமிழ்ப் பிரதேச செயலரை தாக்க முற்பட்டார் பிக்கு

## ஏறாவூரில் நேற்றுப் பரபரப்பு

யாழ்ப்பாணம் ஒக் 24
மட்டக்களப்பு செங்கலடி ஏறாவூர் பற்றுபிரதேசசெயலாளரைபௌத்த பிக்கு ஒருவர் தாக்க முற்பட்ட சம்பவம்பெரும்பரபரப்பைஏற்படுத்தியுள்ளது. மயிலம்பாவெளி பிரதான வீதியில் உள்ள மீள்குடியேற்ற காணியில் இருந்த அரச மரம் ஒன்றின் கிளைகளைவெட்டுவதற்குஅனுமதி வழங்கியதாக கூறி நேற்று மதியம் அவ்விடத்திற்கு செங்கலடி பிரதேச செயலாளர் அழைத்து செல்லப்பட்டுள்ளார். அங்கு நின்ற மட்டக்களப்பு மங்களகராமயவிகாரையின்விகாராதிபதி அம்பிட்டிய சுமனரத்தின தேரர், பிரதேச செயலாளரை மிக மோசமான தகாத வார்த்தைகளால் திட்டியதுடன், அவரை தாக்கவும் முற்பட்டுள்ளார். அதனை அவ்விடத்தில் நின்ற பொலிஸார் தடுத்து நிறுத்தியுள்ளனர். குறித்த சம்பவம் அப்பிரதேசத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மட்டக்களப்பு மயிலம்பாவெளி பிரதான வீதியில் கடந்த 30 வருடங்களாக இராணுவ முகாமாக இருந்த பிரதேசம்தற்போதுவிடுவிக்கப்பட்டு அங்கு காணி உரிமையாளர்கள் குடியேறியுள்ளனர். இந்நிலையில், பொது மக்களின் குறித்த காணியில் இராணுவத்தினர் வைத்து வழிப்பட்ட சிறிய புத்த கோயில் ஒன்றும் அதன் அருகில் பெரிய அரச மரம் ஒன்றும் உள்ளது. குறித்த அரசமரத்தின் கிளைகள் மின்சார கம்பிகளில் மோதிகுடியிருப்போருக்கு அச்சுறுத்தலாகஇருந்துள்ளது. இந்நிலையில், பிரதேச செயலாளர் வனவள பரிபாலன சபையினரின் சட்ட ரீதியான அனுமதிகளைபெற்றுஅரசமரத்தின் சிலகிளைகளை காணி உரிமையாளர்கள் வெட்டியுள்ளனர். அரச மரத்தின் கிளைகளை வெட்டிய காணி உரிமையாளர்களை கைது செய்யுமாறு ஏறாவூர் பொலிஸாரிடம் விகாராதிபதி அம்பிட்டிய சுமனரத்தின தேரர் முறைப்பாடு செய்துள்ளார். இதன்காரணமாகபொலிஸார்அவர்களை கைது செய்துள்ளனர். இந்நிலையில், மட்டக்களப்பு மங்களகராமய விகாரையின் விகாராதிபதி அம்பிட்டியசுமனரத்தினதேரர்அரச மரத்தை வெட்ட அனுமதிவழங்கிய பிரதேச செயலாளரை சம்பவ இடத்திற்கு வருமாறு வற்புறுத்தியுள்ளார். இதேவேளை, அங்குசென்றசெங்கலடிபிரதேச செயலாளர் மீது அம்பிட்டிய சுமனரத்தின தேரர் இவ்வாறு தாக்க முற்பட்டுள்ளார். இதனை அடுத்து சம்பவ இடத்தில் பதற்றமாக சூழல் நிலவியுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.
(8)




## வடக்கு தொண்டர் ஆசிரியர்கள் ஆளுநர் அலுவலகம் முன் போராட்டம்

யாழ்ப்பாணம் ஒக் 24
வடமாகாணத்தில்உள்ளபாடசாலைகளில் பல வருடங்கள் தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றி வரும் ஆசிரியர்கள் தமக்குநிரந்தநிஜமனம்வழங்குமாறுகோரிநேற்றுவடமாகாண ஆளுநர் அலுவலகத்திற்கு முன்னால் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த பல வருடங்களாக நாம் தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றி வருகின்றோம். இருந்தும் எங்களுடைய நியமனங்கள் பல தடவைகள் கட்டம் கட்டமாக கொடுக்கப்பட்ட போதும்எமதுநிஜமனாங்கள்புறக்கணிக் கப்பட்டுள்ளது.

அதற்கானகாரணங்கள்எதுவும் தெரிவிக்கப்படவில்லை. இதனால் வடமாகாணம் தழுவி 288 பேர் புறக்கணிக்கப்பட்டுள்ளோம். ஆளுநர்அலுவலகம்முன்னபலபோராட்ங்களை செய்திருந்தோம், ஆனால்எங்களுக்குளந்ததீர்வும்கிடைக்கபெறவில்லை. எனவே நாங்கள் எதிர்காலத்தில் தொடர்ச்சியாக போராட்டத்தினைமேற்கொள்ளவுள்ளதாக போராடடத்தில் ஈடுபடடவர்கள் தெரிவித்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டிருந்த ஆசிரியர்களின் பிரதிநிதிகளை அழைத்த வடக்கு மாகாண ஆளுநர், குறித்த நியமன விடயத்தில் விரைவில் நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதி அளித்ததை தொடர்ந்து தமது போராட்டத்தை மதியத்துடன் கைவிட்டனர்.

## திருவாசக முற்றோதல்

நாவற்குழி திருவாசக அரண்மனையில் வழமையாக பௌர்ணமி தினங்களில் நடைபெற்று வருகின்ற திருவாசக முற்றோதல் சைவப் பிரகாச பேரவையின் அனுசரணையுடன் இன்று காலை 8 மணி முதல் நடைபெறவுள்ளது.

## சொற் பொழிவு

ஸ்டான்லி வீதியில் அமைந்துள்ள யாழ். முற்றத்தில் வாழ்நாள் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை 'முதியவர்களுக்கு என்று வடக்கில் மருத்துவமனை அமைக்க வேண்டும்' என்ற கருப்பொருளில் இன்று காலை 10 மணிக்கு உரையாற்றவுள்ளார்.
(ம)

## முருகமூர்த்தி ஆலயத்திறப்பு விழா

கொடிகாமம், ஒக். 24
நுணாவில்குளத்தைச்சீரமைப்பதற்கான ஆரம்பநிகழ்வும் முருக மூர்த்தி ஆலய திறப்பு விழாவும் நேற்றுமுன்தினம் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் விவசாய பிரதி அமைச்சர் அங்கயன் இராமநாதன், ஆளுனரின் செயலாளர் இ. இளங்கோவன், வடமாகாண சபை அவைத்தலைவர் சி. வி. கே. சிவஞானம், சாவகச்சேரி பிரதேசசபைத்தவிசாளர் க. வாமதேவன், நகர சபை சபைத் தவிசாளர் இ. சிவமங்கை, நகர சபை உறுப்பினர்கள் பிரதேச சபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

நுணாவில் குளம் ஆரம்பித்து வைக்கப்பட்ட நிகழ்வில் விவசாயம் செழிப்படைய வர்ண பகவானை துதித்து 41 பானைகளில் பொங்கலிடப்பட்டது. நுணாவில் மக்களின் நலன் கருதிபுலம்பெயர்நாட்டில்வசிக்கும்கணேசமூர்த்திகபிலன் வழங்கிய 18 மில்லியன் ரூபா நிதியிலிருந்து இர்ண்டரை கிலோமீற்றர்தூரமுள்ள முருகமூர்த்திஆலயவீதியும்நுணாவில் குளமும் சீரமைப்புச் செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.
(ம-9,159)



## வீதிகளைச் சீரமைக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 24
மானிப்பாய்பிரதேசமருத்துவமனைக்குச்செல்லும் இரண்டு வீதிகளைச் சீரமைத்துத் தருமாறு வலி. தென்மேற்குப் பிரதேச சபையிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

மானிப்பாய்பிரதேசமருத்துவமனையின் நோயாளர் நலன்புரிச் சங்கத்தாலேயேஇந்தக்கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் நோயாளர் நலன்புரிச் சங்கத்தால்வலி. தென்மேற்குப் பிரதேசசபைக்குஅனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மேலும்குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

எமதுவைத்தியசாலைக்கு நாளொன்றுக்கு 350-550 வரையான நோயாளர்கள் வெளி நோயாளர் பிரிவுக்கும்ஆயிரக்கணக்கான கற்பிணிகள், குழந்தைகள் மாதாந்தக் கிளினிக்குகளுக்கும் வருகிறார்கள். இவர்கள் அனைவரும் மருத்துவமனையின் முன்வீதி மற்றும் பின்வீதிஊடாகவேபெரும் சிரமப்பட்டுவருகிறார்கள், போகிறார்கள். அத்துடன் அவசர நோயாளர் காவு வண்டிகள், மருத்துவர்களின்வாகனங்கள்என்பனவும் பெரும் சிரமத்தின் மத்தியிலேயே வந்துபோகின்றன. வெகுவிரைவில் எமது மருத்துவமனையில் நோயாளர் விடுதி, மருத்துவர் விடுதி என்பன அமைய இருக்கின்றன. அவையும் அமைக்கப்பட்டால்நோயாளர்வரவுஎண்ணிக்கை இன்னும் பன்மடங்கு அதிகரிக்கும். எனவே நிலைமையைக் கருத்தில் கொண்டு வீதிகளை சிறந்த முறையில் அமைத்துத் தருமாறு கோரிக்கை விடுக்கின்றோம்என்றுள்ளது. (ம-115)



## வீதிக்குறியீடுகளை மீண்டும் வரையும் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 24
முதன்மை வீதிகளில் அழிந்திருக்கும் வீதிக் குறியீடுகளை மீளவும் வரையும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்தது.

கே. கே. எஸ். வீதி, பருத்தித்துறை வீதி, மானிப்பாய் வீதி, பலாலி வீதி, ஏ-9 முதன்மை வீதிகளில் வரையப்பட்ட வீதிக் குறியீடுகள் அழிந்தும் மங்கியும் காணப்படுகின்றன. இதையடுத்தே வீதிக் குறியீடுகளை மீண்டும் வரையும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
(ம-17)

## தீபபூசை வழிபாடுகள்

யாழ்ப்பாணம், ஒக். 24
நீர்வேலிஅரசகேசரிப்பிள்ளையார் ஆலயத்தில் இன்று புதன்கிழமை சிறப்பு தீப பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

இரவு 7 மணிக்கு ஆரம்பமாகும் சிறப்பு வழிபாடுகளைத் தொடர்ந்து தீப பூசை வழிபாடுகள் இடம் பெறும்என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
(ம-17)


## கடலுணவுகளின் விலைகள் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 24
யாழ்ப்பாணக் குடாநாட்டில் கடலுணவுகளின் விலைகள் அதிகரித்துள்ளன. குறிப்பாக இறால், நண்டு, கணவாய் பேர்ன்ற கடலுணவுகள் அதிகரித்த விலைக்கு விற்கப்படுகின்றன.

நகரை அண்டிய குருநகர், நாவாந்துறை, கொட்டடி, பாசையூர்போன்றமீன்விற்பனைச் சந்தைகளில் இந்தக் கடலுணவுகளுக்கு பற்றாக்குறை நிலவுவதோடு அவற்றின் விலைகள் அதிகரித்தும் காணப்படுகின்றன. நண்டு, இறால், கணவாய் போன்ற கடலுணவுகள்தெற்குக்குஅதிகளவில் ஏற்றுமதி செய்யப்படுவதால்தான் அவற்றுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என்று மீனவர்கள் தெரிவித்தனர்.
(ம-17)



## மரண அறிவித்தல்கள்



# ஐயம்பிள்ளை சோதிநாதன்

காரைநகர், சக்கலாவோடையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஐயம்பிள்ளை சோதிநாதன் கடந்த (19.10.2018) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை - செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் செல்வரத்தினம், கனேசு, தவமணி, காலஞ்சென்ற ஏரம்பமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - சரஸ்வதி தம்பதிகளின் மருமகனும் கனகமலரின் பாசமிகு கணவரும் சிவரூபி, கோபிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவராஜாவின் அன்பு மாமாவும் லக்ஷிகா, லக்ஸ்மணன், லக்ஷனா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.10.2018) வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சக்கலாவோடை,**
**காரைநகர்.**

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

பிறப்பு
10 . 02 . 1942



இறப்பு
22 . 10 . 2018

# திருமதி சற்குணமலர் இராசலிங்கம்

ஆனந்தா வீதி, மானிப்பாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சற்குணமலர் இராசலிங்கம் 22.10.2018 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கோவிந்தர் - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராசலிங்கத்தின் அன்பு மனைவியும், சுபாஸ்கரன் (பிரான்ஸ்), தபோநிதி, தயாபரன் (இந்தியா), மனோகரன், சாரதாநிதி, ஹரிகரன், காலஞ்சென்ற பிரபாகரன் மற்றும் றாகிநிதி ஆகியோரின் அன்புத் தாயாரும், யோகேஸ்வரி (பிரான்ஸ்), சிறீஸ்காந்தராஜா, மரியரீட்டா (இந்தியா), பாலேஸ்வரி, மதிவாணி, ஸ்ரீரங்கன் ஆகியோ-ரின் அன்பு மாமியாரும், நீதிராசா, தமிழினி, மதனவேல், பிரதீபா, அமீறா (பிரான்ஸ்), சங்கீர்த்தனன், குயிலினி, பிரதீபன், டிலோஜினி, சதுர்ஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.10.2018) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார்.உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஆனந்தாவீதி,**
**மானிப்பாய்.**

(CS/26780)(11,17)

தகவல்
குடும்பத்தினர்.

பிறப்பு
28 . 10 . 1957



இறப்பு
21 . 10 . 2018

# பொன்னுத்துரை தருமராசா

**(தர்மு/ பெரிய வபா)**

முதலாம் வட்டாரம் மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், 80/3 திருவையாறை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை தருமராசா (தர்மு/பெரியவபா) 21.10.2018 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் காந்தமலர் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற இரத்தினம் மற்றும் மங்கையற்கரசி தம்பதிகளின் மருமகனும், யோகேந்திரா தேவியின் (வவா) அன்புக் கணவரும், விஜிந்தன், சயிலேந்திரன் (கிளிநொச்சி), சைலினி (ஜேர்மன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கஜேந்தினி (விவசாய ஆராய்ச்சி நிலையம்), ஞான வேல்குமரன் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும், கிருசாந்தின் அன்புத் தாத்தாவும், குணரட்ணம், இரத்தினலிங்கம் ஆகியோரின் அன்புத் தாய்மாமனும் சங்கீதா, சரிதா, சகிதா, தனுசா, சரிதன் ஆகியோரின் பெரியப்பாவும் யோகேஸ்வரன், ஞானேஸ்வரன் மற்றும் சுசிலாதேவி, பரமேஸ்வரன், நாகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (24.10.2018) புதன்கிழமை நடைபெற்று முற்பகல் 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக இரணைமடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அம்பாள்குளம்,**
**திருவையாறு.**

(AKN/565)(11,17)

தகவல்
பொ.சதானந்தராஜா (சின்ன வபா)
(ஈஸ்வரா எக்ஸ்பிரஸ் உரிமையாளர்)

# அந்தோனி சிறில் சுகந்தரன்

(ஓய்வு பெற்ற அதிபர், யா/ நவாலி சென்.பீற்றர்ஸ், யா /ஆனைக்கோட்டை, றோ.க.த.க. பாடசாலை, J.P. மத்தியஸ்தர்சபை உறுப்பினர், முதியோர் சங்க செயலாளர்)



தோற்றம்
09.09.1948

மறைவு
22.10.2018

நவாலியைப் பிறப்பிடமாகவும், சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனி சிறில் சுகந்தரன் கடந்த (22.10.2018) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார்காலஞ்சென்றவர்களான அந்தோனி சிறில் (அதிபர்) தவமணி தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான ஆசீர்வாதம் மரியாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும் சிறிய புஷ்பத்தின் அன்புக்கணவரும் யூட் திலீபனின் (செலிங்கோ காப்புறுதி நிறைவேற்று அதிகாரி, யாழ்ப்பாணம்) அன்புத்தந்தையும் ருலக்ஸ்ரியாவின் அன்பு மாமனும் செவ்ரினின் அன்புப் பேரனும் றெஜினா, திரேசா (ஓய்வு பெற்ற ஆசிரியர், உடுவில் மான்ஸ்), றீற்றா, பெஞ்சமின் (ஓய்வு பெற்ற நில அளவையாளர்), மத்தியூஸ் (முன்னாள் UNDP வட பிராந்திய மிதிவெடிப்பிரிவு உத்தி யோகஸ்தர்), சாந்தி கிறேஸ் (ஆசிரியர், யா/ நவாலி அட்டகிரி சைவ வித்தி) ஆகியோரின் அன்புச்சகோதரரும் காலஞ்சென்றவர்களான தெசராசசிங்கம், ஆசீர்வாதம் ஹென்றி, (J.P.) மரியநாயகம், மரியசம்பூரணம், வொன்சஸ்லஸ் மற்றும் இராஜநாயகி, கொறற்றி (கில்டா ரீச்சர்), மரியலீனஸ் (சாள்ஸ் சவுண்ட்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் டேவிட் பெடினன் (டேவிட் புடைவையகம்), மரீனா தம்பதியரின் சம்மந்தியும் ஜெயச்சந்திரன் (ஆஸ்திரேலியா), வசந்தி (சுவிஸ்), சுகந்தி (கனடா), ஜெயக்குமார் (ஆசிரியர், வட்டு மத்திய கல்லூரி), நிர்மலா, விக்டர் சிறில் (பொறியியலாளர், கட்டார்), மேரிடயானா (ஆசிரியை, யா/ ஆனைக்கோட்டை அ.த.க.க பாடசாலை), சௌதினி ஜோய் (ஆசிரியை, விசுவமடு மகாவித்தியாலயம்), பியேஜின் (சிலோன் தியேட்டர்) ஆகியோரின் அன்புமாமனும் சன்றோனியா, கிருபாநிதி (யா/ யாழ்ப்பாணக்கல்லூரி), பிறின்ஸ் ஜோன்(MLT), றெக்ஸிபிறின்ஸ், றிச்சாட் பிறின்ஸ்) பிறின்சியாலீமா ஆகியோரின் அன்புப்பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி தூய அந்தோனியார் ஆலயத்தில் இன்று (24.10.2018) புதன்கிழமை பி.ப. 2 மணியளவில் நடைபெற்று நல்லடக்கத்திற்காக சுன்னாகம் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
மகன் (077 9788 727)

காலபோக செய்கைக்காக

# கட்டுக்கரைக்குளத்தின் நீர் இன்று திறந்து விடப்படுகிறது

**மன்னார்,ஒக் .24**

**மன்னாரின் பிரதான குளமான கட்டுக்கரைக்குளத்தில் போதிய நீர் இருப்பதால் இன்று புதன் கிழமை முதல் 2018/2019 ஆம் ஆண்டுக்கான காலபோக நெற்செய்கைக்காக கட்டுக்கரைக்குளத்திலிருந்து நீர் திறந்து விடப்படுகின்றது என காலபோக நெற்செய்கை தொடர்பான விவசாயிகளின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**



இது தொடர்பாக மன்னார் மாவட்ட செயலர் சீ.ஏ.மோகன்ராஸ் தலைமையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை உயிலங்குளம் கட்டுக்கரைக்குள விவசாயிகளின் ஒன்றுகூடல் நடைபெற்றது.
இக்கூட்டத்தில் கட்டுக்கரைக்குளம் அமைப்பின் பிரதிநிதிகள், நீர்பாசன எந்திரிகள், கமத்தொழில் திணைக்கள அதிகாரிகள் உட்பட விவசாயிகள் எனப் பலர் இதில் கலந்து கொண்டனர்.
இந்த க்கூட்டத்தில் நெற்செய்கை செய்ய வேண்டிய காலம், எந்த இன நெல் விதைப்பு செய்யப்படல் வேண்டும், நெற் செய்கைக்கான தண்ணீர் கட்டுக்கரைக்குளத்திலிருந்து திறந்து விடப்படும் காலங்கள் போன்ற முக்கிய விடயங்கள் ஆராயப்பட்டு இதற்கான தீர்மானங்களும் எடுக்கப்பட்டன.
வழமைபோன்று மன்னார் கட்டுக்கரைக்குளத்தின் கீழ் 24ஆயிரத்து 438 ஏக்கர் நெற்செய்கைக்கான நிலங்கள் காணப்படுவதால் இவை அனைத்திலும் நெற்செய்கை பண்ணுவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
இதற்கமைய தற்பொழுது மன்னார் பிரதான குளமாகிய கட்டுக்கரைக் குளத்தில் 9.4 அடி தண்ணீர் காணப்படுவதால் நெற்செய்கைக்காக இன்று புதன்கிழமை முதல் திறந்து விடுவதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இம்முறை நெற்செய்கையானது 2, 21/2, 3, 31/2 மாத நெற்செய்கையே மேற்கொள்ள வேண்டும் எனவும், 2, 21/2 மாத நெற் செய்கையின் இறுதி நாள் நவம்பர் 30 அன்றும் 3, 31/2 மாத நெற் செய்கையின் இறுதி நாள் நவம்பர் 13 ஆம் திகதி ஆக இருக்க வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
அத்துடன் இதற்கான காப்புறுதி செய்யப்படும் கடைசி நாள்களாக ப்யிர் செய்யப்படும் கடைசி நாள்களே இறுதி நாளாகவும் இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.
2018 ஆம் ஆண்டு சிறுபோக நெற் செய்கையினால் காலதாமதமாகும் வாய்க்கால்களுக்கு 2018/2019 ஆம் ஆண்டு பெரும்போக தண்ணீர் விநியோகத்தை காலதாமதமாகும் காலத்துக்கேற்றவாறு நீடித்து வழங்குவது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.(60)



## இலவச மருத்துவ முகாம்

முல்லைத்தீவு ,ஒக் .24
முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் உள்ள திம்பிலி, கர்ணன் குடியிருப்பு ஆகிய இரு கிராமங்களில் மருத்துவமுகாம் சேவையில் 120 பேர் மருத்துவ சேவைகளை பெற்றுக் கொண்டுள்ளனர்.
பொது மருத்துவசேவையினைப் பெற்றவர்களில் 12 பேருக்கு மேலதிக சிகிச்சையை மேற்கொள்ள வசதியாக போதனா மருத்துவமனைக்கான கடிதங்கள் வழங்கப்பட்டன.
பல் மருத்துவம் , கண்சிகிச்சை,என்பன மேற்கொள்ளப்பட்டுள்ளது .தெரிவு செய்யப்பட்ட 25 குடும்பங்களுக்கு ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. அத்தோடு வருகைதந்தவர்களுக்கு மதிய உணவும் வழங்கப்பட்டது.
5 பொது மருத்துவர்கள் , 2 பல் மருத்துவர்கள், ஒரு கண் மருத்துவர் , ஒரு தாதி, ஒரு உதவியாளர், 2 மருந்தாளர், 4 மருத்துவப்பீட மாணவர்கள் உட்பட 52 பேர் சேவைப்பணிகளில் கலந்து கொண்டனர். (222)

## நோயாளர் விடுதி திறந்துவைப்பு



வவுனியா.ஒக் .24
வவுனியா பூவரசங்குளம் மருத்துவமனையில் வட மாகாணசபையின் குறித்தொதுக்கப்பட்ட நிதியில் அமைக்கப்பட்ட நோயாளர் விடுதி நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது.
சுமார் 20 மில்லியன் ரூபா பெறுமதியில் ஆண், பெண் இருபாலாரும் தங்கிச் சிகிச்சை பெறக்கூடியதாக நோயாளர் விடுதி அமைக்கப்பட்டுள்ளது.
பிரதி பிராந்திய மாகாண சுகாதார மருத்துவ அதிகாரி எஸ். மகேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டிருந்த வட மாகாண சுகாதார அமைச்சர் ஞா.குணசீலன் கட்டடத்தினை திறந்துவைத்திருந்தார்.
இதன்போது வட மாகாண முன்னாள் சுகாதார அமைச்சரும் வட மாகாணசபை உறுப்பினருமான ப.சத்தியலிங்கம், வட மாகாணசபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் தலைவர் து. நடராஜசிங்கம், பிரதேசசபை உறுப்பினர் குகதாஸ், மருத்துவமனை பொறுப்பு மருத்துவ அதிகாரி மருத்துவக் கலாநிதி திருவேகரன் ,வவுனியா மாவட்ட மருத்துவமனையின் பணிப்பாளர் கே.செந்திர்பதிராஜா எனப் பலரும் கலந்து கொர்ண்டிருந்தனர். (110)



## பரிசளிப்பு நிகழ்வு

முல்லைத்தீவு,ஒக் .24
முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திற்குட்பட்ட தேராவில் தமிழ் வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வு இடம்பெற்றுள்ளது .
நிகழ்வில் கலந்துகொண்ட அமைச்சர் காதர் மஸ்தான் பாடசாலை அதிபரின் கோரிக்கைக்கு அமைவாக பாடசாலைக்குஒருசெயற்பாட்டுஅறையைநிர்மாணிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்து மிக விரைவில் செயற்பாட்டு அறை ஒன்றை பெற்றுத் தருவேன் எனத் தெரிவித்துள்ளார்.
தேராவில் தமிழ் வித்தியாலயத்தின் அதிபர் கே.பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதியமைச்சர் காதர் மஸ்தான் மற்றும் புதுக்குடியிருப்பு கோட்டக் கல்விப் பணிப்பாளர் உட்பட உயரதிகாரிகள், பெற்றோர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர் . (222)

## வரலாறை மாற்றிய மாணவி



1990ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட வவுனியா வடக்கு கல்விவலயத்திற்கு உட்பட்ட நொச்சிகுளம் முத்துமாரி வித்தியாலயம் புலமைப்பரிசில் பரீட்சையில் இம்முறை முதல் தடவையாக சித்தியை பெற்றுள்ளது. புஷ்பராஜ் குமுதினி என்ற மாணவி நடைபெற்று முடிந்த புலமைப் பரிசில்பரீட்சையில் 168 புள்ளிகளைப் பெற்றுச் சித்திபெற்றுள்ளார்.
குறித்த பாடசாலையின் வரலாற்றில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த முதலாவது மாணவியாக இம்மாணவி காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.
நொச்சிகுளம் பகுதி போரினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட பின்தங்கிய கிராமமாகக் காணப்படுகின்ற நிலையில், பாடசாலையின் அதிபர் சி.பாக்கியநாதனின் வழிகாட்டலில் ஆசிரியர் திருமதி அ.ராஜ்குமாரது முயற்சியின் பயனாகத் தனியார் வகுப்புகளுக்குச் செல்லாமல் சித்தி பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்ந்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.
குறித்த பாடசாலையில் இரு மாணவர்கள் இம்முறை பரீட்சையில் தோற்றியிருந்தனர். (110)

## ஆங்கில தினப்போட்டியில் இருவருக்கு வெற்றி



மன்னார்,ஒக் .24
கொழும்பில் இடம் பெற்ற தேசிய மட்ட ஆங்கில தினப் போட்டியில் கலந்து கொண்ட மன்னார் புனித சவேரியார் பெண்கள் தேசிய கல்லூரி மாணவிகள் இருவர் முதலாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெற்றுள்ளனர். கொழும்பு தேர்ஸ்டன் கல்லூரியில் அண்மையில் ஆங்கில தினப் போட்டிகள் இடம்பெற்றன.
ஆங்கில கவிதைப் போட்டியில் கலந்து கொண்ட மன்னார் புனித சவேரியார் பெண்கள் தேசிய கல்லூரி மாணவி செல்வி நயோலின் அப்றியானா குபேரகுமார் 1 ஆம் இடத்தினையும்,ஆங்கிலம் சொல்வளம் போட்டியில் கலந்து கொண்ட மன்னார் புனித சவேரியார் பெண்கள் தேசிய கல்லூரி மாணவி செல்வி. சேவியர் கிறிசேரா 3 ஆம் இடத்தினையும்,தேசிய மட்ட விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டி திறமைச் சித்தியும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.(56)



## கற்றல் உபகரணங்கள் வழங்கல்

வவுனியா .ஒக் .24
தமிழ்விருட்சம் அமைப்பின் வேண்டுகோளுக்கிணங்க அவுஸ்திரேலியாவில் வசிக்கும் மருத்துவக் கலாநிதி ரி.கோகுலன், மருத்துவ கலாநிதி ச.ஹரிகரன் ஊடாக 43 பிள்ளைகளுக்கான கற்றல் உபகரணங்கள் கடந்த 20ஆம் திகதி விஜயதசமி நன்நாளில் வழங்கிவைக்கப்பட்டது.
இந்த நிகழ்வுடன் ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 173 புள்ளிகளை எடுத்த மாணவி கவிசனாவையும் கிராம அபிவிருத்தி சங்கம் மதிப்பளித்தது. (110)



## உதவி வழங்கல்

வவுனியா.ஒக் .24
வவுனியா ஓமந்தை வேப்பங்குளம் கிராமத்தில் வசிக்கும் 53 வயதுடைய புனிதராசா இந்திராதேவி நோயினால் பாதிக்கப்பட்டு தனது ஒரு காலை இழந்து உறவினர்களுடன் வாழ்ந்து வருகின்றார்.
இவரின் நிலையை அறிந்த வன்னிமண் நற்பணி மன்றத்தினர் கனடாவில் வசிக்கும் திவ்யா உமையாள் துஷ்யந்தனிடம் விடுத்தவேண்டுகோளுக்கிணங்க ஒரு மாத்திற்கு தேவையான உலர் உணவுகளும், பால்மாவும் அண்மையில் வழங்கிவைக்கப்பட்டன. (110)

## வவுனியா பொது நூலகத்தில் நவராத்திரி நிகழ்வு

வவுனியா.ஒக் .24
வவுனியா பொது நூலகத்தில் நவராத்திரி நிகழ்வுகள்கடந்த 19 ஆம் திகதி நகரசபைத் தவிசாளர் இ. கௌதமன் தலைமையில் இடம்பெற்றது.
சிறப்புற இடம்பெற்றன. நகரசபை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.



## சிறுவர் தின நிகழ்வு



வவுனியா .ஒக் .24
வவுனியா நெழுக்குளம் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட சாம்பல் தோட்டத்தில் சிறுவர் தின நிகழ்வுகள் நேற்று முன்தினம் இடம்பெற்றன.
கிராம அபிவிருத்திச் சங்கம் , மாதர் அமைப்பு ஆகியவற்றின் அனுசரணையோடு இடம்பெற்ற இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மறுவாழ்வு, மீள்குடியேற்ற வடக்கு அபிவிருத்தி பிரதி அமைச்சருமான காதர் மஸ்தான், மாணவர்கள், பெற்றோர்கள், மற்றும் அரச அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் "சிறுவர்களின் எதிர்காலத்தை ஒளிமயமாக்குவோம்" எனும் தலைப்பில் பிரதி அமைச்சர் சிறப்புரையாற்றினார்.(222)

# தேர்தலில் ஆண் பங்களிப்பு எதுவோ அதுவே பெண்களுக்கும் வேண்டும்

## தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர் இரட்ண ஜீவன் எச் கூல் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம் ,ஒக் .24**
**ஆண் பங்களிப்பு எதுவோ அதுவே பெண்களிற்கும் வேண்டும். எங்கள் தொடர்பில் எது நடக்கின்றதோ அங்கு நாம் இருக்க வேண்டும். மாகாண சபையின் புதிய சட்டத்தில் பெண்களிற்கும் போதிய இடமுண்டு.**

ஆனால் பழைய சட்டம் என்றால் முடியாது. உள்ளூராட்சியில் 25 வீதம் பெண்களை நியமித்துள்ளனர். பெண்களும் கருத்துக் கூற வேண்டும். அரசியலில்பெண்கள்சிறுபான்மையினர். ஏனெனில் 50 வீத பெண்கள் உள்ள போதும். 25 வீதம் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. எனத் தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர் ரட்ண ஜீவன் எச் கூல் தெரிவித்துள்ளார் .
தேர்தல்கள் செயலகமும் தேர்தல் வன்முறைக் கண்காணிப்பகமும் இணைந்து உள்ளூராட்சி மன்றங்களில்அங்கம்வகிக்கும்யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட பெண் உறுப்பினர்களிற்கான கருத்தரங்கு நேற்று முன் தினம் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.
இதில் தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர் ரட்ணஜீவன் எச்கூல், தேர்தல் ஆணையாளர் மொகமட், யாழ்ப்பாணம் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் ரி.அகிலன், கிளிநொச்சி மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் ஆர். கே. அமல்ராஜ், ஆகியோருடன் பாக்கியசோதி சரவணமுத்து. உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.
தேர்தலில் பெண்களின் வகிபாகம் தொடர்பில் இரட்ண ஜீவன் கூல் உரையாற்றுகையில் ,
கடந்த தேர்தலில் நல்லூரில் கிறிஸ்தவர் கேட்கின்றார் அவருக்கு போட வேண்டாம் என்றனர் . இவை தவறு 73 நாடுகளில் அதே பால் உறவிற்கு தடை உள்ளது. எனது நம்பிக்கையும் மதரீதியில் இது தவறு என்றே கூறுகின்றது.
ஆனால் தனிக் கருத்தை திணிக்க விரும்பவே கூடாது. பெண்கள் தமது இட ஒதுக்கீட்டை நாடாளுமன்றில் கோர வேண்டும். ஆனால் அது இடம் பெறுகின்றதா? அமெரிக்காவிலும் ஒரு காலத்தில் பெண்கள் தமக்கான வாக்குரிமை அரசியல்பிரதிநிதித்துவம் போன்றவற்றை கோரி போராடிய வேளையில் ஆண்களால் தாக்கப்பட்டனர். பொலிஸாரும் ஆண்களாகவே இருந்த நிலையில் மறுபக்கம் பார்த்தவாறு நின்றனர்.
இந்த நிலமை அமெரிக்காவில் எத்தனையோ ஆண்டுகளிற்கு முன்னர் காணப்பட்டாலும் இலங்கையில் இன்று வரை தொடர்கின்றது - என்றார். இதன்போது பாக்கியசோதி சரவணமுத்து மற்றும் உதவித் தேர்தல் ஆணையாளர் மொகமட் ஆகியோரும் உரையாற்றினர். (105)

## குறைபாடுகளை நிவர்த்தி செய்ய கோரிக்கை

கொடிகாமம்,ஒக். 24
கைதடியில் அமைந்துள்ள பொதுச் சந்தையில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து தருமாறு அங்கு வியாபாரம் செய்வோர் சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளரை கோரியுள்ளனர்.
சந்தையில் அதிகளவு வியாபாரிகள் உள்ளதால், இட நெருக்கடி ஏற்படுகிறது எனவும், சந்தைக் கூரை உயரமாக உள்ளதால் காலை ,மாலை வேளைகளில் வெயிலின் தாக்கமும் மழை காலங்களில் நான்கு புறங்களிலும் மழைத் தூவானம் கட்டடத்தினுள் விழுவதால், விற்பனைப் பொருட்கள் பழுதடைகின்றன.
இத்துடன் சந்தையிலுள்ள மலசலகூடம் நீர் வசதியின்றி காணப்படுவதால் அதனைப் பயன்படுத்த முடியவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளனர். (159 -9)



## ரிஸாட் பதியுதீனை கொலை செய்யச் சதி பொலிஸ்மா அதிபரிடம் முறைப்பாடு

மன்னார் .ஒக்.24
அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும், கைத்தொழில் வர்த்தக அமைச்சருமான ரிஸாட் பதியுதீனைக் கொலை செய்வதற்கான சதித்திட்டம், ஊழல் ஒழிப்பு முன்னணியின் பணிப்பாளர் எனக் கூறும் நாமல் குமாரவினால் அம்பலத்துக்கு வந்தது. இதன் பின்னணியில், பொலிஸ் திணைக்களம், தீவிர விசாரணைகளை நடத்தி உண்மைகளைக் கண்டறிந்து, உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு பொலிஸ் மா அதிபரிடம்,அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் நேற்றுச் செவ்வாய்க்கிழமை முறைப்பாடு ஒன்றை மேற்கொண்டுள்ளது.
அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தவிசாளரும் பிரதி அமைச்சருமான அமீர் அலி, கட்சியின் செயலர் எஸ்.சுபைர்தீன், நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.இஸ்மாயில், மூத்த சட்டத்தரணி ருஸ்டி ஹபீப் மற்றும் மேல்மாகாண சபை உறுப்பினர் ஏ.ஜே.எம்.பாயிஸ் ஆகியோர் நேற்றுக் காலை, பொலிஸ் தலைமையகத்துக்குச் சென்று, இந்த முறைப்பாட்டை பதிவு செய்தனர்.
இது தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து தெரிவித்த பிரதி அமைச்சர் அமீர் அலி கூறியதாவது:
இந்தச் சதி முயற்சியை நங்கள் மிகவும் பாரதூரமாகக் கருதுகின்றோம். தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவிடவும். சட்டமும் ஒழுங்கும் அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டாரவிடமும் இது தொடர்பில் நாங்கள் ஏற்கனவே எடுத்துரைத்துள்ள போதும், அரசு அமைச்சர் ரிஸாட் பதியுதீனின் பாதுகாப்பை இன்னுமே பலப்படுத்தாது இருக்கின்றது -என்றார். (56)

## சொகுசு வாகனத்தில் ஆடு கடத்தியவர் கைது

சொகுசு வாகனத்தில் ஆடு ஒன்றை களவாடிச் சென்றிற நபர்கையும் களவுமாக செட்டிக்குளம் பொலிஸாரிடம் மாட்டிக் கொண்டார். அவரிடம் விசாரணை மேற்கொண்ட போது, செட்டிகுளம் முசல்குத்தி வீதியில் உள்ள நபர் ஒருவருடைய ஆட்டை அதன் மேய்ச்சல் இடத்திலிருந்து பிடித்துக்கொண்டு வந்திருப்பது தெரிய வந்துள்ளது. இவர் செட்டிகுளம் பிரதேசத்திலுள்ள ஆண்டியா புளியங்குளத்தை சேர்ந்தவர் என்பதுடன், இவர் களவாடிய ஆடும் அதைக் கொண்டு செல்ல பயன்படுத்திய சொகுசு வாகனமும் தடுத்துவைக்கப்பட்டுள்ளது. (222)

## கிளிநொச்சி மாவட்ட முதியோர்தின நிகழ்வு

கிளிநொச்சி,ஒக் .24
கிளிநொச்சி மாவட்ட முதியோர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவாளர் மண்டபத்தில் காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

# வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஒக் 24
வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வாசிப்பு பழக்கத்தை மேம்படுத்துவதற்கு பல்வேறு நிகழ்வுகளை நடத்தி வருவதாக யாழ்ப்பாணப் பொது நூலக நிர்வாகம் தெரிவித்துள்ளது. இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது.
தற்போது வாசிப்பு மாதம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. யாழ்ப்பாண பொது நூலகத்தின்ஏற்பாட்டில்வாசிப்புத்திறனை மேம்படுத்துவதற்குப் பல்வேறு செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. நடமாடும் நூலக சேவை ஒவ்வொரு பிரதேசமாக வலம் வருகிறது. பாடசாலை மற்றும் பொது இடங்களுக்கு முன்னால் நடமாடும் நூலக சேவை நடைபெறுகிறது. வாகனத்தில் உள்ள புத்தங்கங்களை வாசகர்கள் வாசிக்க முடியும். பிரதேசத்தில் உள்ள நூல் நிலையங்களையும் இணைத்து இந்த நடமாடும் நூலக சேவை நடைபெற்று வருகிறது.
சிறுவர்களின் ஆற்றலை மேம்படுத்துவதற்காக கடந்த 20 ஆம் 21 ஆம் திகதிகளில்சிறுவர்பகுதியில்சிறுவர்களுக்கான வர்ணம் தீட்டுதல், பேச்சுப் போட்டிகள் கட்டுரைப்போட்டிசித்திரப்போட்டிஎன்பன நடைபெற்றன. இதில் 350 இற்கும் மேற்பட்ட சிறுவர்கள் பங்குபற்றினர்.
கடந்த 23 ஆம் திகதி உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் இடம்பெற்றது. அந்த நிகழ்வில் 800 மாணவர்களும்ஆசிரியர்களும்கலந்து கொண்டனர். நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் காலை 10 மணி முதல் மாலை 4:30 மணிவரை புதிய நூல்களுக்கான புத்தகக் கண்காட்சி நடைபெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (7)



# மாகாண சபை கீதத்துக்கு இறுதி அமர்வில் அனுமதி

யாழ்ப்பாணம், ஒக். 24

வடக்குமாகாணசபைக்கென உருவாக்கப்பட்ட கீதத்துக்கு நேற்று அனுமதி வழங்கப்பட்டது. இருப்பினும் சிங்கள மொழி பெயர்ப்பு வழங்கப்படவில்லை என்பதால் சபை அமர்வில் சர்ச்சை ஏற்பட்டது.

வடக்குமாகாணசபையின் இறுதிஅமர்வுநேற்று இடம்பெற்றது. சபையில் அவைத் தலைவர் அறிவிப்பைத் தொடர்ந்து, வடக்குமாகாணசபைக்கென உருவாக்கப்பட்டகீதம்சபையின்அனுமதிக்காகச்சமர்பிக்கப்பட்டது. மாகாணசபைக்கீதத்தின் எழுத்துவடிவம் உறுப்பினர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டிருந்தது. அமர்வில், கீதம் ஒலிக்கவிடப்பட்டது. சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட எல்லோரும் எழுந்து நின்று மரியாதை செலுத்தினார்கள். 4.40 நிமிடங்களைக் கொண்ட கீதம் இசைத்து முடிக்கப்பட்டதும், அதற்குப் பங்களிப்புச் செய்தவர்களுக்குஅவைத்தலைவர்சபையின்சார்பில் நன்றிதெரிவித்தார். உறுப்பினர்கள்மேசைகளில்தட்டி வரவேற்றனர்.

வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சி உறுப்பினர் ஜெயதிலக, கீதம்சிங்களமொழியில்இல்லைஎன்றுகூறினார். சிங்கள மொழியில் மொழிபெயர்ப்புத் தேவை என்று வலியுறுத்தினார். இலங்கையின் தேசிய கீதம் எப்படி சிங்களமொழியிலும், தமிழ்மொழியிலும்அதேபொருளில் அதே இசையுடன் உள்ளதோ, வடக்கு மாகாண சபையின்கீதமும்அதேபோன்றுமொழிபெயர்க்கப்பட வேண்டும்என்று ஆளும்கட்சிஉறுப்பினர்களானஎம். கே. சிவாஜிலிங்கமும், கே. சயந்தனும் வலியுறுத்தினார்கள்.

அவ்வாறே விடயங்கள் முன்னெடுக்கப்படும் என்று அவைத் தலைவர் அறிவித்தார். (5.21.26)

## வேலணை அபிவிருத்திக்கு பல்வேறு நிதி ஒதுக்கீடுகள்


யாழ்ப்பாணம், ஒக். 24

வேலணைப் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்குப் பல நிதி மூலங்கள் கிடைத்துள்ளன என்று சபையின் தவிசாளர் தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவது சுற்றுலா அமைச்சு, நல்லிணக்க அமைச்சு போன்ற பல்வேறு அமைச்சுக்களுக்கு சபைத் தவிசளாரும், கட்சி உயர்மட்டங்களும் முன்வைத்த கோரிக்கைக்கு அமைய நிதி வழங்க இணக்கம் காணப்பட்டுள்ளது.

வேலணை சிப்பனை முருகன் வீதியைச் சீரமைக்க 10 மில்லியன் ரூபாவும், நயினாதீவு மலையின் நாயனார் வீதியைச் சீரமைக்க 8 மில்லியன் ரூபாவும், நயினாதீவு ஆலங்குள வீதியைச் சீரமைக்க ஒரு மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

நயினாதீவு மலையின் நாயனார் தடுப்பணை அமைப்பதற்கு 2 மில்லியன் ரூபாவும், நயினாதீவு, அனலை தீவு, எழுவை தீவு மக்களுக்கான குடி தண்ணீர் வழங்குவதற்கான கடல் நீரை நன்னீராக்கும் திட்டத்துக்கு 15 கோடி ரூபாவும், நயினாதீவு நாக பூசனி அம்மன் ஆலய இறங்குதுறை அமைக்க 12 கோடியே 30 லட்சம் ரூபாவும், நயினாதீவு சந்தை அமைப்பதற்கு 3.5 மில்லியன் ரூபாவும், மண் கும்பான், சாட்டி ஆகிய பிரதேசங்களுக்குத் தெரு விளக்கு பொருத்துவதற்கும் நிழல் மரங்கள் நாட்டுவதற்கும் 5 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. என்றார். (ற-7)



## நடைபாதை வியாபாரிகள் வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

வவுனியா, ஒக். 24

வவுனியாவில் நடைபாதை வியாபாரிகளால் நேற்று நகர சபைத் தவிசாளருக்குஎதிர்ப்புத்தெரிவித்து ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

சபைத் தவிசாளருக்கும், நடைபாதை வியாபாரிகளுக்கும் இடையே நடத்தப்பட்ட சந்திப்பை அடுத்து ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியா இலுப்பையடிப் பகுதியில் நடைபாதை வியாப்ாரிகளுக்கும், நகர சபைத் தவிசாளருக்கும் இடையே எழுந்த முரண்பாட்டை அடுத்து நேற்றுமுன்தினம் நகர சபைத்தலைவரைச்சந்திக்கநடைபாதை வியாபாரிகள் சென்றிருந்தனர்என்றும்நகரசபைத்தவிசாளர் சந்திக்க மறுத்தார் என்றும் தெரிவித்த நடைபாதை வியாபாரிகள் தமக்கு வியாபாரம் செய்ய ஏற்ற நிரந்தரமான இடம் தர வேண்டும் என்று தெரிவித்தே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இலுப்பையடியில் அவர்கள் வியாபாரம் செய்யும் இடத்தில் இருந்து கண்டிவீதிவழியாகஊர்வலமாகச் சென்றநடைபாதைவியாபாரிகள், வவுனியா நகர சபைக்குச் சென்று வாயிலை மறித்துக் கோசங்கள் எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில்ஈடுபட்டவர்களில் நால்வரைசந்திப்புநடத்தஅழைத்தபோதும்அதற்குஅவர்கள்மறுப்புத் தெரிவித்தனர். அதனால் சற்றுப் பதற்ற நிலைமை தோன்றியது. பொலிஸாரும் சம்பவ இடத்துக்கு வந்தனர். எனினும் பின்னர் நால்வர் சென்று நகர சபைத் தவிசாளரைச் சந்தித்தனர்.

சந்திப்பை அடுத்து நடைபாதை வியாபாரிகள் ஆர்ப்பாட்டத்தைக் கைவிட்டனர்.

தீபாவளிவரை வியாபாரம் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்பின்னர் நடைபாதை வியாபாரம் செய்யத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அவர்கள் அதற்கு உடன்பட்டுள்ளனர். அதன்பின்னர் நகர சபை அமர்வில் கலந்துரையாடி அவர்களுக்கு இடம் ஒதுக்குவது என்று தீர்மானித்துள்ளோம்.

பொதுமக்களின்முறைப்பாட்டுக்கு அமையவே கடந்த ஞாயிற்றுக்கிழமை நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. வியாபாரிகளைச் சிலர் தமது சுயலாபங்களுக்குப் பயன்படுத்திஎனக்குஎதிராகத்திசைதிருப்பி விட்டுள்ளனர்." என்றுநகரசபைத் தவிசாளர் தெரிவித்தார். (ற-110)

# காதலியைக் கொலை செய்தவருக்குத் தூக்கு

### திருமலை மேல்நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் தீர்ப்பு

திருகோணமலை, ஒக். 24

பாடசாலை மாணவியான தனது காதலியை கொலைசெய்த காதலனுக்கு தூக்குத் தண்டனை விதித்துத் திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் நேற்றுத் தீர்ப்பளித்தார்.

திருகோணமலை பன்குளம் பாடசாலை மாணவியான டில்சானி 2010ஆம் ஆண்டு ஜூன் மாதம் 27ஆம் திகதி காணாமல் போயிருந்தார். பின்னர் காட்டுப் பகுதியில் உள்ள நீர்க் குட்டை ஒன்றுக்கு அருகில் அவரது சடலம் எரியூட்டப்பட்ட நிலையில் மீட்கப்பட்டது.

விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் மாணவியின் காதலனான நிஷாந் ஜயாத் என்பவரையும் அவரது நண்பனான இசுறு சம்பத் சில்வா ஆகியோரைக் கைது செய்து நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தினார்கள். நீதிவான் நீதிமன்றில் இந்த வழக்கு சுருக்க முறையற்ற விசாரணைகள் நடைபெற்று வழக்கு கோவைகள் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

அடுத்து சட்டமா அதிபர் திணைக்களத்தால் கொலையுண்ட மாணவியின்காதலன்முதலாம்எதிரியாகவும், அவரதுநண்பர்இரண்டாம் எதிரியாகவும்பெயர்குறிப்பிடப்பட்டுதிருகோணமலைமேல்நீதிமன்றில்கடந்தஆண்டுபங்குனிமாதம்20ஆம்திகதிகுற்றபகிர்வுபத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு திருகோணமலை மேல் நீதிமன்றில் நடைபெற்றுவந்தது. முதலாம் எதிரிக்கும் கொல்லப்பட்ட மாணவிக்கும் இடையில் காதல் தொடர்பு இருந்தது என்று மாணவி கொலை செய்யப்பட்டபோது மூன்று மாதக் கர்ப்பிணி எனவும் அவரது பாடசாலை நண்பிகளும், உறவினர்களும் விசாரணையின்போது சாட்சியம் அளித்திருந்தனர்.

இரண்டாம் எதிரி தற்போது யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிவானாக உள்ள சி. சதிஸ்தரன் முன்னிலையில் குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை வழங்கி இருந்தார். 27.10.2010 அன்று நானும் எனது நண்பனும் அவரது காதலியும் காட்டுக்கு சென்று இருந்தோம். அப்போது எனது நண்பனும் அவரது காதலியும் அங்கிருந்த நீர் குட்டையில் இறங்கி நீரில் விளையாடிக்கொண்டு இருந்தார்கள். திடீரென எனது நண்பன் தனது காதலியை நீரில் மூழ்கடித்து கொலை செய்தார். அப்போது எனக்கு 16 வயது. சிறுவனாக இருந்ததால் அதைத் தடுக்கமுடியவில்லைஎனஅவர்குற்றஒப்புதல்வாக்குமூலம்வழங்கி இருந்தார். அதுதொடர்பில்நீதிவான்சி. சதிஸ்தரன்மன்றில்தோன்றி சாட்சியம் அளித்திருந்தார்.

முதலாம் எதிரியிடம் பெறப்பட்ட வாக்கு மூலத்தின் அடிப்படையில் படுகொலைசெய்யப்பட்டமாணவியின்மோதிரம், செருப்புஎன்பவை மீட்கப்பட்டன என்று பொலிஸாரும் மன்றில் சாட்சியம் அளித்திருந்தனர். அவர்களால் மீட்கபட்ட சான்றுப் பொருள்களையும் அடையாளம் காட்டினார்கள்.

இந்தவழக்கின்முக்கியசாட்சியங்களாகமரபணுபரிசோதனையை மேற்கொண்ட விஞ்ஞானி, இரசாயன பகுப்பாய்வு திணைக்கள கையெழுத்து நிபுணர், துணி புடவை ஒப்பீட்டு நிபுணர், கொழும்பு பற்கட்டு மருத்துவ நிபுணர் மற்றும் கண்டி மருத்துவமனை மூத்த சட்ட வைத்திய நிபுணர் ஆகியோர் மன்றில் தோன்றி தமது நிபுணத்துவ சாட்சியங்களையும் வழங்கியிருந்தனர்.

இந்த வழக்கு தீர்ப்புக்காக நேற்றுச் செவ்வாய்க்கிழமை திகதியிடப்பட்டிருந்த நிலையில் நேற்று வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இரண்டாம் எதிரியின் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் குறித்த கொலை நடந்த தினத்தன்று மூவரும் காட்டுக்குள் சென்றமை, நீர் நிலையில் விளையாடியமை, அந்த மாணவி இல்லாமல் இருவர் மாத்திரம் திரும்பிக் காட்டை விட்டு வெளியே வந்தமை ஆகியன சாட்சிங்களாக அமைந்துள்ளன.

இரண்டாம் எதிரி பதினாறு வயது சிறுவனாக இருந்ததுடன் அவன் இந்தக் கொலை சம்பவத்துடன் நேரடியாக தொடர்புபட்டதாகவோ அல்லது பொது எண்ணத்துடன் கொலை புரிந்தாகவோ அல்லது அதற்கு உடந்தையாக இருந்ததாகவோ வழக்குத் தொடுநர் தரப்பானது நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் எண்பிக்கத் தவறி உள்ளது. எனவே இரண்டாம் எதிரியை மன்று இந்த வழக்கில் இருந்து விடுதலை செய்கிறது.

அதேவேளை கொல்லப்பட்ட மூன்று மாத கர்ப்பிணியான மாணவியின் காதலானான முதலாம் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் சாட்சியங்கள் சான்றுகளின் அடிப்படையில் நியாயமான சந்தேகங்களுக்குஅப்பால்வழக்குதொடுநர்தரப்புஎண்பித்துள்ளது. முதலாம் எதிரியை மன்று கொலைக் குற்றவாளியாகக் காண்கிறது. குற்றவாளிக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்படுகின்றது என்று திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் தீர்ப்பளித்தார். (ற-37)

## மாவீரர் நாளை நடத்த ஏற்பாட்டுக்குழு தெரிவு

மன்னார், ஒக். 23

மன்னார் மாவட்டத்தில் உள்ள இரு மாவீரர் துயிலுமில்லங்களில் மாவீரர் நாள் நினைவேந்தலை மேற்கொள்வதற்கான ஏற்பாட்டுக் குழு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

ஆட்காட்சிவெளி துயிலும் இல்லத்துக்கு அருகில் இது தொடர்பான கூட்டம் நேற்று நடைபெற்றது.

மாவீரர்களின் பெற்றோர், முன்னாள் போராளிகள், சமயத் தலைவர்கள், பொதுமக்கள் எனப் பலர் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

தலைவர், செயலாளருடன் 9 பேர் கொண்ட குழு தெரிவு செய்யப்பட்டது. இந்தக் குழு இரு துயிலும் இல்லங்களிலும் மாவீரர் தின நினைவேந்தலை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளை அனைத்துத் தரப்பினரது ஒத்துழைப்புடன் மேற்கொள்ளும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-105)

# உப்பளத்துக்கு எதிராக 12ஆம் திகதி தீர்மானம்

கிளிநொச்சி, ஒக்.24

ஆனையிறவு, உமையாள்புரம் பிரதேசத்தில் இயங்கும் உப்பளத்தை மூட வேண்டும் என்று தெரிவித்து கரைச்சிப் பிரதேச சபையில்தீர்மானவரைவுசமர்ப்பிக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட விவசாய ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் கடந்த9ஆம்திகதிநடைபெற்றது. ஆனையிறவுப் பகுதியில் உப்பளம் அமைக்கப்படும் விடயம் தொடர்பாக இரணைமடு விவசாய சம்மேளனத்தின் செயலரும், கரைச்சிப் பிரதேச சபை உறுப்பினருமான சி. சிவமோகன்கூட்டத்தில்கூட்டிக்காட்டியிருந்தார்.

ஆனையிறவு உமையாள்புரத்தில்போருக்குமுன்னர்உப்பளம் நடத்தப்பட்டது என்று தெரிவித்து சுற்றுச்சூழல் அதிகார சபையின் அனுமதியை மட்டும்பெற்று, பிரதேசசபையின் அனுமதிபெறப்படாது கருவாட்டுக்கான உப்பு அரைத்துப்பொதிசெய்ய்பபடுகின்றது. அதை நேரில் சென்று அவதானித்தோம் என்று அவர் குறிப்பிட்டார்.

விவசாய ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில்கலந்துகொண்டிருந்த சுற்றுச் சூழல் அதிகார சபையினர், அந்தஉப்பளத்துக்கு வழங்கியஅனுமதியைஇல்லாது செய்யுமாறு கடிதம் அனுப்பியுள்ளோம்என்றுதெரிவித்திருந்தனர். இது தொடர்பாக மாவட்டச் செயலர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரப்பட்டிருந்தது.

ஆனையிறவில் ஏ-9 வீதிக்குக் கிழக்குத் திசையில் எந்த உப்பளமும்இயங்கஅனுமதிக்கப்படாது என்ற மாவட்டத்தின் தீர்மானத்தை மீறி அந்தப் பகுதியில் அமைக்கப்பட்டஉப்பளம்உடனடியாக மூடப்படும் அல்லது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாவட்டச் செயலர் தெரிவித்திருந்தார். எனினும் உப்பளம் தொடர்ந்து இயங்குகின்றதுஎன்றுகூறப்படுகின்றது. இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. உப்பளம் தொடர்ந்துஇயங்குகின்றது. உடனடியாக மூட வேண்டும் என்று வலியுறுத்தி எதிர்வரும் நவம்பர் மாதம்12ஆம் திகதி நடக்கவுள்ள கரைச்சிப் பிரதேச சபை அமர்வில் தீர்மான வரைவு கொண்டுவரப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-105)

# வழித்தடம் மாறிய சாரதிகளுக்கு தண்டம்

மணல் ஏற்றிச் செல்வதற்கு வழங்கப்பட்டஅனுமதிப்பத்திரத்துக்கு மாறாக பிறிதொரு வழித்தடத்தால் பயணித்தமைக்காக டிப்பர்சாரதிகள் இருவருக்குசாவகச்சேரி நீதிமன்றில் தலா 5 ஆயிரம்ரூபாதண்டம்விதிக்கப்பட்டது. இது தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. சாரதிகள் தம்மீதான குற்றச்சாட்டுக்களை ஏற்றுக் கொண்டனர். நீதிமன்று தண்டம் விதித்துத்தீர்ப்பளித்தது. (ற-9)

# சமுர்த்தியில் பாரபட்சம்

## சாந்தி எம்.பி. குற்றச்சாட்டு

*யாழ்ப்பாணம், ஒக்.24*

*முல்லைத்தீவு மாவட்டத்தில் சமுர்த்தி உதவித் திட்டத்தில் உள்வாங்கப்படாத23கிராமஅலுவலர்பிரிவு மக்களுக்கு உடன் சமுர்த்தி உதவி வழங்கப்படும் என்று அமைச்சர் வாக்குறுதி அளித்திருந்தார். ஆனால்அது நிறைவேற்றப்படவில்லை என்று குற்றஞ்சாட்டியுள்ளார்தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறீஸ்கந்தராசா.*



முல்லைத்தீவுஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம்நேற்று முன்தினம் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்த போதே நாடாளுமன்ற உறுப்பினர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தாவது

முல்லைத்தீவு மாவட்டத்தின் 136 கிராம அலுவலர் பிரிவுகளில் உத்தியோகபூர்மற்று இயங்கும் வெலி ஓயாவின்9கிராமலஅலுவலர்பிரிவுகள்உட்படப்11ஆயிரத்து 53 பேருக்கு மட்டுமே சமுர்த்தி உதவிகள் வழங்கப்படுகின்றன. முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்கள் செறிந்து வாழும் கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள 23 கிராம அலுவலர் பிரிவுகளில் ஒரு குடும்பத்துக்கேனும் இதுவரை சமுர்த்தி வழங்கப்படவில்லை.

23கிராமஅலுவலர்பிரிவுகளில்15ஆயிரத்து300பேர் சமுர்த்தி உதவிகள் பெறத் தகுதியடைவர்கள். 9 ஆயிரத்து551பேருக்குசமுர்த்திஉதவிகள்வழங்கஆவண செய்யப்படும் என்று கடந்த 3 ஆண்டுகளாக மாவட்ட செயலகத்தினர் கூறுகின்றனர். மக்கள் மீளக் குடியமர்ந்து 8 ஆண்டுகள் கழிந்துள்ளபோதும் தற்போது வரை சமுர்த்தி உதவிகள் வழங்கப்படவில்லை.

5மாதங்களுக்குமுன்னர்முல்லைத்தீவுக்குவந்திருந்த சமுர்த்தி அமைச்சரிடம் இது தொடர்பாகக் கூறப்பட்டது. 23 கிராம அலுவலர் பிரிவில் உள்ளவர்களுக்கு உடனடியாகச்சமுர்த்தி உதவிகள் வழங்கப்படும்என்று அவர் வாக்குறுதியளித்தார். ஆனால் தற்போதுவரை அது நிறைவேற்றப்படவில்லை. நடவடிக்கைஎடுக்கப்படுகின்றது என்று மட்டுமே பதில் கிடைக்கின்றது.

இந்த விடயத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?. இந்தப்பிரச்சினைக்கு என்னதான் தீர்வு? என்றார்.

சமுர்த்திஉதவிக்கானதரவுகள் அனைத்தும்அனுமதிக்காக சமுர்த்தி அதிகார சபைக்கு அனுப்பப்பட்டுள்ளன. அனுமதி கிடைத்ததும் மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்என்று அபிவிருத்திக் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தமாவட்டச்செயலர்தெரிவித்தார். (ற-105)

# நீர்மட்டம் உயராததால் கூட்டங்கள் தாமதம்

குளங்களின் நீர்மட்டம் உயர்வடையாததால் காலபோகச் செய்கைக்கான கூட்டங்களைநடத்துவது தாமதமாகின்றது என்று முல்லைத்தீவுமாவட்டச்செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம்முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெற்றது.

அதில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து. ரவிகரன் இது தொடர்பில் கருத்துத் தெரிவித்தார். காலபோகச்செய்கைக் கூட்டங்கள்நடைபெறவில்லைஎன்று விவசாயிகள் கூறுகின்றனர் என்றார். அது தொடர்பில் மாவட்டச்செயலர்பதிலளித்தார். நீர்ப்பாசனத் திணைக்களமே கூட்டங்களை ஒழுங்குபடுத்துவது வழமை. குளங்களின்நீர்மட்டங்கள்உயரவில்லை. அதனால்கூட்டங்களை நடத்துவது தாமதமாகின்றதுஎன்றுஅவர்குறிப்பிட்டார். வவுனிக்குளம், முத்தையன் கட்டுக்குளம் என்பவற்றுக்கான கூட்டங்களை நடத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்தார். (ற-214)

# புதிய பிரதேச செயலகப் பிரிவால் இனப்பரம்பல் பாதிப்புறக் கூடாது

## சத்தியலிங்கம் சுட்டிக்காட்டு

வவுனியா, ஒக்.24

புதிதாகஉருவாக்கப்படவுள்ளஓமந்தைபிரதேசசெயலகப்பிரிவில் வவுனியா வடக்குப் பிரதேச செயலகத்துக்குட்ட கிராம அலுவலர் பிரிவுகளைஉள்ளீர்ப்பதுவடக்கில்தமிழர்களின் இருப்பைக்கேள்விக்குறியாக்கும் என்று தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ப. சத்தியலிங்கம்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

வவுனியா மாவட்டத்தில் வவுனியா பிரதேச செயலகப் பிரிவை இரண்டாகப் பிரித்து ஓமந்தைப் பிரதேச செயலகப் பிரிவு அமைக்கப்படவுள்ளதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். தற்போது அங்கு மக்கள் மீள்குடியமரும் நிலையில் தனியாக ஒருபிரதேசசெயலகப் பிரிவு உருவாக்கப்படுவது நன்மைபயக்கும். எனினும் அதற்காக அரசால் முன்மொழியப்பட்டுள்ள பிரதேச எல்லை வரம்பு சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

அமைச்சரவைப் பத்திரத்தில் வவுனியா மாவட்டத்தில் தற்போது காணப்படும் 4 பிரதேச செயலகப் பிரிவுகளை 5 ஆக மாற்றுவதற்குக் குறிப்பிடப்பட்டுள்ளது என்று அறியக் கிடைகின்றது.

அமைச்சரவைப்பத்திர முன்மொழிவின் அடிப்படையில்வவுனியா மாவட்டத்தில்தற்போதுள்ள102கிராமஅலுவலர்பிரிவுகள்87ஆகக் குறைகின்றது. மாவட்டத்தின் மொத்தப் பரப்பளவான ஆயிரத்து 964 சதுர கிலோமீற்றர், ஆயிரத்து 616. 84 சதுர கிலோமீற்றராகக் குறைகின்றது. வவுனியா வடக்குப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட 4 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கி ஓமந்தைப் பிரதேச செயலகம் அமைக்கப்படவுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

வவுனியா வடக்குப் பிரதேச செயலகப் பிரிவுகளில் ஏற்கனவே 5 வட்டாரங்களில்7சிங்களக்குடியேற்றக்கிராமஅலுவலர்பிரிவுகள் உள்வாங்கப்பட்டுள்ளன. தமிழ் மக்கள் மட்டுமே வாழ்கின்றன 4 கிராம அலுவலர் பிரிவுகளையே ஓமந்தையுடன் இணைப்பதற்கான முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இது வவுனியா வடக்கின் இனப்பரம்பலைப் பாதிக்கும். எதிர்காலத்தில் உள்ளூராட்சி மன்றத்தில் தமிழ் மக்கள் ஆட்சி அமைவதையும் பாதிக்கும்.

அதனால் பின்வரும் ஆலோசனைகளை முன்மொழிவது அவசியம் என்று சம்பந்தப்பட்ட தரப்புகளுக்குக் கடிதம் மூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

42 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்ட வவுனியா பிரதேச செயலகத்தை இரண்டாகப் பிரிப்பதன் ஊடாக ஓமந்தைப் பிரதேச செயலகம்உருவாக்கப்படவேண்டும். அதற்காகஓமந்தைநக்ரைச் சுற்றியுள்ளகிராமஅலுவலர்பிரிவுகள்உள்ளீர்க்கப்படவேண்டும். வவுனியாபிரதேசசெயலகப்பிரிவில்உள்ளஅதிககுடும்பங்களைக் கொண்ட தோணிக்கல், மகாறம்பைக்குளம் போன்ற கிராம அலுவலர் பிரிவுகளை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்ற ஆலோசனைகள் முன்மொழியப்பட்டுள்ளன. என்றுள்ளது. (ற-110,105)

# தமிழர் பாரம்பரியத்தை பறைசாற்றும் அம்மாச்சி

## ஐங்கரநேசன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.24

அம்மாச்சி என்பது வெறும் பெயர்ச்சொல் அல்ல. தமிழ் மக்களின் பாரம்பரியத்தைப் பறைசாற்றும் ஒரு உயிர்ச்சொல்என்றுதெரிவித்துள்ளார்வடக்கு மாகாணசபைஉறுப்பினர்பொ. ஐங்கரநேசன்.

அம்மாச்சிஉணவகம்தொடர்பாகஅவர் அனுப்பியுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுளார். அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது;

தென்னிலங்கையில் கொழும்பு விவசாயத் திணைக்களத்தால் 'ஹெல போஜன் சால' என்ற பெயரில் உணவகங்கள் அமைக்கப்பட்டு அவர்களது பாரம்பரியஉணவுகள்விற்கப்படுகின்றன. வடக்கு மாகாண சபை தோற்றம் பெறமுன்னரோஅல்லதுஅதற்குப்பின்னர் வடக்கு மாகாண விவசாயத் திணைக்களம் 2016ஆம் ஆண்டில் அம்மாச்சிஉணவகங்களைஉருவாக்கும் வரையிலோ அவ்வாறான உணவகங்களை வடக்கில் உருவாக்குவதற்குகொழும்புஅரசுமுன்வரவில்லை. தமிழ் மக்களின் பண்பாட்டு விழுமியங்களில் ஒரு கூறாக உள்ள எமது பாரம்பரியஉணவுவகைவிற்பனைக் கூடங்களுக்கு அம்மாச்சி என்ற நாமமும் சூடப்பட்டது.

முல்லைத்தீவிலும், வவுனியாவிலும், கிளிநொச்சியிலும், மன்னாரிலும்திறக்கப்பட்ட அம்மாச்சி உணவகங்களின் உருவாக்கத்தில்கொழும்புஅரசின்நிதி ஒருசதமேனும்பயன்படுத்தப்படவில்லை. நான்காவதாக திருநெல்வேலியில் அமைக்கப்பட்டஉணவகம்அம்மாச்சி என்ற பெயர்ப்பலகை இல்லாமலே 2017 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் முதல் இயங்கிவருகிறது. பின்விளைவுகள் பற்றி புரிந்துகொள்ளாத விவசாயத் திணைக்கள அதிகாரிகள் மத்திய விவசாயத் திணைக்களத்திடம் இருந்தே அதற்கான நிதியைப் பெற்றிருந்தனர். அதனால்தான் கொழும்பு அரசுஅம்மாச்சிஎன்றபெயரைப்பயன்படுத்தாமல் ஹெ போஜன் சால என்ற பெயரைச்சூட்டவேண்டும்என்றுஅடம்பிடித்தனர்.

திருநெல்வேலியில் அமைக்கப்பட்ட உணவகம்கொழும்புஅரசின்நிதியூட்டலில் உருவாக்கப்பட்டதாயினும் அது மாகாணத்துக்கானதாகவும், மாகாண விவசாயத் திணைக்கள வளாகத்தில் அமைந்திருப்பதாலும் மக்களின் அரசியல்அபிலாசைகளைவெளிப்படுத்தும் பிரதிநிதி என்ற வகையில் ஹெல போஜன்சாலஎன்றுபெயர்சூட்டுவதை நிராகரித்தேன்.

வடக்கு மாகாண முதலமைச்சர் க. வி. விக்னேஸ்வரனை அப்போதைய மத்தியவிவசாய அமைச்சர் துமிந்ததிசநாயக்கதொடர்புகொண்டுஹெலபோஜன் சால என்ற பெயரையே சூட்ட வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார். பெயரை மாற்றவேண்டிய அவசியமில்லை என்று சுட்டிக்காட்டிய முதலமைச்சர்ஹெலஎன்பதன்தமிழ்ப்பதம் ஈழம்என்பதன்அடிப்படையில்தேவையாயின் ஈழ உணவகம் என்ற பெயரைப் பயன்படுத்துங்கள் என்றும் தெரிவித்திருந்தார். அதையடுத்து திருநெல்வேலி அம்மாச்சி உணவகம் அம்மாச்சி என்ற பெயர்ப் பலகை இல்லாமலேயே திறக்கப்பட்டது.

அம்மாச்சிஎன்றசொல்பெயர்ப்பலகைகளில்இடம்பெற்றாலோஅல்லதுஇடம் பெறாமல் இருந்தாலோ, இதுபோன்ற பாரம்பரியஉணவகங்களைவருங்காலங்களில் திணைக்களங்களோ அல்லதுவேறுநிறுவனங்களோஉருவாக்கினாலோமக்கள்அவற்றைஅம்மாச்சி என்றேஅழைப்பர். அம்மாச்சிவெறும் பெயர்ச்சொல் அல்ல தமிழ்மக்களின் பாரம்பரியத்தைப் பறை சாற்றும் ஒரு உயிர்ச்சொல்- என்றுள்ளது. (ற-105)

# வடக்கு ஆளுநருக்கு அதிகாரம் இல்லை!

## ஜி.எல்.பீரிஸ் கூறுகின்றார்



கொழும்பு,ஒக்.24
வடக்கு மாகாணத்தின் பொருளாதார நிர்வாகத்தைத் தன்வசப்படுத்தும் அதிகாரம் வடக்கு மாகாண ஆளுநருக்குக் கிடையாது என பொதுஜன பெரமுனவின் தவிசாளர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்தார்.

வஜிராஷ்ரம விகாரையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவித்ததாவது:

பதவிக் காலம் முடிந்துள்ள மாகாண சபைகளில் எதிர்வரும் நவம்பர் மாதம் தொடக்கம் அரசிற்கு எதிரான போராட்டங்களை முன்னெடுப்போம். வடக்கு மாகாண சபையின் பதவிக் காலம் இன்றுடன் முடிவடைகிறது. இதன் பின்னர் மாகாண சபையில் ஏற்படும் பொருளாதார மற்றும் நிர்வாகப் பிரச்சினைகளுக்கு யார் பொறுப்பு . மகிந்த ராஜபக்ச வடக்கு மக்களுக்கு வழங்கிய அதிகாரங்களைத் தேசிய அரசு பறித்து விட்டது எனவும் குற்றஞ்சாட்டி னார்.

## கைதிகளை விடுதலை செய்ய நடவடிக்கை

கொழும்பு, ஒக்.24
சிறு குற்றச்சாட்டுகளின் கீழ் மிக நீண்ட நாள்களாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 70 வயதுக்கு மேற்பட்டவர்களை விடுதலை செய்யப்படவுள்ளதாக நீதி அமைச்சு தெரிவித்துள்ளது. கொலை, போதை வர்த்தகம் உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களுக்காகச் சாவுத் தண்டனை அல்லது ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டவர்களைத் தவிர சிறிய குற்றச்சாட்டுகளின் கீழ் மிக நீண்ட நாள்களாகச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களையே விடுதலை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சிறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்ட 70 வயதைத் தாண்டிய 50 கைதிகள் சிறைச்சாலை களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், அந்த அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.



## எரிபொருள் குழாய் அமைந்திருக்கும் பிரதேசவாசிகளுக்குப் புதிய வீடுகள்

### அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவிப்பு

கொழும்பு,ஒக்.24
கொழும்பு துறைமுகத்தில் இருந்து கொலன்னாவைப் பிரதேசத்துக்குச் செல்லும் எரிபொருள் குழாயை அண்மித்த பிரதேசத்தில் வாழும் மக்களுக்குப் புதிய வீடுகள் வழங்கப்படும் என்று பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார். அதன் முதற்கட்டமாக அந்தப் பிரதேசத்தைச்சேர்ந்த 20 குடும்பங்களுக்கு புதிய வீடுகளைக் கையளிக்கும் பணிகள் நேற்றுப் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:
"பிரதேச வாசிகளை அப்பிரதேசத்தில் இருந்து அகற்ற முடியும் என நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. எனினும் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு இந்த அரசு செயற்படுவதனால் அந்தப் பிரதேசத்தில் வாழும் அனைத்து மக்களுக்கும் புதிய வீடுகளை வழங்க நாம் முன்வந்துள்ளோம்.

நீங்கள் அனைவரும் அந்த எரிபொருள் குழாயின் மேலேயே வாழ்ந்து வந்துள்ளீர்கள். நீங்கள் நெருப்பின் மேல் வாழ்ந்துள்ளீர்கள். அந்தக் குழாயில் தீப்பற்றி எரிந்தால் கொழும்பு நகரமே நாசமாகிவிடும். உங்கள் அனைவரையும் எவ்வித அறிவிப்பும் இல்லாமல் வெளியேற்ற முடியும் என நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. அதுபோல பல சம்பவங்கள் கடந்த காலங்களில் இடம்பெற்றது. அவர்கள் ஓர் இரவிலேயே உங்களை வெளியேற்றியிருப்பார்கள். ஆனால் எமது கூட்டாட்சி அரசு இதை செய்யவில்லை. நாங்கள் அதற்கு பதிலாக புதிய வீடுகளை வழங்க ஏற்பாடு செய்தோம். அதன் முதற்கட்டப் பணியே இந்த நிகழ்வாகும்' என்றார்

மேலும் இந்நிகழ்வுக்கு வருகை தந்திருந்த நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருநாணாயக தெரிவித்ததாவது:
"இந்த எரிபொருள் குழாய் 70 ஆண்டுகள் பழமையானது. இது எப்போது உடைந்து போகும் என்று எம்மால் கூறமுடியாது . நாங்கள் கடந்த 20 ஆண்டுகளில் எந்த விதபுதுக் குழாயையும் இணைக்கவில்லை. ஆனால் தற்போது புதிய குழாயை அமைக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த அபிவிருத்தித் திட்டமானது பிரதேச வாசி களின் நலன்களுக்கு முன்னுரிமை கொடுத்தே முன்னெடுக்கப்படுகின்றது" -என்றார்

## இலங்கை தென்னாபிரிக்க பங்காண்மை மன்றம்

கொழும்பு,ஒக்.24
அரசியல் மற்றும் பொருளாதாரப் பிணைப்புக்களை மீளாய்வு செய்வதற்கும், இரு நாடுகளுக்குமிடையிலான ஒத்துழைப்புக்களை வலுப்படுத்துவதற்குமாக, இலங்கை தென்னாபிரிக்க பங்காண்மை மன்றத்தின் ஏழாவது அமர்வு கொழும்பிலுள்ள வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் கடந்த 16 ஆம் திகதி நடைபெற்றது. கடல்வழி பிரச்சினைகள், பாதுகாப்பு மற்றும் புலம்பெயர்தல் ஆகியவற்றிலான உயர் மட்ட பயணங்கள் மற்றும் ஒத்துழைப்புக்களைப் பரிமாற்றுவதன் வாயிலாக அரசியல் உறவுகளை மேலும் வலுப்படுத்துதல் மற்றும் இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீட்டை அதிகரித்தல் ஆகியன தொடர்பில் இதன்போது அதிக கவனம் செலுத்தப்பட்டது. பங்காண்மை மன்றத்தின் எட்டாம் அமர்வு 2019ஆம் ஆண்டில் பிரிடோரியாவில் நடைபெறவுள்ளது

தோட்டத் தொழிலாளர்களின்

## சம்பளப் பிரச்சினையில் அரசு தலையிட வேண்டும்



கொழும்பு,ஒக்.24
தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினையில் அரசு தலையிட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.பி.ரத்நாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
"தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினைக்கான பேச்சுகள் நடைபெறுகின்றன. இந்த விடயத்தில் அரசு தலையிடவேண்டும். அவ்வாறு அரசு தலையிடவில்லை எனில் அது தோட்டத் தொழிலாளர்களுக்குச் செய்யும் துரோகம்.

பொய், மோசடி, ஏமாற்று வேலைகளைச் செய்து அவர்களின் வாக்குகளை கொள்ளையடிக்க இடம் கொடுக்க வேண்டாம். அவர்களின் சம்பளப் பிரச்சினையைத் தீர்க்க திறைசேரியிலிருந்து பணத்தை ஒதுக்குங்கள். இலங்கைத் தேயிலை என்ற நாமத்துக்கு செஸ் வரியை அறவிடவேண்டும்.

அதன் மூலம் கிடைக்கும் நிதியைக் கொண்டு அவர்களின் சம்பளப் பிரச்சினைக்குத் தீர்வைக் காணுங்கள். குறைந்தது அவர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பளத்தை அடிப்படைச் சம்பளமாகப் பெற்றுக் கொடுங்கள்" என்றார்.

## அரச தலைவருக்கு எதிரான கொலைச் சதி விசாரணைக்கு சீன நிபுணர்களுக்கு அழைப்பு

கொழும்பு,ஒக்.24
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவைப் படுகொலை செய்வது தொடர்பான தொலைபேசி உரையாடலை ஆய்வு செய்வதற்காகச் சீன நிபுணர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக எக்கனமிக்ஸ் நெக்ஸ்ட் இணையத்தளம் தெரிவித்துள்ளது.

இந்தச் சதித் திட்டத்தை வெளிப்படுத்திய முன்னாள் வானூர்திப் படையைச் சேர்ந்தவரும் இராணுவத்திலிருந்து தப்பிச் சென்றவருமான நாமல் குமார, பிரதிப் பொலிஸ்மா அதிபருடனான தனது தொலைபேசி உரையாடல்கள் பெரும்பாலானவை நீக்கப்பட்டுள்ளதாக விசாரணையின் போது தெரிவித்துள்ளார்.

மேலும் அரச தலைவரைக் கொலை செய்யும் சதித்திட்டம் தொடர்பான பிரதிப்பொலிஸ்மா அதிபர் நாலக்க சில்வாவின் குரல் பதிவொன்று இருப்பதாகக் கடந்த செப்ரெம்பர் மாதம் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் நாமல் குமார தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் இவ்விடயம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதில் பிரதிப்பொலிஸ்மா அதிபரின் உரையாடல் காணப்படுவதாகவும் ஆனால் அரச தலைவரைக் கொலை செய்யும் சதித்திட்டம் தொடர்பாக எந்தவொரு உரையாடலும் இல்லையென நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாக எக்கனமி நெக்ஸ்ட் இணையத்தளம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் குரல் பதிவில் சில விடயங்கள் அழிக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளமையால், நாமல் குமாரவின் தொலைபேசியை சீன நிபுணர்களுக்கு வழங்க அதிகாரிகள் தீர்மானித்துள்ளதாக எக்கனமி நெக்ஸ்ட் இணையத்தளம் மேலும் தெரிவித்துள்ளது.

## மாணவனின் எதிர்காலச் செயற்பாட்டுக்கு 10 இலட்சம் நிதி அரச தலைவரால் ஒதுக்கீடு

கொழும்பு,ஒக்.24
20 கிலோமீற்றர் தூரத்துக்கு அனுப்ப முடியுமென எதிர்பார்க்கப்படும் ரொக்கட்டை அமைத்த மாண்வனுக்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன 10 இலட்சம் ரூபா நிதியை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

கம்பஹா பண்டாரநாயக்க வித்தியாலத்தின் மாணவன் கிஹான் ஹெட்டியாரச்சியின் எதிர்கால பணிகளுக்காக அரச தலைவர் செயலகத்தில் வைத்து இந்த நிதி வழங்கப்பட்டுள்ளது.

கம்பஹா பண்டாரநாயக்க வித்தியா லயத்தின் கண்காட்சியில் இந்த மாணவனின் ரொக்கட்டை அரச தலைவர் பார்வையிட்டதுடன், அம்மாணவனின் திறமையை ப் பாராட்டி, ரொக்கட்டை மேம்படுத்துவதற்கு தேவையான நிதியுதவியினை பெற்றுத்தருவதாகவும் அதனை வானில் பறக்கவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் தெரிவித்திருந்தார்.

அதற்கமைய, அதன் அமைப்புப் பணிகளுக்காக முதற்கட்டமாக இந்த நிதி வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் இலங்கை வானூர்திப் படையின் தொழிநுட்ப அதிகாரிகள் இதன்போது அழைக்கப்பட்டிருந்ததுடன், ரொக்கட்டினை வானில் பறக்கவிடுவதற்கு தேவையான ஒத்துழைப்பை மாணவன் கிஹான் ஹெட்டியாரச்சிக்குப் பெற்றுக்கொடுக்குமாறு அவர்களுக்கு அரச தலைவர் பணிப்புரை விடுத்தார்.

# இந்தியாவின் மௌனம் சம்மதத்துக்கு அறிகுறி

## இப்படிக் கூறுகிறார் கம்மன்பில

கொழும்பு, ஒக்.24



**அரச தலைவர் படுகொலைச் சதி தொடர்பில் கைது செய்யப்பட்ட இந்தியர், 'றோ' புலனாய்வு அமைப்பைச் சேர்ந்தவர் என்று கூறப்பட்ட நிலையில் இதுவரையில் இந்தியத் தூதரகம் எதிர்ப்பு வெளியிடப்படாமை மூலம் அது உறுதியாகின்றது என்று பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.**

கொழுப்பில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அவரது கட்சித்தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச தலைவர் . முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தாபாய ராஜபக்ச படுகொலைச் சதியுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள இந்தியர் 'றோ' அமைப்பைச் சேர்ந்தவர் இல்லையென்றால் உடனடியாக இந்தியத் தூதரகம் ஊடகவியலாளர் சந்திப்பு மூலமாகவோ அல்லது அறிக்கை மூலமாகவோ கைது செய்யப்பட்டவர் 'றோ' அமைப் பைச் சேர்ந்தவர் அல்லர்.

அவ்வாறான தகவல்கள் வெளியிடப்படுவது உண்மைக்குப் புறம்பானது. இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் காணப்படுகின்ற நல்லுறவைச் சீர்குலைப்பதற்கு முயற்சிக் கப்படுகின்றது என்று கூறி யிருக்கலாம் ஆனால் அவ்வாறு கூறவில்லை.

அண்மையில் இந்தியாவின் முன்னாள் தலைமை அமைச்சர் மன்மோகன் சிங் அமெரிக்காவின் புலனாய்வு அமைப்பான சி.ஐ.ஏ. அமைப்பினைச் சேர்ந்தவர் என்று கூறப்படுகின்றது.

சி.ஐ.ஏ.அமைப்பைச் சேர்ந்தவர் இந்தியாவின் தலைமை அமைச்சராக முடியும் என்றால் எமது அமைச்சரவையில் உள்ளவர்கள் 'றோ' அமைப்பைச் சேர்ந்தவர்களாக இருக்க முடியாது என்று கூற இயலாது என்றார். (61)



## ஒவ்வாமை காரணமாக 70 பேர் மருத்துவமனையில்

கொழும்பு.ஒக்.24

உணவு ஒவ்வாமை காரணமாக ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட 70 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கொட்டகலை பத்தனை சிறிபாத கல்வியியற் கல்லூரியைச் சேர்ந்த ஆசிரிய மாணவர்களே கொட்டகலை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகப் பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தப் பாடசாலையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் வழங்கப்பட்ட உணவு ஒவ்வாமை காரணமாகச் சிலருக்கு வயிற்று வலி, வாந்தி ஏற்பட்டதன் காரணமாக நேற்று காலை 8 மணியளவில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இந்த உணவு ஒவ்வாமை எவ்வாறு ஏற்பட்டது என்பது தொடர்பாகப் பொது சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## அப்போது சிலருக்கு நல்லவராகத் தெரிந்த ரணில் இப்போது கெட்டவராகத் தெரிகிறார்

### அமைச்சர் ராஜித சேனாரத்ன

கொழும்பு.ஒக்.24

அப்போது சிலருக்கு நல்லவராகத் தெரிந்த தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தற்போர்து கெட்டவராகத் தெரிகின்றார். 2015ஆம் ஆண்டு ரணில் விக்கிரமசிங்க எமக்கு வழங்கிய ஒத்துழைப்பின் காரணமாகவேதான் எம்மால் வெற்றியடைய முடிந்தது என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

கொழுப்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அன்றைகாலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு அரச தலைவர் மைத்திரிபால விரோதியாகவே தெரிந்தார். ஐக்கிய தேசியக் கட்சியிலும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியிலும் தலையில் அமர்ந்துகொண்டு தலைவர்களின் மூளையை உண்ணும் உயிரினங்கள் இல்லாமலில்லை. 2015 ஆம் ஆண்டில் அரசியல் மாற்றத்துக்கான புரட்சியை ஏற்படுத்துவதற்கு இணைந்தவர்களில் பலருக்கு உணர்வு ரீதியாக அத்தகைய தேவையொன்று இருக்கவில்லை. தற்போது அனைத்தும் நிகழ்ந்து மூன்றாண்டுகள் ஆகின்றமையால் தலைவர்களுக்கு கூட அந்தப் புரட்சிக்கான போராட்டம் மறந்துபோயிருக்கலாம். அன்று பொதுவாக நீதிக்காக, ஜனநாயகத்துக்கான ஒன்றிணைந்து உயிரைத் துச்சமென மதித்துப் போராடியிருந்தோம்.

இவை அனைத்தையும் யாராவது உடைத்தெறிவார்களானால் அவர்களை நான் துரோகி என்றே கூறுவேன். இன்னும் சில நாள்கள் நான் நடப்பதை அவதானித்து யார் துரோகத்தனமான விடயங்களில் ஈடுபடுகின்றார்கள் என்பதைப் பகிரங்கமாக வெளிப்படுத்துவேன் - என்றார்.

இதேவேளை,கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெற்ற இடம்பெற்ற நிகழ்வின்போது, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவை மறைமுகமாகத் தாக்கிப் பேசியுள்ளார். (31)

## கடந்த ஆட்சியில் இனவாதமே வளர்ந்தது

### லால்காந்த தெரிவிப்பு



கொழும்பு.ஒக்.24

கடந்த ஆட்சிக்காலத்தில் இனவாதத்தை வளர்த்து மக்களிடையே பிரிவினை களை உருவாக்கினார்கள் என மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் பீட உறுப்பினரும், தேசிய தொழிற்சங்க மத்திய நிலையத் தலைவருமான கே.டி. லால்காந்த தெரிவித்தார்.

நாட்டைப் பாதுகாக்கும் நாட்டைக் கட்டியெழுப்பும் மக்கள் நேயமிகு ஆட்சி என்னும் அரசியல் கருத்தரங்கு நேற்றுமுன்தினம் மட்டக்களப்பில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"இதுவரை காலமும் இருந்த ஆட்சியாளர்கள் தமிழ், சிங்களம், முஸ்லிம் என்ற பிரிவினைகளை வைத்துக்கொண்டு தங்களுடைய அரசியல் இலாபத்தையே பார்த்தார்களே தவிர, நாட்டுக்கு நல்ல விடயங்கள் எதனையும் செய்யவில்லை.

தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதற்குப் பதிலாக அவர்கள் இனவாதத்தையே வளர்த்து வந்தனர்.

கடந்தகால அரசியல் நிலமைகளை நோக்கும்போது அரசியல்வாதிகள் எனப்படுவோர் ஊழல் மோசடிகளில் தொடர்புடையவர்கள் எனவும் பிரச்சினைக்குரியவர்கள் எனவும் மக்கள் மத்தியில் கருத்துக்கள் காணப்படுகின்றன.

இதன் காரணமாக புத்திஜீவிகள் எனச் சொல்லப்படுவோர் அரசியலிலிருந்து நாங்கள் விலகி நிற்க வேண்டும் என்ற கருத்தையே கொண்டுள்ளனர்.

இலங்கையானது அரசியலாலும் அரசியல்வாதிகளாலும் அழிக்கப்பட்ட நாடாகவே காணப்படுகின்றது. ஜனநாயகத்துக்குத் தேவையான நான்கு தூண்களும் இங்கு வீழ்ச்சியடைந்திருக்கின்றது.

சமுதாயத்தில் அரசியல் சம்பந்தமாக வெறுப்புணர்வு ஏற்பட்டிருக்கின்றது. அரசியல் என்பது எமக்குத் தேவையில்லை நாம் எங்களுடைய வேலைகளைச் செய்துகொள்வோம் என மக்கள் நினைக்கின்றனர்.

ஆனால் அரசியல் என்பது மக்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான விடயமாகும். அநீதி, அசம்பாவிதங்களுக்கு எதிரான நீதியான சமுதாயம் ஒன்றை உருவாக்க வேண்டுமானால் நிச்சயமாக நாங்கள் ஒரு வேலைத்திட்டத்தை உருவாக்க வேண்டும்" என்றார்.

## 4 அமைச்சர்களையும் பெயரிடுங்கள்

### அமைச்சர் மகிந்த அமரவீரவுக்கு அழுத்தம்

கொழும்பு, ஒக்.24

அமைச்சரவைக் கூட்டத் தகவல்களை வெளியிட்டவர்களாகவும் 'றோ'வுடன் தொடர்புடையவர்களாகவும் தாங்கள் சந்தேகிக்கின்ற நான்கு அமைச்சர்களின் பெயர்களையும் உடனடியாக வெளியிடுமாறு அமைச்சர் மகிந்த அமரவீரவுக்கு அழுத்தமளிக்கும் வகையில் கோரிக்கைகள் வலுத்துள்ளன.

கொழும்பில் நடைபெற்ற இருவேறு ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போது நாடாளுமன்ற உறுப்பினர்களான சந்திம வீரக்கொடி மற்றும் வாசு தேவநாணயக்கார ஆகியோர் இந்தக் கோரிக்கைகளை முன்வைத்தனர்.

அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு:

வாசுதேவ நாணக்கார கூறுகையில், "அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அமைச்சரவைக் கூட்டத்தின் போது கூறியதாகக் கூறப்படும் விடயத்தை இந்தியாவுக்கும், 'றோ' அமைப்புக்கு, 'த ஹிந்து' பத்திரிகைக்குக் கூறியது யார்? அவ்வாறு நான்கு பேர் கூறியதாகக் கூறப்படுகின்றது அவர்கள் யார்? இந்த விடயத்தை ஹிந்து பத்திரிகை முதன்மைப் படுத்தியுள்ளது. அதற்கு நான்கு பேர் தகவல்களை வழங்கியதாகக் கூறப்படுகின்றது.

இங்கு 'றோ' சம்பந்தமான விடயத்தைக் கருத்தில் கொள்ளாது மிகமுக்கியமான ஒரு விடத்தைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

அதாவது, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் அதிகாரத்தை வலுவாக்கி அவரை அரசியலில் மேலும் நிலைத்திருக்கச் செய்யும் வகையிலும், அரச தலைவர் மைத்திரியை இந்தியாவுக்கு எதிரானவராகக் காட்டி அவரைச் சீர்குலைப்பதற்கும் சூழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன என்பது தெளிவாகப் புலப்பட்டுள்ளது. அதன் அங்கமாகவே த ஹிந்து பத்திரிகைக்கும் தகவல்கள் வழங்கப்பட்டிருக்கலாம். ஆகவே தகவல்களை வழங்கியவர்களை வெளிப்படுத்த வேண்டும். மகிந்த அமரவீர இதில் பின்னடிக்கக்கூடாது" என்றார்.

சந்திம வீரக்கொடி கூறுகையில், "அமைச்சர் மகிந்த அமரவீர நான்கு அமைச்சர்களில் இருவரைக் கண்டறிந்துவிட்டதாகவும் அவர்களுக்கான தண்டனையை அரச தலைவரும், தலைமை அமைச்சரும் வழங்க வேண்டும் என்றும் பகிரங்கமாகக் கூறியிருந்தார். அத்துடன் அவர்கள் 'றோ'வுடன் இணைந்து பணியாற்றுகின்றார்கள் என்றும் குறிப்பிட்டிருந்தார். ஆகவே முதலில் அந்த அமைச்ஙர்களின் பெயர்களை வெளியிட வேண்டும். அவ்வாறு தகவல்களை வெளியிடுவதற்குப் பின்னடிப்பாராயின் அமைச்சர் மகிந்த அமரவீரவும் 'றோ' புலனாய்வு அமைப்புடன் தொடர்புபட்டுள்ளார் என்ற சந்தேகத்தை நாம் வெளியிட வேண்டியது தவிர்க்க முடியாத ஒன்றாகிவிடும்" - என்றார். (31)

# கட்டாரில் கடும் மழை!

## ஓராண்டுக்குப் பெய்ய வேண்டிய மழை ஒரே நாளில்




டோஹா.ஒக்.24
மத்திய கிழக்கு நாடான கட்டாரில் கடந்த சனிக்கிழமையன்று கடும் மழை பெய்திருக்கின்றது. ஓராண்டுக்குப்பெய்ய வேண்டிய மழையின் அளவு கடந்த சனிக்கிழமையன்று, ஒரேநாளில் கொட்டித் தீர்த்தது. இதனால், கட்டாரின் தலைநகர் டோஹா உள்ளிட்ட பல்வேறு நகரங்கள் வெள்ளத்துக்குள் மூழ்கின. பாலைவன நாடான கட்டாரில் சனிக்கிழமையன்று திடீரென்று காற்றுடன் கூடிய பலத்த மழை பெய்தது. தொடர்ச்சியாகப் பெய்த மழையால், வீதியில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. சுரங்கப்பாதைகளில் வெள்ள நீர் தேங்கியது. வீடுகளு க்குள் வெள்ள நீர் புகுந்தது. விமானப் போக்குவரத்தும்கூட பாதிக்கப்பட்டது. கட்டார் மக்கள் இதுபோன்ற மழையை இதற்கு முன் பார்த்தது இல்லை. திடீரெனப் பெய்த இந்த மழை ஒரே நாளில் பெருமழையாக இருந்ததைக் கண்டு அவர்கள் அதிர்ச்சியில் உறைந்தனர். தலைநகர் டோஹாவில் பெரும்பாலான வீதிகளில் வெள்ள நீர் ஆறாகப் பாய்ந்தது. இதனால், வீதி ஓரத்தில் நிறுத்தப்பட்டிருந்த மகிழுந்துகள் வெள்ளத்தில் மூழ்கின. தாழ்வான பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்ததால், வீடுகளுக்குள் நீர் புகுந்தது. டோஹாவின் புறநகர்ப் பகுதியான அபு ஹாமரில் மட்டும் 61 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகி இருக்கிறது. டோஹாவின் ஆண்டு சராசரி மழைவீழ்ச்சியே 77 மில்லி மீற்றர் தான். ஏறக்குறைய ஒரு ஆண்டு பெய்ய வேண்டிய மழையின் பெரும்பகுதி ஒரேநாளில் கொட்டித் தீர்த்திருக்கிறது.

டோஹாவில் பெய்த கனமழையால் கட்டார் எயார்வேஸ் உள்ளிட்ட பல்வேறு பயணிகள் விமானங்கள், சரக்கு விமானங்கள் அண்டை நாடான சவூதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம், பஹ்ரைன் ஆகிய நாடுகளுக்குத் திருப்பி அனுப்பப்பட்டன. மேலும் சில விமானங்கள் குவைத் நாட்டுக்கும், ஈரான் நாட்டுக்கும் திருப்பி அனுப்பிவிடப்பட்டுக் கால நிலை குறித்த எச்சரிக்கை விடுக்கப்பட்டது. இதனால், டோஹாவில் விமானப் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டது. மேலும், சுரங்கப் பாதைகள், தாழ்வான சாலைகளில் மகிழுந்துகளை கொண்டு செல்ல வேண்டாம் என்று கட்டார் பொதுப்பணித்துறை மக்களுக்கு எச்சரிக்கை விடுத்தது. கட்டாரின் மிகப் பெரிய தேசிய நூலகம் மழை காரணமாக வேறு வழியின்றி மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டு, திங்கள் கிழமை பயன்பாட்டுக்குத் திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

அமெரிக்கத் தூதரகமும் ஞாயிற்றுக் கிழமை விடுமுறை விடப்பட்டது. கனமழை தொடர வாய்ப்புள்ளதால், மக்கள் வீடுகளில் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்றும், தாழ்வான பகுதிகள், சுரங்கப் பாதைகளில் மழை பெய்த பின் செல்ல வேண்டாம் என்றும் கட்டார் பொதுப் பணித்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

## கனடாவிலும் காஷ்மீரிலும் நில அதிர்வுகள்!




வான்கூவார்.ஒக்.24
நேற்றுமுன்தினம் மாலை கனடாவில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நில அதிர்வுகள் அதன் பல்வேறு பகுதிகளிலும் தொடர்ந்து ஏற்பட்டுக் கொண்டிருந்தன என்று அமெரிக்கப் புவியியல் அளவியல்த் துறை தெரிவித்திருக்கிறது. அத்துடன் நேற்றுக்காலை பாகிஸ்தான் இந்திய எல்லைப் பகுதியான காஷ்மீரிலும் நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது. கனடாவின் டோபினோவின் மேற்கிலிருந்து 149 மைல்கள் தொலைவில் 10 கிலோமீற்றர் ஆழத்தில் நில அதிர்வு உணரப்பட்டது.

பிரிட்டிஷ் கொலம்பியாவின் வான்கூவர் தீவில் உள்ள சிறிய நகராட்சியான போர்ட் ஹார்ட்டியின் தென் மேற்கில்135மைல் தொலைவிலும் சீட்டல் நகரின் வடமேற்கில் 355 மைல் தொலைவிலும் 6.6 நேற்று இரவு 10.39 மணியளவிலும் நிலநடுக்கம் ஏற்பட்டது. அடுத்த அரை மணிநேரத்தில் கனடியன் நகரத்திலிருந்து 122 மைலில்களில் ஏற்பட்ட நிலநடு க்கம் ஒன்று 6.8 ரிக்டர் அளவுகோலில் பதிவாகியது. அடுத்து ஆறு நிமிடங்கள் கடந்ததும், போர்ட் ஹார்டியின் தென் மேற்கே 138 தொலைவில் 6.5 ரிக்டர் அளவில் அதிர்வு ஏற்பட்டது. அடுத்து, 14 நிமிடங்களுக்குப் பிறகு அதே இடத்தில் மிதமான நிலநடுக்கம் 4.9 அளவில் பதிவு செய்யப்பட்டது.

அத்தோடு இது நிகழ்ந்து மறுநாள் காலை காஷ்மீரின் வடகிழக்கு மாவட்டங்களில் மிதமான நில அதிர்வு ஏற்பட்டிருக்கிறது. இது 5.6 ரிக்டர் அளவில் பதிவாகியுள்ளது. இந்த நிலநடுக்கங்கள் தொடர்பான சேதம் அல்லது காயங்கள் பற்றிய அறிக்கைகள் இன்னும் வெளியிடப்படவில்லை, சுனாமி எச்சரிக்கையும் வெளியிடப்படவில்லை.

## தாய்வானில் நிலநடுக்கம்!




தைபே.ஒக்.24
தாய்வானில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டிருந்தது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 5.7ஆகப் பதிவாகியது. தாய்வானில் கிழக்குப் பகுதியிலுள்ள கடற்கரை நகரமான ஹோலைன்னில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 5.7 ஆகவும், 34 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக ஏற்பட்ட அதிர்வுகள் தலைநகர் தைபே வரையும் உணரப்பட்டிருக்கிறது. எனினும் இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்த தகவல் ஏதும் இது வரை வெளிவரவில்லை.

தாய்வானில் பெப்ரவரி மாதம் ரிக்டர் அளவில் 6.4ஆகப் பதிவான நிலநடுக்கம் ஏற்பட்டிருந்ததும், அதில் 17 பேர் சாவடைந்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

## ஸ்ரீபன் ஹாக்கீமின் பொருள்கள் ஏலத்தில்!



லண்டன்.ஒக்.24
இயற்பியல் விஞ்ஞானியான் மறைந்த ஸ்ரீபன் ஹாக்கிமின் சக்கர நாற்காலி, ஆய்வறிக்கைகள் உட்பட 20பொருள்கள் ஏலம் விடப்பட உள்ளன. இணையம் (ஒன்லைன்) மூலம் நடைபெறும் இந்த ஏலத்தை 'கிறிஸ்ட்' ஏல நிறுவனம் அறிவித்துள்ளது. இந்த ஏலத்தில் ஸ்ரீபன் ஹாக்கீமின் இருபது பொருள்கள் இடம்பெற இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. குறிப்பாக, ஸ்ரீபன் வாழ்வில் பெரும்பகுதியைச் செலவிட்ட சக்கர நாற்காலிகள் மற்றும் அவரது புகழ்பெற்ற ஆய்வறிக்கைகள் இடம்பெறவுள்ளன. இந்தப் பொருள்கள் சுமார் ஒரு இலட்சத்து 30 ஆயிரம் டொலரிலிருந்து ஒரு இலட்சத்து 95ஆயிரம் டொலர் வரை ஏலம் போகும் என்றும் அந்த நிறுவனம் தெரிவித்திருக்கிறது.

**ஸ்ரீபன் ஹாக்கீம்**

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக இயற்பியலாளரும், உலக அளவில் அதிக அளவில் விற்ற நூல்களின் ஆசிரியருமான ஸ்ரீபன் ஹாக்கிங் மார்ச் மாதம் காலமானார். வேற்றுக் கிரகக் கற்கள், வேற்றுக் கிரக வாசிகள் பற்றிய தன்னுடைய பரந்தளவிலான ஆய்வுகளையும், கண்டு பிடிப்புக்களையும் நிகழ்த்தியிருந்தார். தனது சக்கர நாற்காலியில் இருந்தபடி 'காலத்தின் சுருக்கமான வரலாறு பெருவெடிப்பிலிருந்து கருந்துளைகள் வரை' (எ ப்ரீஃப் ஹிஸ்ரோறி ஒவ் ரைம் வ்ப்ரம் 'பிக் பேங் டு ப்ளாக் ஹோல்ஸ்') போன்ற புகழ்மிக்க நூல்களை எழுதியவர் ஸ்ரீபன் ஹாக்கிங். இந்த நூல்கள் ஒரு கோடி பிரதிகளுக்கும் மேல் விற்பனையாகிச் சாதனை படைத்தமை குறிப்பிடத்தக்கது.

## கொலம்பியாவில் நிலச்சரிவு 9பேர் சாவு பலர் புதையுண்டனர்!




பொகேட்டா, ஒக்.24
கொலம்பியாவில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 9 பேர் சாவடைந்துள்ளனர். பலர் புதையுண்டுள்ளனர். கொலம்பியாவின் வடக்குப் பகுதியில் உள்ள பாரம்கே பர்மேஜா நகரத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கியதில் 9 பேர் சாவடைந்துள்ளனர். அவர்களின் உடல்கள் நீண்ட நேரம் தேடுதலுக்குப் பிறகு மீட்கப்பட்டன. இறந்தவர்களில் 5 பேர் சிறுவர்கள். மேலும் இந்த நிலச்சரிவில் பலர் காணாமல் போயுள்ளனர். அவர்களைத் தேடும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. அதிகாலையில் ஏற்பட்ட கனமழை காரணமாகவே இந்த நிலச்சரிவு ஏற்பட்டுள்ளதாகவும் இதன் காரணமாக ஏராளமான வீடுகள் புதைந்துள்ளதாகவும் அந்தநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. கடந்த வருடம் கனமழை காரணமாக கொலம்பியாவில் ஏற்பட்ட நிலச்சரிவில் 200க்கும் மேற்பட்டோர் சாவடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஜமால் கொலை விவகாரம்

# ஜமாலின் ஆடையை அணிந்து வந்த சவூதியின் நபர் உடல் துண்டுகள் போடப்பட்டுக் கொண்டு செல்லப்பட்டதா? ‘சவூதியின் நகர்வுகளில் திருப்தியில்லை’ ட்ரம்ப் குற்றச்சாட்டு

ஜமால் கொலை விவகாரம் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே இருக்கிறது. ஜமாலின் ஆடைகளை அணிந்துகொண்டு அவரைப்போன்ற தோற்றமுடைய ஒருவர் இல்லாமபாத்திலுள்ள சவுதித் தூதரகத்தில் சவூதியின் தூதரகத்திலிருந்து வெளியேறும் கானெலியைத் துருக்கி வெளியிட்டிருக்கிறது. ஜமாலின் உடலைத் துண்டுகளாக்கிக் மகிழுந்தில் கொண்டு சென்றிருப்பதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருக்கின்றன. அத்துடன் அமெ.அதிபர் ட்ரம்பும் இதுகுறித்து விரிவான விசாரணை தேவை என்றிருக்கிறார்.




துருக்கி, ஒக், 24

சவூதியின் தூதரகத்தில் ஜமால் கொல்லப்பட்ட பிறகு அவரது ஆடைகளை அவரைப் போன்ற தோற்றமுடைய சவூதியைச் சேர்ந்த நபர் அணிந்து வரும் கானொலி ஆதாரத்தைத் துருக்கி வெளியிட்டுள்ளது. ஜமாலின் கொலையுடன் தொடர்புடைய சவூதியைச் சேர்ந்த 15 பேரில் ஒருவர் இஸ்தான்புல்லிலுள்ள சவூதித் தூதரகத்தில் ஜமால் கொல்ப்பட்ட பிறகு அவரது ஆடையை அணிந்து வெளியே வரும் காட்சி சி.சி.டி.வி. கமராவில் பதிவாகியுள்ளது. அந்த நபர் தூதரகத்தின் பின் வாசல் வழியாக வெளியேறுகிறார். அவர் ஜமாலைப் போன்ற தோற்றம் பெறுவதற்குப் போலியான தாடியைத் தனது முகத்தில் பொருத்தி இருக்கிறார் என்றும் துருக்கி கூறியுள்ளது. ஜமாலின் ஆடை அணிந்து வருபவரின் பெயர் முஸ்தபா அல் மதானி. அவர் சவூதி அனுப்பிய கூலிப்படைகளில் ஒருவர் என்றும் துருக்கி கூறுகிறது. அத்தோ்டு உடல் துண்டாக்கப்பட்டுச் சவூதி நபர்களால் மகிழுந்தில் ஜமாலின் உடல் எடுத்துச் செல்லப்பட்டதாகவும் புதிய தகவல்கள் வெளியாகியுள்ளன. அமெரிக்க ஊடகங்களே இந்தப் புதிய தகவல்களை வெளியிட்டுள்ளன. அந்தக் கானொலியில் சவூதித் தூதரக பகுதியில் இருந்து அடுத்தடுத்த மகிழுந்துகள் வேகமாக வெளியே புறப்பட்டுச் செல்கின்றன. முஸ்தபா அல் மதானி வெளியேறும் அதே வேளையில் இந்த கார்களும் வேகமாக செல்கின்றன. இந்தக் கார்களில் கொல்லப்பட்ட ஜமாலின் உடல் பாகங்கள் இருந்திருக்க வாய்ப்பு உள்ளதாகச் செய்தி வெளியிட்டுள்ளன.

இதனிடையே சவூதி அயலுறவு அமைச்சர் அடேல் அல் ஜுபைர் இதுகுறித்துக் கூறுகையில் "ஜமால் சாவு தொடர்பாக சவூதி அரேபியா விரிவான விசாரணை நடத்தி வருகிறது.

இந்த விவகாரத்தில் உண்மை முழுமையாக வெளியே வரும் என நம்புகிறோம். இதுபோன்ற சம்பவம் மீண்டும் நடக்காது. இதற்கு நாங்கள் உறுதி கூறுகிறோம்" எனக் கூறியுள்ளார். ஆனால், ஜமால் கொலை குறித்து சவுதியிடமிருந்து வரும் செய்திகள் திருப்திகரமாக இல்லை என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அமெரிக்க அதிபர் ட்ரம்ப் கூறும்போது, "சவூதி பத்திரிகையாளர் ஜமால் கொல்லப்பட்டது குறித்து சவூதியிடமிருந்து வரும் தகவல்கள் திருப்திகரமாக இல்லை. எனினும் அவர்களிடமிருந்து விசாரணை குறித்து வரும் தகவல்களை இழக்க விரும்ப வில்லை. நாம் இந்த வழக்கின் ஆழம்வரை செல்ல வேண்டும்" என்றிருக்கிறார்.

**பின்னணி**

கொலை செய்யப்பட்டிருப்பதாகக் கருதப்படும் ஜமால் அமெரிக்காவிலுள்ள வோஷிங்டன் போஸ்ட் பத்திரிகையில் சவூதி அரசை விமர்சித்தும் குறிப்பாக அதன் இளவரசர் முகமது பின் சல்மானை விமர்சித்தும் கட்டுரைகளை எழுதி வந்தார். துருக்கியைச் சேர்ந்த பெண்ணை ஜமால்திருமணம் செய்யவிருந்த நிலையில், கடந்த வாரம் துருக்கியின் இஸ்தான்புல் நகரிலுள்ள சவூதித் தூதரக அலுவலகத்துக்குச் சென்றவர் காணாமல் போனார். இந்த வழக்குத் தொடர்பாகச் சவூதியைச் சேர்ந்த 15 பேரின் பெயரை வெளியிட்டு ஜமாலை சவூதிதான் கொலை செய்திருக்கிறது என்று துருக்கி உறுதியாகக் கூறியதுடன், இதற்கான கானொலி மற்றும் ஒலிப்பதிவு ஆதாரத்தைத் துருக்கி வெளியிட்டிருந்தது. இதைச் சவூதி மறுத்து வந்தது.

இந்த சாவுக்கு சவூதி பொறுப்புக் கூற வேண்டும் என்றிருந்தார் அமெரிக்க அதிபர். அத்தோடு அமெரிக்க அயலுறவுத்துறை அமைச்சரையும் சவூதிக்கு அனுப்பியிருந்தார். பத்திரிகையாளர் ஜமால் கசோக்கி சவுதி அரேபியாவால் கொலை செய்யப்பட்டிருந்தால், அந்த நாட்டின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ட்ரம்ப் எச்சரித்திருந்தார்.

# தாய்வானில் தடம் புரண்ட விரைவு ரயில் விபத்துக்கான காரணம் தரும் அதிர்ச்சி



தைபெய்.ஒக்.24

தாய்வானில் இடம் பெற்ற ரயில் விபத்தில் 22 போர் சாவடைந்தும் 148 போர் காயம் அடைந்தும் இருந்தனர். விபத்துக் குறித்து அந்த ரயில் சாரதியிடம் விசாரணைகள் மேற்கெள்ளப்பட்ட போது அவர் கூறியிருந்த தகவல்கள் அதிர்ச்சியளிப்பனவாக உள்ளன. விபத்து நடப்பதற்குச் சிறிது நேரத்துக்கு முன்னர் ரயிலின் வேகம் குறைவாக இருந்ததால் தான் அந்த ரயில் வேகக்கட்டுப்பாட்டுக் கருவியை செயலிலக்கச் செய்ததாகவும் ரயிலின் வேகம் சீரான பின்னர் அந்தக் கருவியை மீண்டும் செயல்படுத்த மறந்து விட்டதாகவும் கூறியுள்ளார். இந்த ரயில் பயணிக்கவேண்டிய வேகம் மணிக்கு 74கிலோ மீற்றர்கள்தான் ஆயினும் விபத்து இடம் பெற்ற நேரத்தில் அது அதன் இரண்டு மடங்கு வேகத்தில், மணிக்கு 140 கிலோ மீற்றர் வேகத்தில் பயணித்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது இதுவே விபத்துக்கான காரணம் என்றுக் கூறப்படுகிறது.

**பின்னணி**

தாய்வான் நாட்டின் இலான் பகுதியில் விரைவு ரயில் ஒன்று தடம்புரண்டு விபத்துக்குள்ளானதில், 22பேர் சாவடைந்திருந்தனர். 148பேர் வரையில் காயமடைந்திருந்தனர். தாய்வானின் வட கிழக்கு பகுதியில் உள்ள இலான் கவுன்ட்டியில் கடலோரத்தை ஒட்டியதாகச் செல்லும் வகையில் விரைவு ரயில் பாதை அமைக்கப்பட்டுள்ளது. அந்த நாட்டின் தலைநகரான தைபெயில் இருந்து டைட்டுங் நகரை நோக்கிச் செல்லும் ரயில்கள் இந்தப் பாதை வழியாகச் செல்கின்றன. இந்த நிலையில் தைபெய் நகரில் இருந்து இந்தப் பாதை வழியாகப் பயணித்த ‘ ‘புயுமா எக்ஸ்பிரஸ்’ என்கிற விரைவு ரயில் டைட்டுங் நகரை நோக்கி வேகமாகச் சென்று கொண்டிருந்தது. அது க்சின்மா நிலையத்தின் அருகேயுள்ள டுங்ஷான் புறநகர் பகுதியை நெருங்கியபோது ரயில் பாதையில் இருந்து விலகியதால், தடம்புரண்டு விபத்துக்குள்ளானது. அந்த ரயிலின் முன்பகுதியில் இருந்த 8பெட்டிகள் முற்றிலுமாகச் சரிந்து விழுந்தன. பின்னால் இருந்த 5 பெட்டிகள் எதிர்த் திசையை நோக்கி வீசப்பட்டன. 360க்கும் அதிகமான பயணிகளைச் சுமந்துவந்து கொண்டிருந்த அந்த ரயில் தடம்புரள்வதற்குச்சிலநிமிடங்கள் முன்னதாகவே இயல்பு நிலைக்கு மாறாக குலுங்கியும், அதிர்ந்தும் ஓடிக் கொண்டிருந்ததாக அதில் வந்த சில பயணிகள் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பெற்றோல் கடத்திச் சென்ற ஊர்தி மோதல்; பாகிஸ்தானில் 7பேர் சாவு



இஸ்லாமாபாத். ஒக்.24

பாகிஸ்தான் ஈரானின் எல்லைப்பகுதியில் இருந்து பாகிஸ்தான் நோக்கிப் பெட்றோல் கடத்திச் சென்ற ஊர்தியுடன் பாரவூர்தி ஒன்று மோதிய விபத்தில் 7பேர் உடல் கருகிச் சாவடைந்தனர். ஈரான் நாட்டின் எல்லைப்பகுதியையொட்டியுள்ள பாகிஸ்தானில் பலூசிஸ்தான் மாகாணத்தில் வசிப்பவர்கள் ஈரான் எண்ணெய் கிணறுகளில் இருந்து குறைந்த விலைக்குப் பெட்றோல் வாங்கிப் பாகிஸ்தானில் உள்ள பிற பகுதிகளுக்குச் சட்டவிரோதமாகக் கடத்திச் சென்று அதிக விலைக்கு விற்று இலாபம் சம்பாதித்து வருகின்றனர்.

பலூசிஸ்தான் மாகாணத் தலைநகரான குவெட்டா நகரில் இருந்து சிபி என்ற இடத்தை நோக்கிக் கடத்தல் பெட்றோல் ஏற்றிச் சென்ற ஊர்தி மாச் என்ற பகுதியில் உள்ள சோதனைச்சாவடி அருகே வேகமாக வந்த பாரவூர்தியுடன் மோதியது. மோதியதும் தீப்பிடித்து எரிந்தது. இதன்போது 5 பேர் சம்பவ இடத்திலும் இருவர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியிலும் சாவடைந்தனர்.

# “உங்களைப் பாதுகாப்பதற்குத் தவறிவிட்டேன்” மன்னிப்புக்கோரிக் கண்ணீர்விட்டார் மொரிஸன்

மெல்போர்ன்.ஒக்.24

'பாடசாலைகளிலும், தேவாலயங்களிலும் குழந்தைகளுக்கு ஏற்படும் பாலியல் வதைகள், கொடுமைகளில் இருந்து ஆயிரக்கணக்கானோரைப் பாதுகாப்பதற்குத் தவறிவிட்டேன்', குழந்தைகளின் குரலைக் கேட்கத் தவறிவிட்டேன் எனக் கூறிக் குழந்தைகளிடமும், மக்களிடமும் ஆஸ்திரேலியத் தலைமை அமைச்சர் ஸ்கோட் மொரிஸன் மன்னிப்பு கோரியுள்ளார்.

ஆஸ்திரேலியாவில் பாடசாலைகள், தங்குமிடங்கள், ஆதரவற்றோர் இல்லங்கள், தேவாலயங்கள் போன்றவற்றில் குழந்தைகளுக்கும், சிறுவர், சிறுமியருக்கும் பாலியல் சித்திர வதைகள், பாலியல் துன்புறுத்தல்கள் நடக்கின்றன. பாலியல் ரீதியாகச் சுரண்டப்படு வதாக எழுந்த முறைப்பாடு குறித்து விசாரிப்பதற்கு ராயஸ் கமிஷன் உருவாக்கப்பட்டு விசாரணை நடத்தப்பட்டது. இந்த விசாரணையின் அறிக்கை கடந்த சில மாதங்களுக்கு முன் அரசிடம் வழங்கப்பட்டது.

அந்த அறிக்கையில், 10 ஆண்டுகளுக்கும் மேலாக குழந்தைகள் பாலியல் சித்ரவதைகளையும், துன்புறுத்தல்களையும், சுரண்டல்களையும் சந்தித்து வருகிறார்கள். அது குறித்து அரசுக்கு முறைப்பாடுகள் வந்தும் முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. தேவாலயங்கள், பள்ளிகள் போன்றவை சமூகத்தின் பார்வையில் இருந்து நல்ல ஒழுக்கம் கற்பிக்கும் கூடம் என்ற போர்வையில் குழந்தைகளிடம் அத்துமீறியுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டு இருந்தது. இந்த அறிக்கை குறித்து விரைவில் நாடாளுமன்றத்தில் விவாதம் நடைபெற உள்ளது. இந்தச் சூழலில் மொரிஸன் நாட்டு மக்களுக்கு உரையாற்றி அவர்களிடம் பொது மன்னிப்பு கோரியிருக்கிறார். குறிப்பாகக் குழந்தைகளிடம் "உங்களைப் பாதுகாக்க நான் தவறிவிட்டேன்" என்று உருக்கமாகக் கூறிக் கண்ணீர் விட்டு மன்னிப்பு கோரியுள்ளார். அத்தோடு, "குழந்தைகள் நீண்டகாலமாகப் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாகி வந்திருக்கிறார்கள். அவர்களைப் பாதுகாக்க நான் தவறிவிட்டேன். இதற்காக உங்களிடம் நான் மன்னிப்பு கோருகிறேன். இந்த அரசு மீது பெற்றோர் வைத்திருந்த நம்பிக்கைக்குத் துரோகம் செய்துவிட்டோம். குழந்தைகள் பாலியல் வதை விடயத்தை வெளியே கொண்டுவந்தவர்களின் குரலை அரசு செவிமெடுத்துக் கேட்கவில்லை, அதற்கு மன்னிப்பு கோருகிறோம்". என்றும் அவர் உறுதியளித்திருக்கிறார்.



உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஏமாற்றத்தோடு நிறைவடைந்த வடக்கு மாகாண ஆட்சி

வடக்கு மாகாணசபையின் முதலாவது ஆட்சிக்காலம் இன்றுடன் முடிவுக்கு வருகிறது. நேற்று அதன் கடைசி அமர்வு நடந்து முடிந்திருக்கிறது. பெரும் எதிர்பார்ப்புடன் தொடங்கியது இந்த ஆட்சி. ஆனால், ஒரு சராசரி ஆட்சியாக நிறைவு பெற்றுள்ளது.

வடக்கு கிழக்குத் தமிழ் மக்களின் போராட்டங்களால்தான் உருவானது மாகாணசபை அமைப்பு. எனினும் கிட்டத்தட்ட 30 ஆண்டுகளுக்குப் பின்னர்தான் வடக்கு மக்களுக்கு மாகாண சபை அரசே கிடைத்தது. அதிகாரம் அற்ற, புறக்கணிக்கப்பட்ட அலகுதான் அது. தமிழ் மக்களின் பிரச்சினைக்கானதீர்வாக ஒருபோதும் ஆகமுடியாதது என்று நிராகரிக்கப்பட்ட ஒன்று. தீர்வுக்கான அடிப்படையாகக்கூட அமைய முடியாதது என்று தெளிவாக வரையறுக்கப்பட்ட ஒன்று.

அந்த உண்மையை உலகத்திற்கு உரக்கச் சொல்வதற்கான தளமாகத்தான் வடக்கு மாகாண சபையின் முதலாவது ஆட்சியைத் தாம் கைப்பற்ற விரும்புவதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது பரப்புரைகளில் தெரிவித்திருந்தது. இதற்காகத்தான் நல்ல ஆங்கிலம் பேசக்கூடிய, உயர்ந்த அறிவுடையவர் என்று மதிக்கப்பட்டவரான முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் முதலமைச்சர் ஆக்கப்பட்டார். இது வடக்கு மாகாண சபையின் முதலாவது ஆட்சியின் மீதான எதிர்பார்ப்பை இன்னும் எகிற வைத்தது.

ஆனால், 5 ஆண்டுகள் கடந்து இந்த ஆட்சி முடிவுக்கு வந்த நிலையில் வடக்கு மாகாணசபை தனது இலக்கை எட்டியதா? மாகாண வளர்ச்சி, அரசியல் வளர்ச்சி என்பவற்றின் அடிப்படையில் மக்களின் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்ததா? என்கிற கேள்விகளுக்கு, நேற்றைய கடைசி அமர்வில் உறுப்பினர்கள் பலரும் ஆற்றிய உரையே தக்க பதில். கிட்டத்தட்ட அனைவருமே மக்களின் எதிர்பார்ப்பைத் தாம் பூர்த்தி செய்யவில்லை என்பதை ஒப்புக்கொண்டனர். சிலர் அதற்காக மன்னிப்பும் கேட்டனர். இன்னும் எவ்வளவோ செய்திருக்க வேண்டியது, ஆனால் உள்குத்துக்களால் முடியாமல் போய்விட்டது என்று கழிவிரக்கம் கொண்டவர்களும் பலர். ஆக, எதிர்பார்த்த வெற்றியைத் தாம் பெற்றுக்கொள்ளவில்லை என்பதை உறுப்பினர்களே ஏற்றுக்கொண்டனர்.

வடக்கு மாகாணசபை தமிழர்களின் ஓர் அடையாளம். அவர்களின் அதிகாரச் சண்டையின் துலாம்பரமான வெளிப்படுத்தல். அது தமிழர்கள் என்கிற அடையாளத்துக்கும் தேசியத்துக்கும் தெளிவான தலைமைத்துவத்தைக் கொடுத்திருக்க வேண்டும். கொடுத்ததா என்றால், தட்டுத் தடுமாறி ஏதோ சிலவற்றைச் செய்தது என்றுதான் சொல்ல முடிகிறது. இலங்கையில் நடந்தது இனப்படுகொலைதான் என்கிற தீர்மானங்கள் போன்ற ஒரு சில தீர்மானங்கள் மட்டுமே தமிழர்களின் கருத்தையும் வேணவாவையும் உலகத்திற்குப் பறைசாற்றுவதாக இருந்தன. ஆனால் மொத்தம் 437 தீர்மானங்களைக் கடந்த 5 ஆண்டுகளில் நிறைவேற்றியிருக்கிறது சபை.

கொழும்புடன் நேரடியாக அதிகாரச் சண்டையில் களமிறங்கியிருக்க வேண்டும் வடக்கு மாகாணசபை. மக்களிடம் அது தொடர்பான மிகப் பெரிய எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால், அது நடக்கவேயில்லை. வெறும் சச்சரவுகளில் ஈடுபட்டதோடு சரி. காத்திரமான அதிகாரச் சண்டை எதிலுமே கொழும்போடு மோதும் போக்கைக் கைதடி கைக்கொண்டதேயில்லை. குறிப்பாக மாகாண சபைகளுக்கு மேலதிக அதிகாரங்கள் தேவை என்பதை ஆணித்தரமாகச் சொல்வதற்கும், இருக்கும் அதிகாரங்களில் எவையும் உருப்படியானவை இல்லை என்பதை நிரூபிப்பதற்குமான சண்டைகளைக் கைதடி வெளிப்படுத்தவேயில்லை.


இவைதான் போகட்டும், பாதிக்கப்பட்ட மக்களை மீளக் கட்டியெழுப்புவதற்கான பொருளாதார, சமூகக் கொள்கைகளைக்கூட உருவாக்குவதற்குத் தவறிவிட்டது வடக்கு மாகாணசபை. அதனைச் செய்திருந்தாலாவது மக்களுக்கு ஓர் ஆறுதல் கிடைத்திருக்கும். ஆனால் அதுவும் நடக்கவில்லை.

மொத்தத்தில் அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் மறுவாழ்வு ரீதியாகவும் காத்திரமான கனதியான தலைமைத்துவத்தை வழங்கியிருக்க வேண்டிய வடக்கு மாகாண சபை அதைச் செய்யத் தவறிவிட்டது. கற்றறிந்த, பன்மைத்துவம்மிக்க உறுப்பினர்களைக் கொண்டிருந்தபோதும் இந்த இலக்குகளை வெற்றிகரமாக அடைய முடியவில்லை.

இந்த உண்மையை ஏற்றுக்கொண்டு செயற்பட்டால் மட்டுமே அடுத்து வரும் ஆட்சிகளாலாவது வெற்றிகரமாகச் செயற்படமுடியும்.

# அரசியல் அனுபவமில்லாத எனக்கு அதைப் புகட்டியதற்கு நன்றி!

“எந்தவித அரசியல் அனுபவமும் இல்லாத என்னை அரசியலுக்கு அழைத்து வந்து ‘நீந்தப் பழகிக் கொள்’ என்று நீரில் தள்ளிவிட்டதே எனக்கு நேர்ந்த கதி. அரசியல் அனுபவம் இல்லாதிருந்த எனக்கு அந்த அனுபவத்தைத் தந்த உங்கள் யாவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த அனுபவம் வீண் போகாது.” என்பதாகத் தன்னுடைய முதலமைச்சர் முடியுடன் இறுதி உரையை ஆற்றி முடித்திருக்கிறார் முதலமைச்சர் விக்கினேஸ்வரன். அவருடைய உரையின் முழுவடிவம் இங்கே தரப்படுகிறது..



அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் 1987ஆம் ஆண்டு மாகாணசபை நிர்வாகம் இலங்கையில் ஏற்படுத்தப்பட்டு 26 வருடங்களின் பின்னரே 2013ஆம் ஆண்டில் வடக்கு மாகாண சபைக்கான முதலாவது தேர்தல் நடைபெற்றது. தேர்தல் நடந்தபோது எமது மக்கள் கொடிய போர் ஒன்றின் ஊடான இன அழிப்பைச் சந்தித்து மிகவும் பலவீனமான நிலையில் இராணுவ நிர்வாகத்தின் கீழ் இருந்தார்கள். சொந்த பந்தங்களை இழந்து, சொத்துக்களை இழந்து, நிர்க்கதியான நிலையில் இராணுவ அடக்கு முறையின் கீழேயே எமது மக்கள் இருந்து வந்தார்கள். தடை முகாம்கள் ஆங்காங்கே காணப்பட்டன. நாம் கூட்டங்கள் கூடியபோது இராணுவ உயர் அதிகாரி ஒருவர் அங்கு வந்து மேடையில் அமர்ந்திருந்தார். இராணுவத்தினர் தேர்தல் நடவடிக்கைகளில் தாமும் மூக்கை நுழைத்திருந்தார்கள். வெளிப்படையாகச் சில வேட்பாளர்களுக்கு அனுசரணையும் வழங்கி இருந்தார்கள். எனினும் இணைந்த வடக்குக் கிழக்கில் எம்மை நாமே ஆளும் சுய நிர்ணய அடிப்படையில் அதிகாரம் எமக்குப் பகிரப்பட வேண்டும் என்ற எமது தேர்தல் விஞ்ஞாபனத்தை ஏற்றுக் கொண்டு முழுமையாக எம்மை நம்பி எமக்குப் பெருவாரியாக வாக்களித்து என்னையும் முதலமைச்சர் ஆக்கினார்கள் எம் மக்கள்.

மக்களிடம் முன்வைத்து வாக்குகள் கேட்ட அந்த விஞ்ஞாபனத்தின் முக்கிய விடயமொன்றை இன்றைய இந்த இறுதி உரையில் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

‘தமிழ் மக்கள் ஒரு தனிச்சிறப்பு மிக்க தேசிய இனமாவர். புவியியல் ரீதியாகப் பிணைக்கப்பட்டுள்ளதும் தமிழ் பேசும் மக்களைப் பெரும்பான்மையினராகக் கொண்டதுமான வடக்கு, கிழக்கு மாகாணங்களே தமிழ் பேசும் மக்களின் வரலாற்று ரீதியான வாழ்விடமாகும். தமிழ்ப் பேசும் மக்கள் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள். சமஷ்டிக் கட்டமைப்பொன்றை அடிப்படையாகக் கொண்டு இணைந்த வடக்கு, கிழக்கு மாகாணங்கள் எனும் ஓர் அலகில் அதிகாரப் பகிர்வு ஏற்பாடுகள் நிறுவப்பட வேண்டும். அதிகாரப் பகிர்வானது காணி, சட்டம் ஒழுங்கு, சுகாதாரம், கல்வி ஆகியன உள்ளிட்ட சமூகப் பொருளாதார அபிவிருத்தி வளங்கள் மற்றும் நிதி அதிகாரங்கள் ஆகியவற்றைக் கொண்டிருக்க வேண்டும்’.

இந்த வாக்குறுதிகளுக்குத் துரோகம் இழைக்காத வகையில் செயற்பட்டிருக்கின்றேன் என்ற திருப்தி எனக்கு இருக்கின்றது. தமது துன்பங்களை ஒரு பொருட்டாகக் கருதாது, பொருளாதார சலுகைகளுக்கும் அரை குறைத் தீர்வுகளுக்கும் இடமளிக்காமல் மக்கள் இந்தக் கோட்பாடுகளுக்காக வழங்கிய ஆணையே எனது அரசியல் மற்றும் பொருளாதாரச் செயற்பாடுகளின் வழிகாட்டிகளாக இருந்து வந்திருக்கின்றன. பல சவால்கள், தடைகள் மற்றும் குழிபறிப்புக்களுக்கும் மத்தியில் என்னால் முடிந்தளவுக்கு இந்தப் பாதை வழியே பயணம் செய்ய முடிந்திருக்கிறது.

தேர்தலில் வெற்றி பெற்றபின்னர் எமது மக்களின் துன்பங்களைத் துடைக்கக் கூடிய ஒரு நல்லெண்ண முயற்சியாக இராணுவ அடக்குமுறையின் கீழ் எம் மக்களை வைத்திருந்த அப்போதைய அரசதலைவர் முன்பாக எனது பதவிப் பிரமாண உறுதிமொழியை எடுத்திருந்தேன். ஆனால், அவர்கள் பக்கமிருந்து எந்தவித நல்லெண்ண நடவடிக்கைச் சமிக்ஞைகளும் கிடைக்கவில்லை. 2014ஆம் ஆண்டு ஜனவரி 2ஆம் திகதி அப்போதைய அரச தலைவரைச் சந்தித்தபோது எமது பல கோரிக்கைகளுக்குச் சாதகமாகத் தலையை ஆட்டிவிட்டு அவை எவற்றையும் அவர் நிறைவேற்றி வைக்கவில்லை. மாறாக எமது நிர்வாகச் செயற்பாடுகளுக்கும் பொருளாதார நடவடிக்கைகளுக்கும் அப்போதிருந்த இராணுவ ஆளுநர் ஊடாகத் தடைகளே ஏற்படுத்தப்பட்டன. இருந்தபோதிலும் எமது மக்களின் துயர்களைத் துடைக்கும் பணிகளை அதிகாரமற்ற மாகாண சபை ஊடாக மட்டுப்படுத்தப்பட்ட வளங்களுடன் முடிந்தளவு செய்துவந்தோம்.

**‘நல்லாட்சி’யிலும் மாற்றம் இல்லை**

புதிய ஆட்சி மாற்றத்தினூடாக எமது செயற்பாடுகளைச் செய்வதற்கு இடமளிக்கப்படும் என்றும், எமக்கு ஒரு நன்மாற்றம் ஏற்படும் என்றும் நாங்கள் எண்ணியபோதும் அது நடைபெறவில்லை. ‘நல்லாட்சி’ என்ற பலகைக்குள் ஒழிந்து நின்று அணுகுமுறைகளில் மாற்றத்தைக் காட்டினரே தவிர நோக்கங்கள், செயற்பாடுகளில் புதிய அரசு மாற்றத்தைக் காட்டவில்லை. முன்னைய ஆட்சியாளர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளையே தொடர்ந்து முன்னெடுத்துவருகின்றனர். சில ஏக்கர் நிலங்களை இராணுவத்தினர் வசமிருந்து விடுவித்துப் பன்னாட்டுச் சமூகத்துக்குப் பறை சாற்றிவிட்டுப் பல ஏக்கர் காணிகளை அபகரிக்கும் கைங்கரியந்தான் இன்று நடைபெற்று வருகின்றது. அரச காணிகள் 60ஆயிரம் ஏக்கர்களுக்கு மேல் இராணுவத்தின் கைவசம் இருந்து வருகிறது. இராணுவப் பாதுகாப்புடன் சிங்களக் குடியேற்றங்கள் ஒருபுறம் நடைபெற, மறுபுறம் முழுமையாகத் தமிழர் வாழும் இடங்களில் விகாரைகள் அமைக்கப்பட்டு பௌத்த மயமாக்கல் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டு வருகின்றன. ஆளுநர் அடங்கலான அரச அலுவலர்கள் பலர் இவற்றுக்கு ஆதரவு அளித்து வருகின்றார்கள். தெற்கிலிருந்து முதலீட்டாளர்களை இங்கு கொண்டு வரத் துடியாய்த் துடிக்கின்றார்கள். எம் புலம்பெயர்ந்தோர் இங்கு வந்து முதலிடுவதை வெறுக்கின்றார்கள்.

நல்லாட்சி என்ற பெயர்ப்பலகை அரசுக்குப் பன்னாட்டு ரீதியாக இருந்த நெருக்குவாரங்களைக் களைவதற்குப் பெரிதும் உதவியுள்ளது. சமஷ்டி என்ற பெயர்ப்பலகை தேவை இல்லை என்று கூறும் எம்மவர்கள் பெயர்ப் பலகைகள் மிகமிக முக்கியமானவையும் அவசியமானவையுங் கூட என்பதை இதன்மூலம் புரிந்துகொள்ள வேண்டும். எமக்குச் சாதகமாகப் பெயர்ப்பலகைகள் அமையாவிடில் எமது உச்ச நீதிமன்ற நீதியரசர்கள் ஒற்றையாட்சி என்ற கோட்டைத் தாண்டிப் பார்க்க மறுப்பார்கள் என்பதை நாங்கள் மனதில் கொள்ள வேண்டும்.

**நான் செய்த சேவைகளைக் குறுகிய நேரத்தில் விவரிப்பது கடினம்!**

கடந்த 5வருட காலத்தில் நாம் எமது மக்களுக்காக என்ன செய்துள்ளோம் என்பதைக் குறுகிய இந்த நேரத்தில் என்னால் விவரிப்பது கடினம். அதனால் நாம் ஆற்றிய முக்கியமான பணிகளைச் சுருக்கமாக விளக்கும் வகையில் தயாரித்துள்ள ஆவணமொன்றை கௌரவ அவைத்தலைவரிடம் சமர்ப்பிக்கிறேன். பிரதிகள் உங்கள் யாவருக்கும் இன்று கையளிக்கப்படும். 2009ஆம் ஆண்டு நடைபெற்ற இனஅழிப்புப் போரின் பின்னர் விரக்தி அடைந்து, ஆறுதல், அரவணைப்பு எதுவும் இன்றி எதிர்காலம் நிச்சயம்

(16ஆம் பக்கம் பார்க்க)

# ஆடத்தெரியாதவன் மேடை கோணல் என்று கூறிய கதை இது

**மக்களுக்கு நம்பிக்கையைக் கொடுக்கக் கூடிய விதத்தில் அன்று கூறியதில் ஏதாவது ஒன்றையேனும் கடந்த ஐந்து வருட காலத்தில் நடைமுறைப்படுத்தி இருக்கின்றோமா? நிதிமோசடி குற்றச்சா ட்டுக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்காமல் பனங்காட்டு நரியைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளையே செய்து வந்திருக்கிறோம் என்பதாகவும் மாகாண சபையின் இறுதி அமர்வில் தன்னுடைய சிறப்புரையை வழங்கியிருக்கிறார் வடக்கு மாகாண சபையின் எதிர்கட்சித் தலைவர் சி.தவராசா. அவருடைய உரையின் முழுவடிவம் இங்கே தரப்படுகிறது..**



மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் வெளியாகிய மறுதினம் பத்திரிகையொன்று 'மலர்ந்தது தமிழர் அரசு' என்ற தலைப்புடனான செய்தியை வெளியிட்டிருந்தது. இந்தச் செய்தியை ஒரு சொற்றொடருக்குரிய விளக்கமாக நான் பார்க்கவில்லை. தமிழ் மக்கள் தமது ஏகோபித்த ஆதரவுடன் அமைக்கப்படும் மாகாணசபையானது 'தமிழர் அரசு' எவ்வாறு தமிழ் மக்களுக்குச் சேவையாற்றுமோ அவ்வாறான சேவையை மாகாணசபை வழங்குமென்ற நம்பிக்கையுடனும் எதிர்பார்ப்புடன் இருந்தார்கள் என்பதையே அந்தச் செய்தித் தலைப்பு வெளிப்படுத்தியது.

இந்தச் சபையின் கன்னி அமர்விலே கௌரவ முதலமைச்சர் அவர்கள் இறைவனுக்குக் காணிக்கையைச் செலுத்தித் தன்னை வழிநடத்தும் குருநாதரைப் போற்றிப் பணிந்து ஆற்றிய உரை தமிழ் மக்களின் அந்த எதிர்பார்ப்பை மேலும் உறுதிசெய்வதாகவும் நம்பிக்கையூட்டுவதாகவும் அமைந்திருந்தது. தமிழ் மக்களின் எதிர்ப்பார்ப்புத் தன்னைச் சில்லிட வைப்பதாகக் கௌரவ முதலமைச்சரே தனது உரையில் குறிப்பிட்டிருக்கின்றார் கௌரவ முதலமைச்சரின் அன்றைய உரையில் தமிழ் மக்களுக்கு நம்பிக்கை அளிப்பதாக அமைந்த சில விடயங்களை அன்றைய பதிவேட்டிலிருந்து நான் நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

"இருக்கும் பொறிமுறைகளையும், வழிமுறைகளையும் முடியுமானளவு அனுசரித்து முன்னேறத் திடசங்கற்பம் பூண்டுள்ளோம்.

வெளிப்பாட்டுத்தன்மை, பதிலளிக்கப்பட வேண்டிய கடப்பாடு மற்றும் சட்டவாட்சிக் கொள்கை என்பவற்றின் அடிப்படையிலேயே வடமாகாண சபை இயங்கும்., இலஞ்ச ஊழல்களுக்கு இடமளிக்கப்பட மாட்டாது, அதேநேரத்தில் வடமாகாண சபை எப்பேற்பட்ட திட்டமிடப்பட்ட மனித பொருள் வளம் சம்பந்தமானதும் அபிவிருத்தி சம்பந்தமான நடவடிக்கைகளில் இறங்க வேண்டுமென்பதை அடையாளம் காண வேண்டிய அவசியத் தேவை எமக்குள்ளது.

புலம்பெயர்ந்த உறவுகள் மனிதவளம், பொருள் வளம் சம்பந்தமாக எமக்கு அனுசரணைகள் ஈர்வர் என்பதில் எமக்கு நம்பிக்கையுண்டு. நிதியுதவிகளையும் இது சம்பந்தமாக எமக்கு வழங்கக் கோருகின்றோம். எம்மைப் பொறுத்தவரை நாம் நாட்டவிருக்கும் அத்திபாரக் கற்கள் நீதி, நல்லாட்சி, நம்பிக்கை, சமத்துவம், சுதந்திரம் என்பனவாகும்.

பாதுகாப்பு, கல்வி, வேலைவாய்ப்பு என்பவற்றை நோக்கிய நாம் அமைக்கப்போகும் பாதைகள் செல்லும். பன்னாடுகள் இரண்டு தரப்பாரின் ஒத்துழைப்புடன் எமக்குத் தொழில் சார் அறிவுரைகளை வழங்கி, நிதி வழங்கி மேற்கண்டவற்றை வெற்றிகர நடாத்தி முடிக்க எமக்குப் பக்கபலமாகவும் பலமாகவும் இருப்பார்கள் என்று எதிர்பார்க்கின்றேன்"

எம்மக்களுக்கு நம்பிக்கையைக் கொடுக்கக் கூடிய விதத்தில் அன்று கூறியதில் ஏதாவது ஒன்றையேனும் கடந்த ஐந்து வருட காலத்தில் நடைமுறைப்படுத்தி இருக்கின்றோமா என்று இந்தத் தருணத்தில் மீளாய்வு செய்வதில் தவறில்லையென்று கருதுகின்றேன்.

**முழுமையான நேரத்தை. குறித்த விடயங்களில் மாத்திரம் செலவளித்திருக்கக்கூடாது**

அதற்கு முன் ஒரு விடயத்தைத் தெளிவுபடுத்த விரும்புகின்றேன். அரசமைப்பு மாற்றம் தொடர்பான விடயங்களோ, இராணுவத்தினால் கையகப்படுத்தப்பட்டிருக்கும் காணிதொடர்பான விடயங்களோ, காணாமற்போனோர் தொடர்பாக உண்மையைக் கண்டறியும் விடயங்களிலோ மாhகாணசபை தலையிட வேண்டாம் என்று நான் கூறவில்லை. இந்த விடயங்களில் எமது கருத்தைப் பதிவு செய்தததில் எந்தவிதமான தவறும் இல்லை. ஆனால், இவ்வாறான விடயங்களில் மட்டும் எமது நேரத்தை முழுமையாகச் செலவழித்துக் கொண்டு மாகாணசபையின் நிறைவேற்று செயற்பாடுகளையும் மக்களுக்கான அபிவிருத்தியையும் புறந்தள்ளுவது தான் எனது குற்றச்சாட்டு.

**அபிவிருத்தி முக்கியமானதுவே!**

முதலமைச்சர் தனது உரையில் எங்களுக்கு அபிவிருத்தி முக்கியமல்ல என்று குறிப்பிட்டிருந்தார். கனவான் அரசியல் செய்பவர்களுக்கு அபிவிருத்தி முக்கியமற்றதாக இருக்கலாம். ஆனால், 30வருடங்களுக்கு மேலாகப் போரால் எல்லாவற்றையும் இழந்து தமது வாழ்வாதாரத்துக்காகப் போராடிக் கொண்டிருக்கும் மக்கள் இன்னும் எவ்வளவு காலத்துக்கு இவ்வாறே இருக்க வேண்டுமென்று விரும்புகின்றீர்கள்.

முதலமைச்சர் நிதியத்தை ஆளுநர் அனுமதிக்காததால் தான் எம்மால் புலம்பெயர்ந்தவர்களின் முதலீடுகளைப் பெற்று அபிவிருத்தியை மேற்கொள்ள முடியவில்லையென முதலமைச்சர் தனதுரையில் குறிப்பிட்டார். ஆடத்தெரியாதவன் மேடை கோணல் என்று கூறியது போலதான் இது அமைகின்றது. புலம்பெயர்ந்தவர்களின் நிதியை ஒருங்கிணைத்து அபிவிருத்தி வேலைகள் செய்வதாயின் எத்தனையோ நிதியங்களை ஆரம்பித்து அதனூடாக புலம்பெயர் பங்களிப்பை ஒன்றிணைத்து செயற்படுத்தியிருக்க முடியும். ஆளுநர் வெளிநாடுகளுக்கு சென்று புலம்பெயர்ந்தவர்களை முதலீடு செய்ய அழைப்பதாக முதலமைச்சர் கூறியிருந்தார். அவர் என்ன ஆளுநர் நிதியத்தை ஏற்படுத்தி விட்டா முதலிட வரும்படி கூறியிருந்தார். புலம்பெயர்ந்தவர்கள் முதலீடு செய்வதற்கு நிதியம் தேவையில்லை.

**இதுகாறும் நாம் செய்த தவறுகள்**

இனி நாம் விட்ட தவறுகள், இழந்த சந்தர்ப்பங்கள், வினைத்திறனற்ற செயற்பாடுகளை, அதிகார வரம்புமீறல் மற்றும் துஸ்பிரயோகங்கள் என்பனவற்றில் முக்கியமான சிலவற்றை நினைவூட்ட விரும்புகின்றேன்.

யாழ். கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றல் திட்டத்தை நிராகரித்து விட்டு மாற்று ஏற்பாடுகளை செய்வதாக இந்தச் சபையில் அறிவித்திருந்தும், இதுவரை மாற்று ஏற்பாடுகள் எதுவும் செய்யப்படாமை கையிலிருந்ததையும் நழுவ விட்ட எமது கெட்டித்தனமாகத்தான் பார்க்க வேண்டியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிடப் பிரதிநிதிக்குப் பெயர் குறிப்பிட்டு ஓர் ஆலோசகரைச் சிபார்சு செய்ததன் விளைவாக எமக்குக் கிடைக்கவிருந்த நிதியை இழந்து யு.என்டி.பி உடன்; பெரிய முரண்பாட்டைத் தோற்றுவித்ததன் மூலம் தனிநபருக்காக ஒரு பன்னாட்டு ஸ்தாபனத்தையே பகைக்கின்ற நிலைக்கு நாம் திறமைசாலிகள் என்பதை நிருபித்துள்ளோம்.

இந்தியத் தலைமை அமைச்சர் யாழ்.வந்திருந்த போது எம்மக்களின் துயர்துடைக்க இந்தியாவின் அனுசரணையை வேண்டி நிற்பதற்குப் பதிலாக ஆயுள்தண்டனை அனுபவித்து வரும் பிரேமானந்த சுவாமி ஆச்சிரமத்தைச் சேர்ந்த கொலையாளிகள் நான்கு பேரின் விடுதலை தொடர்பாகக் கோரிக்கை விட்டது எம் மக்களின் பிரச்சினைகளில் எமக்கு உண்மையில் எவ்வளவு அக்கறையிருக்கின்றது என்பதைத் தெளிவுபடுத்துகின்றது. மாகாணத்துக்கு வேண்டிய நிதித்தேவைப்பாட்டை அதன் நியாயப்பாடுகளுடன் கொழும்பைக் கோராது இருந்துவிட்டு எமக்கு அரசு போதிய நிதி தருவதில்லையென்ற சபையில் உரக்கக் கூறி எமது இயலாத்தன்மையை மூடிமறைத்துள்ளோம்.

முதலீட்டு வாய்ப்புக்களை ஊக்குவிக்கும் நோக்குடனான பெரிய துறைசார் அபிவிருத்தி திட்டங்கள் எதுவும், சுகாதார அமைச்சைத் தவிர, எந்த அமைச்சுக்களினாலோ, அல்லது திணைக்களங்களினாலோ மேற்கொள்ளப்படாமை எமது இயலாத் தன்மைக்கு இன்னோர் எடுத்துக்காட்டு.

**உதவிகளைத் தட்டிக் கழித்ததே எமது வரலாறு**

இதுவரை எம்மால் 15 நியதிச்சட்டங்களே முழுமையாக ஆக்கப்பட்டு வர்த்தமானியில் பதிப்பிக்கப்பட்டுள்ளது. நியதிச் சட்ட விடயத்தில் நொண்டிக் குதிரைக்குச் சறுக்கின சாட்டுப் போல் எமக்கு நியதிச் சட்டங்களை ஆக்குவதற்கு தனியான ஒரு சட்ட வரைபு பிரிவினை அரசு ஏற்படுத்திக் கொடுக்கவில்லையெனக் கூறிக்கொண்டிருக்கலாம். ஆனால், வெளிநாட்டுத் தூதரகங்கள் மற்றும் சட்டவரைபு நிபுணர்களைக் கொண்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் எமக்கு உதவ முன்வந்தும் அதனை தட்டிக் கழித்ததே எமது வரலாறு. சபைத்தலைவர் அதற்கு முட்டுக்கட்டையாக இருக்கின்றார் என்ற ஒரு புதிய கட்டுக்கதையும் இப்போது அவிழ்த்துவிடப்பட்டுள்ளது. நியதிச்சட்டங்களுக்கு அமைவாக ஒழுங்கு விதிகள், சேவைப் பிரமாணக் குறிப்புகள் என்பன வரையப்பட்டு வர்த்தமானியில் பதிப்பிக்கபட வேண்டும். இதுவரை அது தொடர்பாக எதுவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாமை எமது இயலாத்தன்மைக்கு இன்னொரு ஆதாரம்.

லண்டன் மாநகரில் உள்ள கிங்டன் உள்ளூராட்சி மன்றத்துக்கும் அதேபோல் கனடாவிலுள்ள மார்க்கம் நகராட்சிக்கும் இடையில் செய்யப்பட்ட ஒப்பந்தங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் எதுவும் செயற்படுத்தப்பட முடியாது என நான் முன்னரே இந்தச் சபையில் சுட்டிக்காட்டியிருந்தேன். இன்று யாராவது அந்த ஒப்பந்தங்களில் உள்ள விடயங்கள் ஏதாவது ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றது என்று காட்ட முடியுமா?

ஒரு சிறிய நிர்வாகச் செயற்பாட்டைக் கூடச் செயற்படுத்தத் திறனற்றவர்களாக செயலாளர்களுக்கான சுற்றறிக்கையொன்றை முதலமைச்சரின் கையொப்பத்துடன் அனுப்பி, இறுதியில் நீதிமன்றத்தில் அந்தச் சுற்றறிக்கையத் திரும்பப் பெறுவதாக ஒப்புக் கொண்ட பெருமை எம்மைச் சாரும்.

**நிதி விடயத்தில் நான் கொடுத்த அழுத்தமே பின்னரான வேலைத் திட்டங்களுக்கு வழிசமைத்தது**

அரசால்வழங்கப்படும்மூலதனநிதியைக்கூட முழுமையாக, (22ஆம் பக்கம் பார்க்க)

## ஆசிரியருக்கான கடிதம்

# ஊருக்கு உபதேசம் செய்யும் விக்னேஸ்வரன்

வடமாகாண முதலமைச்சர் விக்கினேஸ்வரன் தன்னை ஓர் எளிமையான் மனிதராகத் தமிழ் மக்களுக்குக் காட்ட முனைகிறாரா? அல்லது தமிழ் மக்கள் எதிர்த்துக் கேள்வி கேட்கக்கூடாது என நினைக்கிறாரா?

போர்க் காலத்தில் பெற்றோல் இல்லாமல் மோட்டார் சைக்கிள் ஓடியது, ஜாம் போத்தலுக்குள் திரியிட்டு 'மின் மினி' விளக்குத் தயாரித்து, அதில் பிள்ளைகள் படித்தது, சைக்கிள் டயனமோவில் மின்சாரம் எடுத்து(மின்கலத்துக்குத் தடை) வானொலியில் பி.பி.சி தமிழோசை, வெரித்தாஸ் வானொலி கேட்டது. உரலில் நெல் குற்றி, மா இடித்து, தரமற்ற சைக்கிளில் பல மைல்கள் ஓடி, இடப்பெயர்வுகள், துன்பங்கள் என அனுபவித்து, இறுதிப்போரில் பிணத்தை அருகில் வைத்து உணவு உண்டது. பெரும் பகுதி நேரத்தைப் பதுங்கு குழிக்குள் இருட்டில் கழித்தது போன்ற துன்பங்களை அனுபவித்த எங்களுக்குக் கொழும்பிலிருந்து வந்த விக்னேஸ்வரன் நீதிக்கதை சொல்லும் நிலமை வந்துவிட்டதை எண்ணி அழுவதா? சிரிப்பதா? என்று தெரியவில்லை.

அம்மி, உரல், திருகை, மூக்குப்பேணி ஆரோக்கியம் ஆரோக்கியம் என்றெல்லாம் உபதேசிக்கிறார். சாவு வீடு நடந்தால், பெரிய பாய்களை விரித்து அமர்ந்திருந்து தேவாரம் பாடு என்கிறார். இவர்கூறுவது எல்லாம் இவரது கொழும்பு 7வீட்டில் உள்ளனவா? தமிழ்ச் சனத்தை மீண்டும் கற்காலத்துக்கு அனுப்பிவிட்டு அவர் மட்டும் 60ஆயிரம் அமெரிக்க டொலர் பெறுமதியான சொகுசு வாகனத்தில் பயணம் செய்ய ஆசைப்படுகிறார். இவரைப் பற்றிக் கதைப்பதற்கு இன்னும் நிறைய இருக்கிறது. என்னதான் இருந்தாலும், போதிப்பவர்கள் யாராக இருந்தாலும் முதலில் அவர்கள் அதன்படி வாழ்ந்து காட்ட வேண்டும். அதைப் பார்த்து மக்கள் பின்பற்றுவார்கள்.

வெறும் காலுடன் ஊரில் நடந்து திரிந்த பேராசிரியர் துரைராஜாவைக் கண்டவர்கள் நாங்கள். கிளிநொச்சி வரை தனது சைக்கிளில் ஓடித் தனது துணைவேந்தர் பதவியைச் செவ்வனே செய்தவர். இவ்வளவையும் கண்டு அனுபவித்த எங்களுக்குக் கொழும்பில் பிறந்து வளர்ந்த விக்னேஸ்வரன் எளிமையாக வாழ்வது எப்படி என்று சொல்லித்தருவதைக் கேட்கும் நிலை இன்றைக்கு! இதை யாரோடு நோவோம்? எல்லாம் தமிழர் நம் தலைவிதி.

**மா.பாலசுப்பிரமணியம். நெல்லியடி**

(14ஆம் பக்கத் தொடர்ச்சி...)

நிலையில் எம் மக்கள் இருந்தார்கள். அவர்களுக்குத் தென்பூட்டி, அரசியல் தெளிவூட்டுவது முக்கியமான பணியாக எனக்குத் தென்பட்டது. இதைச் செய்ய வேண்டியவர்கள் வாளாதிருந்தது மனவருத்தத்தை ஊட்டியது. ஆகவே மக்களுக்குத் தெளிவூட்டி, எமது உரித்துக்களை நாம் கேட்பது எமது உரிமை என்பதையும், எமது உரிமைகள் என்ன, எமது தீர்வுக்கான அடிப்படைகள் என்ன, இவற்றை நாம் விட்டுக்கொடுக்க முடியுமா? என்பனவற்றைப் பற்றியும் மக்கள் மத்தியில் விதைப்பதற்குக் கணிசமான நேரத்தைச் செலவிட வேண்டிய அவசியம் எனக்கு ஏற்பட்டது. இன்று மக்கள் தாமாகவே இராணுவ முகாம்களுக்கு முன்பாக நின்று தமது காணிகளை மீட்பதற்கும், காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளை மீட்பதற்கும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கும் தொடர் போராட்டங்களை நடத்துவதுடன் போரில் உயிரிழந்த தமது உறவுகளை நினைவு கூருவது தமது உரிமை என்று கூறி பெரும் எழுச்சியுடன் செயற்படுவதற்கும் தயங்காது முன்வந்துள்ளார்கள். எமக்கெல்லாம் பெரிதும் நம்பிக்கை அளிக்கும் வகையில் எமது மாணவ சமுதாயம் ஜனநாயக ரீதியிலான காத்திரமான பல போராட்டங்களை முன்னெடுத்துவருகின்றது. மீண்டும் பயங்கரவாதம் என்ற பெயர்ப் பலகையைப் பாவிக்க அரசு முனைந்துள்ள போதும் நாமும் எம் மக்களும் அதற்குப் பயந்து ஒடுங்கி விடாமல் முன்னேறி வருகின்றோம்.

**எனக்கு எதிரான தீர்மானத்தை முறியடித்த இளம் சமுதாயத்துக்கு நன்றிகள்**

எமது மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலையைப் பன்னாட்டுச் சமூகத்துக்கு எடுத்துக்கூறிப் பன்னாட்டுச் சமூகத்தினூடாக அதற்கான பரிகார நீதியைப் பெற முடிந்தவரை குரல் எழுப்பியுள்ளேன். இறுதிப் போரில் நடைபெற்றது ஓர் இன அழிப்பே என்பதை நிறுவி எமது மாகாணசபையில் அதை ஒரு தீர்மானமாக நிறைவேற்றி ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை சபைக்கு அனுப்பிவைத்திருந்தோம். அதை ஏகமனதாக ஏற்று முன்னெடுப்பதற்குக் கௌரவ அவைத் தலைவர் அவர்கள் உறுதுணையாக இருந்தார் என்பதை இங்கு பதிவு செய்து கொள்ள வேண்டும். அதைக் கொண்டுவர எனக்கு ஊக்கியாய் இருந்தவர் கௌரவ உறுப்பினர் எம்.டி.சிவாஜிலிங்கம் என்பதையும் இங்கு நான் பதிவு செய்ய வேண்டும்.

எனினும் இதன் பின்னரே என்னைப் பதவியில் இருந்து அகற்றும் நடவடிக்கைகளும் எனக்கு எதிரான பொய்யான பரப்புரைகளும் தீவிரப்படுத்தப்பட்டன. ஒரு வேளை தமக்குக் கிடைக்கவிருந்த அமைச்சுப் பதவிகள் இந்தத் தீர்மான நிறைவேற்றத்தால் கிடைக்காமல் போனதன் ஆதங்கம் சிலரிடத்தில் இருந்து வேலை செய்ததோ நான் அறியேன். எனினும் எனக்கு எதிராக நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டபோது மக்கள் தாங்களாகவே கிளர்ந்தெழுந்து குறிப்பாக இளஞ் சமூகம் அதை முறியடித்தமையை நன்றியுடன் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் நினைவுபடுத்திக்கொள்கின்றேன்.

**ஆளுநர் கைக்கு அதிகாரம் சென்றதும் தடுத்து நிறுத்தப்பட்ட திட்டங்கள் ஆரம்பிக்கப்படும்**

கட்டமைப்பு சார் இனவழிப்பின் ஓர் அங்கமாக அரசியல் ரீதியாகவும், சுற்றாடல் ரீதியாகவும் தீமை பயக்கும் பல திட்டங்களை அபிவிருத்தி என்ற போர்வையில் சாதாரண மக்கள் பகுத்தறிந்து கொள்ள முடியாதவகையில் அரசு நிறைவேற்ற முற்பட்ட வேளையில் எமது துறைசார் நிபுணர்களின் உதவியுடன் நாம் தடுத்துள்ளோம். பல திட்டங்களை மக்களே தமது ஆர்ப்பாட்ட நடவடிக்கைகள் மூலம் தடுத்திருக்கின்றார்கள். உதாரணத்துக்கு 37 அடுக்கு சுற்றுலா உணவகமொன்றுக்குத் தீவகப் பகுதிகளில் மத்திய அரசின் அனுசரணையுடன், உரிய மாகாண அறிக்கைகளையும் அனுமதியையும் பெறாது அத்திபாரம் போட முனைந்தபோது அதை மக்கள் தடுத்து நிறுத்தினார்கள்.

நாளையுடன் கலையும் எமது மாகாண சபையின் நிர்வாகம் ஆளுநர் கையில் சென்ற பின்னர் இவ்வாறான திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டு செயற்படுத்தப்படும் பெரும் ஆபத்து எம்மை நோக்கி இருக்கின்றது. இவற்றையெல்லாம் தடுக்க எமது நிர்வாக உத்தியோகத்தர்கள் அந்தந்த துறைசார் நிபுணர்களின் உதவியுடன் இனம்கண்டு, விழிப்புடனும் கடமை உணர்வுடனும் செயற்பட முன்வரவேண்டும் என்று அன்புடன் வேண்டிக்கொள்கின்றேன். குழந்தைகளுக்குப் பொம்மைகளைக் காட்டி அழவைக்காது ஆறுதல்படுத்துவது போல் எமது உரிமைகளை எமக்கு வழங்காது பொருளாதார அபிவிருத்தி என்ற பொம்மையைக் காட்டி எம்மை நிரந்தரமாகத் தமது அதிகாரத்தின் கீழ் விழவைக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை முன்கூட்டியே உங்களுக்குக் கூறி வைக்கின்றேன். பொம்மைகளில் மனம் மயங்கி உரிமைகளைப் பெறாது கோட்டை விடப் போகின்றீர்கள் என்ற கருத்தை உங்களுக்குக் கூறி வைக்கின்றேன். தெற்கிலிருந்து பெரிய முதலீடுகளைப் பெற்று விட்டு எமது உரிமைகளைத் தியாகஞ் செய்ய எம் மக்கள் ஆயத்தமாக இருக்கின்றார்களா? என்பதை நாம் எம் மக்களிடமே கேட்டு அறிந்து கொள்ள வேண்டும். அப்போதைய அரசு தருவதாகக் கூறிய அனுசரணைகளைப் புறக்கணித்து விட்டே எம்மை எம் மக்கள் 2013ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதியன்று தேர்ந்தெடுத்திருந்தார்கள் என்பதை நாம் மறக்கக் கூடாது.

**கொழும்பு அரசு எமக்குத் தேவையான அளவு நிதியை ஒதுக்கவில்லை**
**ஒதுக்கிய நிதியில் ஒரு சதத்தைக்கூட நாம் திருப்பியனுப்பியதில்லை**

பெரிய போர் அழிவைச் சந்தித்த மாகாணம் என்றவகையில் எமக்கான நிதி ஒதுக்கீட்டுக்கு அதிக தேவையிருந்தும் கொழும்பு அரசால் குறித்தொதுக்கப்படும் குறைந்தபட்ச நிதியும் முழுமையாக விடுவிக்கப்படவில்லை என்பதை உங்களுக்குநினைவுபடுத்துகின்றேன். அவ்வாறு எமக்கு வழங்கப்பட்ட நிதியில் ஒரு சதம் கூட மத்திய அரசுக்குத் திரும்பிப் போகாத வண்ணம் நாம் திட்டங்களைச் செயற்படுத்தியிருக்கின்றோம். ஆனால், எம் மீது உள்ள அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாகத் திட்டங்கள் நடைமுறைபடுத்தப்படாமல் பெருமளவு நிதி மீண்டும் மத்திக்குத் திரும்பிச் செல்வதாகப் பொய்யான பரப்புரைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இன அழிப்பு போரினூடாக எமது மக்களின் பொருளாதார உட்கட்டுமானங்களை நிர்மூலம் செய்து அவர்களின் வாழ்வாதாரக் கட்டமைப்புக்களை இல்லாமல் செய்து தொடர்ந்து வந்த அரசுகள் அவற்றை மீளக் கட்டியெழுப்புவதற்குப் போதுமான நிதியை வழங்கவில்லை என்பதே உண்மை. ஆனால் எம்முடைய காலம் முடிவடையப் போகிறது என்பதை அறிந்து கொண்ட அரசு 2019ஆம் ஆண்டுப் பாதீட்டில் 4ஆயிரம் மில்லியனுக்கும் மேற்பட்ட தொகையை அங்கீகரித்துள்ளதாக அறிய வருகின்றது. இந்த ஐந்து வருடங்களிலும் இவ்வாறான தொகை எமக்கு ஒதுக்கப்படவில்லை.

இந்த நல்லாட்சி அரசில் பாதுகாப்புக்கான நிதி ஒதுக்கீடானது முன்னர் போர் நடக்கும்போது ஒதுக்கப்பட்ட நிதியின் பன்மடங்காக அதிகரித்துள்ளது. 2018ஆம் ஆண்டில் 290 பில்லியனாக இருந்த பாதுகாப்புக்கான நிதி 2019க்கான உத்தேச வரவு செலவுத் திட்டத்தில் சுமார் 306 பில்லியனாக அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆனால் போர் உக்கிரமாக நடைபெற்ற 2009ஆம் ஆண்டு பாதுகாப்புக்கான நிதி ஒதுக்கீடு 175 பில்லியன்களாகவே இருந்தது. அதேவேளை, புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு அமைச்சுக்கு 2018ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட நிதி வெறும் 11 பில்லியன்களே. இந்தச் சொற்ப நிதியில் இருந்து கணிசமான நிதியை வடக்கில் பொது மக்களின் காணிகளில் இருந்து இராணுவத்தினர் வெளியேறுவதற்காகப் புனர்வாழ்வு அமைச்சு வழங்கிய விசித்திரமான நிலைமை உங்களுக்கு நினைவிருக்கும்.

இந்த நிலையில், வடக்கு ஆளுநர், புலம் பெயர் தமிழ் மக்கள் வாழும் நாடுகளுக்குப் பயணம் செய்து வடக்கின் அபிவிருத்தியை முன்னெடுக்க முதலீடுகளைச் செய்யுமாறும் ஒத்தாசை புரியுமாறும் அங்குள்ள எமது மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். இதே கருத்தை நான் அதிமேதகு அரச தலைவரிடம் கூறி உங்களுக்கு வெளிநாட்டுச் செலாவணியை எம் புலம் பெயர் மக்கள் பெற்றுத் தருவார்கள், முதலமைச்சர் நிதியத்தை நிறுவ உதவி தாருங்கள் என்று கூறியபோது 'சரி' என்று கூறிவிட்டு இது வரையில் அதற்கான அனுமதி தரப்படவில்லை. தமது கட்டுப்பாட்டின் கீழ் எமது வளர்ச்சி அமைய வேண்டும் என்பதில் அவர்கள் கண்ணும் கருத்துமாய் உள்ளார்கள். எம்மவர் சிலர் 'அதற்கென்ன?' என்கின்றார்கள். வரப்போகும் இன மறைவு அவர்களுக்கு ஒரு பொருட்டல்லப்போல் தெரிகின்றது. ஆளுநர் ஆட்சியில் அறுவைச் சிகிச்சை வெற்றியளிக்கும் ஆனால் நோயாளி இருந்த இடம்தெரியாமல் மறைந்து விடுவான்.

**இராணுவ ரீதியான பெரிய நிகழ்ச்சித் திட்டம் ஒன்று அரங்கேற்றப்பட இருக்கிறது**

உலகில் போர் நடை பெற்ற நாடுகளில் போர் முடிவடைந்த பின்னர் பாதுகாப்புச் செலவினம் குறைவடைந்து மீள்கட்டுமானம் மற்றும் அபிவிருத்திக்கான நிதி ஒதுக்கீடு பல மடங்கு அதிகரித்துக் காணப்படுவதே வழமை. ஆனால், போர் முடிவடைந்து 10 வருடங்கள் ஆகின்ற நிலையிலும் இலங்கையில் இந்த விடயம் எதிர்மாறான நிலையில் காணப்படுகின்றது. இராணுவ ரீதியான பெரிய ஒரு நிகழ்ச்சித்திட்டம் அரங்கேற்றப்பட இருப்பதையே இந்தப் புள்ளிவிவரங்கள் காட்டி நிற்கின்றன. அண்மையில் ஆவாவை அழித்திட 'ஆமி' தயார் என்றார் இராணுவத் தளபதி. நல்லவேளை பொலிசார் தாம் பார்த்துக் கொள்வதாகக் கூறித் தளபதியின் வாயை அடைத்தனர். ஆனால் இந்த உள்ளீடல் தொடரும். மிக நுட்பமான திட்டமிடலுடன் தொடர்ந்தும் தமிழ் மக்களை இராணுவ ஆக்கிரமிப்புக்குள் வைத்திருப்பதற்கும் இராணுவத்தினரை இங்கு நிலையாக வைத்திருந்து சிங்கள மயமாக்கலை மேற்கொள்வதற்குமான தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை எதிர்பார்க்கலாம். தற்போது பல இடங்களிலும் நிரந்தர இராணுவக் குடியேற்றங்களுக்கான கட்டடவேலைகள் நடைபெற்றுவருவதைப் பார்க்கின்றோம். இராணுவம் கையேற்புக்காகக் கேட்ட காணிகள் எவற்றையும் வழங்க நான் இதுவரையில் அனுமதிக்கவில்லை. தாம் செய்வது தவறான செயல் என்பதைத் தெரிந்தோ, என்னவோ நான் மறுத்த விண்ணப்பங்கள் எவற்றைப் பற்றியும் இராணுவம் என்னிடம் மீளாய்வு செய்யுமாறு கோரவில்லை. காணி கையேற்புச் சட்டத்தின் கீழ்ப் பொது நன்மைக்காகவே காணிகளைச் சுவீகரிக்க முடியும். இராணுவம் வடகிழக்கில் தொடர்ந்திருக்கக் காணிகள் கேட்பது எமது பொதுமக்களின் நன்மைக்காக அன்று. பெரும்பான்மையோரின் மேலாதிக்கத்தை உறுதி செய்யவே. ஆகவே இனி ஆளுநர் தேவைக்கதிகமான அனுமதிகளை வழங்குவார் என்று எதிர்பார்க்கலாம்.

**தலைமை அமைச்சர் கூறிய அப்பட்டமான பொய்**

வடக்கில் இராணுவ பிரசன்னத்தைக் கடுமையாக எதிர்த்து வரும் எமது தமிழ் மக்கள், அவர்களுக்கு எதிராகத் தொடர்போராட்டங்களை நடத்திவரும் நிலையில், அண்மையில் இங்கிலாந்தின் ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆற்றிய உரையில் 'தமிழ் மக்கள் இராணுவத்தின் தொடர் இருப்பை விரும்புவதாக' அப்பட்டமான ஒரு பொய்யைக் கூறியமை நீண்ட காலத்துக்குத் தமிழ் மக்களை இராணுவ ஆக்கிரமிப்பில் வைத்திருப்பதற்கு கொழும்பு அரசு திட்டமிடுவதையே எடுத்துக் காட்டுகின்றது. இந்தியாவில் உண்மை கூறிய என்னைப் பொய்யன் என்று கூறிய கௌரவ ரணில் விக்கிரமசிங்க இங்கிலாந்தில் அப்பட்டமான பொய்யை உரைத்துள்ளார். ஆனால், எமது மக்களின் வாக்குகளைப் பெற்றுத் தெரிவான எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் இந்த விடயங்களை ஆராய்ந்து சீர்தூக்கிப் பார்க்காமல், வருடாவருடம் வரவு செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்து எமக்கு எதிரான அரச செயற்பாடுகளுக்கு 'நல்லாட்சி' என்ற சாயம் பூசி பன்னாட்டு அங்கீகாரத்தைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் செயற்பட்டு வருகின்றார்கள். இது வருத்தத்துக்குரியது.

**பொருளாதார விருத்திக்கு கொழும்பு அரசைச் சார்ந்திருக்க விரும்புகிறார்கள்**

போரால் பாதிக்கப்பட்ட எமது மக்கள் சுயசார்பு பொருளாதார விருத்தியை அடையும் பொருட்டு எமது புலம்பெயர் உறவுகளின் துணையுடன் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க, முதலமைச்சர் நிதியத்தை அமைக்கும் முயற்சியாக நியதிச்சட்டம் உருவாக்கப்பட்டு அனுமதிக்காக அனுப்பி வருடங்கள் பல காத்திருந்துவிட்டோம். ஆனால் அனுமதி தரப்படவில்லை. இதையே சற்று முன்னரும் குறிப்பிட்டேன். இந்த நிதியம் உருவாக்கப்பட்டால் இலங்கைக்குள் பெருமளவில் வெளிநாட்டு நிதி கொண்டுவரப்படும் வாய்ப்பு ஏற்படும் என்பது தெரிந்தும் தமிழ் மக்களுக்கு பொருளாதார ரீதியாக பெரு நன்மைகள் ஏற்படக்கூடாது என்பதற்காக 'எனக்கு ஒரு கண் போனாலும் பரவாயில்லை, உனக்கு இரண்டு கண்ணும் இருக்கக் கூடாது' என்ற பாணியில் அரசு செயற்பட்டுக் கொண்டு வருகின்றது. இதில் தேசிய கட்சிகளுக்குள் ஒற்றுமை இருந்து வருகின்றது என்பது வெளிப்படை. இவ்வாறான தேசியக் கட்சிகள்தான் தற்போது வடகிழக்கில் காலூன்றப் பார்க்கின்றன. ஆளுநர் வருகையையும் அவர்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கின்றார்கள். இவற்றிலிருந்து நாம் ஒன்றைத் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும். அதாவது, நாம் எமது பொருளாதார அபிவிருத்திக்குக் கொழும்பு அரசைத் தொடர்ந்தும் சார்ந்து இருக்கவேண்டும் என்று அவர்கள் விரும்புகின்றார்கள். நான் முன்னர் குறிப்பிட்டது போல் இந்த நிதியம் தொடர்பில் அரச தலைவருடன் இது பற்றி பேசிக் கடிதங்களையும் அனுப்பியுள்ளேன். அவற்றுள் ஒரு கடிதத்தை இந்தச் சபையில் சமர்ப்பிக்க விரும்புகின்றேன். கையளிக்கின்றேன். இன்று சமர்ப்பிக்காவிட்டால் பின்னர் சமர்ப்பிக்க முடியுமோ நான் அறியேன்.

எந்த இராணுவத்தை வெளியேற்றவேண்டும் என்று நான் குரல் கொடுத்து வருகின்றேனோ, எந்த இராணுவத்துக்கு எதிராக மக்கள் வீதிகளில் ஆர்ப்பாட்டம் செய்கின்றார்களோ அதே இராணுவத்தையும் மற்றைய படையணியிரையும் உள்வாங்கி வடமாகாண சபையைப் புறக்கணித்து எனக்கு மட்டும் சந்தர்ப்பம் அளித்து வடக்கு, கிழக்கு மாகாண அபிவிருத்திக்கான அரச தலைவர் செயலணி ஒன்று உருவாக்கப்பட்டது. இதன் மூலம் இராணுவம் அபிவிருத்தி செயற்பாடுகளில் ஈடுபடுகிறது என்று காட்டி அவர்களின் இருப்பை நியாயப்படுத்தும் அரசின் முயற்சிக்கு துணைபோகக்கூடாது என்ற காரணத்தாலும், பன்னாட்டுச் சமூகத்தை அபிவிருத்தி என்ற போர்வையில் ஏமாற்றி அரசியல் தீர்வைத் தள்ளி வைக்கும் நோக்கத்துக்கு இடமளிக்கக்கூடாது என்பதற்காகவுமே இந்தக் கண்துடைப்புச் செயலணியில் இணைந்து கொள்ளாமல் புறக்கணித்தேன். அரசு அடுத்த மார்ச் மாதத்தில் ஜெனிவாவில் மேலும் கால அவசாசம் கேட்கவே காய்களை நகர்த்தி வருகின்றது. இதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

**அரசு காட்டிய அக்கறையின்மை**

வட மாகாண சபையினூடாகப் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை அரசு செய்திருக்கலாம். ஆனால் அவற்றுக்கான போதிய நிதியைத் தராமலும் அதிகார வரம்புகளை ஏற்படுத்தியும் அரசு பொருளாதார விருத்தியைத் தடுத்து வந்துள்ள பின்னணியில் தற்போது வட மாகாண சபையின் ஆயுட்காலம் முடிவடையும் தறுவாயில் அபிவிருத்திக்கான இந்த அரச தலைவர் செயலணிக் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது வரை காலமும் திட்டமிட்டு பின்போடப்பட்டு வந்த திட்டங்களை இந்தச் செயலணி மூலம் மேற்கொள்வது எதிர்வரும் மனித உரிமைகள் சபையில் சாதகமான ஒரு நிலைமையை ஏற்படுத்துவதற்காகும். இப்பொழுது ஆளுநர் அரசுக்கு அனுசரணை வழங்கவுள்ளார்.

வட மாகாண சபையின் எமது தலைமைத்துவத்தை மலினப்படுத்தி எமது பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் செயற்பாடுகளை முன்னெடுக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஏற்கனவே எமக்கு எதிரான பரப்புரைகள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அரச முகவர்களினாலும், அரசுடன் இணைந்து செயற்படும் சில தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களினாலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை உங்கள் கவனத்துக்குக் கொண்டு வருகின்றேன்.

**ஆளுநர்கள் மாகாணசபைக்குக் குந்தகம் விளைவித்து வந்திருக்கிறார்கள்**

மிகையான அதிகாரத்துடன் மத்திய அரசின் முகவர்களாக கடந்த 5 ஆண்டுகளில் பணியாற்றிய ஆளுநர்களே வட மாகாண சபையின் செயற்பாடுகளுக்குக் குந்தகமாக இருந்து வந்திருக்கின்றார்கள்.

(22ஆம் பக்கம் பார்க்க)

உதயன்

புதன் பொய்கை

ஒக்ரோபர் 24, 2018

@UthayanPrint

உலகத்தில் அநீதி கண்டு
கோபமும் வெறுப்பும் கொண்டு
நீ குமுறி எழுவாயானால் நாம்
இருவரும் தோழர்கள்

-சே குவேரா



# 'பரதன்'

## தூய்மையான அன்பும் செயலும் உடைய படைப்பு

இரா. நிஷாந்தன்

கம்பராமாயணம் கம்பரால் படைக்கப்பட்ட அற்புதமான காவியம். சைவமும் தமிழும் போற்றிப் புகழுகின்ற இணையற்ற இதிகாசம். பக்தி உணர்வையும், இலக்கியச் சுவைநயத்தையும் கொண்டிருக்கும் தேன் மதுரக் காப்பியம். இத்தகு சிறப்புடைய படைப்பிலக்கியத்தில் இடம் பெற்றுள்ள கதாபாத்திரங்கள் ஒவ்வொன்றும் தனித்துவமான சிறப்பியல்புகளைக் கொண்டுள்ளன.

அவற்றுள் படிப்பவர் மனதில் என்றென்றும் நிலை பெற்றுள்ள ஆத்மார்த்தமான பாத்திரப்படைப்பாக பரதன் விளங்குகிறான். ஆம், எத்தனை கதாபாத்திரங்கள் கதையோட்டத்தில் இழையோடியிருந்தாலும், வானவெளியில் மிளர்கின்ற பல நட்சத்திரங்களுள் தனித்துவமான துருவ நட்சத்திரம் போல மேன்மையுறும் கதாபாத்திரமாக பரதன் சிறப்புறுகின்றான். அந்தவகையிலே பரதன் கொண்ட பண்பாளுமைகளையும், சிறப்புக்களையும், மேன்மைகளையும் நோக்குவோம்.

**பிறப்பு**

பகவான் விஷ்ணு மேற்கொண்ட அவதாரங்களுள் இராம அவதாரம் சிறப்பானது. அவ்வகையில் தசரதன் மற்றும் கோசலை மேற்கொண்ட இல்லற தர்மத்தின் பயனாய் இராமன் பிறந்தார். அதுவிதமே கைகேயி, சுமித்திரை மேற்கொண்ட இல்லற தர்மத்தின் பயனாய் பரதன், இலக்குவன், சத்ருக்கனன் ஆகிய மூவரும் உடன் பிறந்தனர். இவ்வாறு பரதன் அவதாரம் செய்த தன்மையை கம்பர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

*ஆசையும். விசும்பும் நின்று அமரர் ஆர்த்து எழ*
*வாசவன் முதலினோர் வணங்கி வாழ்த்துற*
*பூசமும் மீனமும் பொலிய நல்கினாள்*
*மாசு அறு கேகயன் மாது மைந்தனை!*

அதாவது, "எல்லாத் திசைகளிலும், வானிலும் நின்று இந்திரன் முதலான எல்லாத் தேவர்களும் எழுந்து நின்று ஆரவாரம் செய்து வணங்கி வாழ்த்தித் துதிக்கவும், குற்றமற்ற கேகய மன்னன் மகளான கைகேயி பூச நட்சத்திரமும், மீன ராசியும் பொலிந்து விளங்கும் நன்நாளில் பரதன் எனும் மகவைப் பெற்றெடுத்தாள்." என்று கம்பர் கவித்துவம் புனைகிறார்.


இவ்வாறு பரதனது மனமும் செயலும் ஒன்றெனவே எப்போதும் காணப்பட்டது. தன் தந்தை மற்றும் தாய்மார் மீதும், தன் சகோதரர்கள் மீதும் அளவற்ற பாசத்தை வெளிப்படுத்தினான்.

**கைகேயி தசரதனிடம் வரமருள வேண்டுதல்**

இவ்வாறு இருக்க, கூனி எனும் மந்தரையின் சூழ்ச்சியால் மனம் மாறிய கைகேயி, தன் பதியாகிய தசரதனிடம் இராமன் பதின்னாங்கு ஆண்டுகள் வனவாசம் செல்லவேண்டும் என்றும், தன் மகன் பரதன் நாடாள வேண்டும் என்றும் இரு வரங்களை வேண்டி நின்றாள். தசரதனும் அளித்த வாக்கைக் காத்திட கைகேயி வேண்டிய இருவரங்களையும் உவந்தளித்தான்.

அதன்படியே இராமன் பதின்னாங்கு ஆண்டுகள் வனவாசம் சென்றான்.

துயர் மிகுதியோடு அங்கலாய்த்த பரதன், இனிமேல் தனக்குத் தந்தையாகவும், தாயாகவும், அண்ணனாகவும் விளங்கும் இராமன் திருவடி களை வணங்குவதனாலேயே அமைதி கிட்டும் என்பதை உணர்ந்து கொண்டான்.



தசரதனோ இராமன் பிரிவைத் தாங்கொணாது உயிர் துறந்தான். இந்த நிகழ்வுகள் அத்தனையும் நடந்த போது பரதன் அயோத்தியில் இல்லை. தன் பாட்டனார் நாட்டில் இருந்தான். தசரதன் ஈமக் கிரியைகளை நடத்திடும் பொருட்டு பரதன் அயோத்திக்கு அழைக்கப்பட்டான்.

**தந்தையின் பிரிவால் பரதன் துயரமடைதல்**

அயோத்தி வந்தடைந்த பரதன் தன் தந்தை தசரதச் சக்கரவர்த்தி விண்ணுலகம் அடைந்த செய்தியைக் கேண்மையுற்றுத் துன்பக் கடலில் மூழ்கினான். பலவாறு புலம்பி அழுது ஒருவாறு தன் மனதைக் தேற்றிக்கொண்டான். அவன் கொண்ட துன்பத்தை வெளிப்படுத்தும் கம்பர், "தந்தையின் பிரிவுச் செய்தியை அறிந்துகொண்ட பரதன் இடியினால் தாக்கப்பட்டு பெரும் மாமரமானது நிலத்தில் வீழ்வதைப் போல மூர்ச்சித்துக் கீழே விழுந்து கிடந்தான்." என்று குறிப்பிடுகிறார்.

**இராமன் குறித்து கைகேயி வழங்கிய பதிலுரை**

இவ்வாறாகத் துயர் மிகுதியோடு அங்கலாய்த்த பரதன், இனிமேல் தனக்குத் தந்தையாகவும், தாயாகவும், அண்ணனாகவும் விளங்கும் இராமன் திருவடிகளை வணங்குவதனாலேயே அமைதி கிட்டும் என்பதை உணர்ந்துகொண்டான். இராமன் எங்குள்ளான் எனத் தாய் கைகேயியிடம் வினவினான். அதற்குக் கைகேயியும் இராமன் வனவாசம் சென்றமை தொடர்பில் உரைத்தாள். அண்ணன் வனவாசம் சென்றமை குறித்து அறிந்த பரதன் மேலும் துயருற்று இராமன் வனம் செல்லக் காரணம் யாதெனத் தாயிடம் வினவி நின்றான்.


**கைகேயி தான் பெற்ற வரம் தொடர்பில் கூறுதல்**

பரதனின் கேள்விக்கு கைகேயி பின்வருமாறு பதிலளித்தாள். அதைக் கம்பர் பாடல் வாயிலாகப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

*வாக்கினால் வரம் தரக் கொண்டு மைந்தனைப்*
*போக்கினேன் வனத்திடை போக்கி பார் உனக்கு*
*ஆக்கினேன் அவன் அது பொறுக்கலாமையால்*
*நீக்கினான் தன் உயிர் நேமி வேந்து!*

அதாவது, "தசரதன் தான் தந்த வாக்கினால் எனக்குத் தந்த இரு வரங்களைக் கொண்டு, ஒன்றினால் மகனாகிய இராமனைக் காட்டுக்குச் செல்லச் செய்தேன். மற்றைய வரத்தால் மைந்தனாகிய உனக்கு உலக ஆட்சியைப் பெற்றுக் கொண்டேன். ஆணைச் சக்கரத்தை உடைய தசரதனும் இராமன் பிரிவைத் தாங்கிடாது உயிரைப் போக்கிக் கொண்டார்." என எது விதமான துன்பக் குறிப்பும் இல்லாமல் பதிலுறுத்தாள் கைகேயி.





**பரதன் கொண்ட சீற்றம்**

“கைகேயியின் வாயில் இருந்து இத்தகு வார்த்தைகளைக் கேண்மையுற்ற பரதனோ இதுவரை நேரமும் கொண்டிருந்த துன்ப மேலீட்டிலிருந்து விடுபட்டு கோபத்தின் உச்சிக்கே சென்றான். கைகேயி கூறி முடிப்பதற்கு முன்பே தன் காதுகளைப் பொத்திக்கொண்டான். பெருமூச்சு வெளிப்பட கண்கள் நெருப்பைக் கக்கத் தொடங்கின. மேலும் கன்னங்கள் இரண்டும் துடித்தன. மயிர்க்காலில் இருந்து வெப்பம் வெளிப்பட்டது.வாயானது மடித்துக் கொண்டது. கைகள் இரண்டும் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டது. கோபத்தால் பாதங்களை ஊன்றி பூமியில் பதித்தான். இவ்விதம் பரதனின் கோபத்தின் உச்ச நிலையை கண்ணுற்று தேவர்கள், அசுரர்கள் அனைவரும் அச்சத்தில் உறைந்து போயினர்.” என்கிறார் கம்பர்.

இவ்வாறு கடும் கோபமுற்ற பரதன், கோபம் கொண்டு புறப்பட்ட ஆண் சிங்கம்போலக் கடும் செயல் புரிந்தவளாகிய கைகேயியை தன் தாய் என்றும் பாராமல் கொல்வதற்கு முற்பட்டான்.

**பரதன் கைகேயியை பழித்துரைத்தல்**

பின்பு அந்தச் செயலைச் செய்தால் அண்ணன் இராமன் தன் மீது கோபித்துக் கொள்வான் எனக்கருதி, “உன்னுடைய கொடிய சூழ்ச்சியால் என் தந்தை தசரதன் உயிர்துறந்தார். என் தமையன் இராமன் பெருந்தவத்தை மேற்கொண்டான். இவையெல்லாம் உன் வாயால் நிகழ்ந்தன என்றால், கொடிய் வரம் பெற்ற உன் வாயை நான் கிழித்தேனில்லை. உன் சொல் கேட்ட பின் இறக்காமல் நீ வாங்கிய இந்த இராஜ்ஜியத்தை பெற்றுக் கொண்டால் பேராசையால் ஆட்சி புரிந்தவன் ஆக மாட்டேனா? வரம் பெற்ற நீ இன்னமும் உயிருடன் இருக்கின்றாய்! நானும் உன்னெதிரில் ஏதும் செய்யாது நின்றுள்ளேன். ‘ஏ’ என்று சொல்லக் கூடிய கால அளவுக்குள் உன்னை அடித்து வீழ்த்தவில்லை எனில், இதற்குக் காரணம் உலகுக்கெல்லாம் தாய் போன்ற இராமன் கோபிப்பான். அது அல்லாமல் நீ என்னுடைய தாய் என்ற காரணத்தினால் அன்று.” என கைகேயியை நோக்கிக் கடும் சொற்களை உதிர்த்தான். இதைக் கம்பர் குறிப்பிடும் போது,


*நீ இனம் இருந்தனை யானும் நின்றனென்*
*‘ஏ’ எனும் மாத்திரத்து எற்றுகிற்றிலென்*
*ஆயவன் முனியும் என்று அஞ்சினேன் அலால்*
*தாய்எனும்பெயர்எனைத்தடுக்கற் பாலதோ!* என்கிறார்.

இங்கு, பரதன் தன் தாய் என்றும் பாராமல் பலவாறாக பழிந்துரைக்கின்ற தன்மை நோக்குதற்குரியது. இது பரதன் கொண்ட உயர் நிலையை எடுத்துரைக்கின்றது. ஆம், பரதன் நீதி, நியாயம், தர்மம் இவற்றுக்கு எப்போதும் முதலிடம் கொடுப்பவன். அதற்குக் களங்கம் விளைவிக்கும் உறவுகளை ஒரு பொருட்டாகவே மதிக்கமாட்டான். அதுவே கைகேயிக்கும் நிகழ்ந்தது. இராமன் கூட இந்த விடயத்தில் பரதனுக்கும் கீழே தான் போய்விடுகின்றான்.

**இராமனை அழைத்துவர பரதன் உறுதிபூணுதல்**

பரதன் தன்கொண்ட துன்பத்தில் இருந்து மீளாதவனாக தந்தையின் ஈமக் கிரியைகளை முடித்துக்கொண்டு அரச சபையைக் கூட்டினான். இராமன் மீது எல்லைகாண முடியாத அன்புடைய பரதன் அயோத்தியின் அரச சபையில் சூழ்ந்திருப்போர் முன்னிலையில், “நான் இப்பொழுதே வனம் சென்று அண்ணன் இராமனை மீண்டும் இங்கே அழைத்து வந்து அவனுக்கு முடி சூட்டி அயோத்தியின் அரசனாக்குவேன். ஒரு வேளை அண்ணன் இராமன் என் வார்த்தைக்கு உடன்பட மறுத்துவிட்டால் நானும் அவருடனே காட்டில் இருந்து தவ வாழ்வை மேற்கொள்வேன். இதற்கு மேல் நீங்கள் என்னை ஆட்சி புரியும்படி வற்புறுத்தினால் என் உயிரை மாய்த்துக் கொள்வேன்.” என உறுதிபடக் கூறினான்.

அதன்படியே இராமனை அழைத்து வருவதற்கு தன் தாய்மார், அயோத்தி மக்கள், அயோத்தியின் சேனை சகிதம் இராமன் வசிக்கும் வனம் நோக்கிப் புறப்பட்டு கங்கைக் கரையை வந்தடைந்தான்.



**பரதன் கங்கைக் கரையை வந்தடைதல்**

ஆம், “பொன்னாலாகிய வீரக் கழலை அணிந்துள்ளவனும், ஒப்பற்ற சேனையை கொண்டவனுமாகிய பரதன் கங்கைக் கரையை அடைந்த தன்மையை கம்பர் அழகுறக் காப்பியம் செய்கின்றார். அதாவது, “பூமியில் உள்ள அசைகின்ற மற்றும் அசையாத தன்மைகள் கொண்ட உயிரினங்கள் உட்பட்ட அனைத்தும் இரக்கம் கொள்ளும்படியாக கங்கைக்கரையை பரதன் வந்தடைகின்றான். இங்கு பரதனின் துயர நிலை கண்டு உலகில் உள்ள அசைகின்ற மற்றும் அசையாத உயர் திணை மற்றும் அஃறிணைத் தன்மைகள் அனைத்தும் கவலையுற்றன.” என்கிறார் கம்பர்.

**பரதன் நிலை கண்டு குகன் சலனமுறல்**

பரதன் கங்கையாற்றின் கரையை சேனையுடன் வந்தடைந்ததைக் கண்ணுற்ற வேடுவர் குலத் தலைவனும், இராமபிரான் மீது தீராத அன்புடையவனுமான குகன், பரதன் இராமனுடன் போர் செய்வதற்காகவே இங்கு வந்துள்ளான் எனச் சந்தேகம் கொண்டான். பின்பு பரதன் அவ்விடம் வருகை தந்த காரணம் குறித்து அறிந்து கொண்டதும் தன்னிலை மறந்து திகைப்புற்றுத் துன்பமடைந்தான். இதைக் கம்பர் பின்வருமாறு அழகுற வெளிப்படுத்துகின்றார்.

*வற்கலையின் உடையானை மாசு அடைந்த மெய்யானை*
*நற் கலை இல் மதி என்ன நகை இழந்த முகத்தானை*
*கல் கனியக் கனிகின்ற துயரானைக் கண்ணுற்றான்*
*வில்கையினின்று இடைவீழ விம்முற்று நின்றுஒழிந்தான்!*

அதாவது, “மரவுரியை ஆடையாக உடுத்தியவனும், புழுதி படிந்த உடலை உடையவனும், நல்ல கலைகளை இழந்து ஒளி குன்றிய சந்திரனைப் போல் முகம் படைத்தவனும், கல்லும் கண்டு கரைகின்ற துயரத்தை உடையவனுமாகிய பரதனைக் கண்டதும் குகனது கையில் உள்ள வில்லானது கீழே விழவும் மனமானது கலக்கமடைந்து நின்றான்.” என கம்பர் குறிப்பிடுகின்றார்.

பின்பு குகன் பரதனிடம் அவ்விடம் வந்தமைக்கான காரணத்தை வினவி நிற்கவே பரதனும் தான் வந்த காரணத்தை உரைத்து நின்றான். அந்த் வார்த்தைகளைக் கேண்மையுற்ற குகன் முன்னர் பரதனிடம் காட்டிய அன்பைக் காட்டிலும் அதிகபடியான அன்பின் மேலீட்டோடு பரதனை அரவணைத்தான். “உன் தாயாகிய கைகேயியின் வரத்தினால் உன் தந்தை உனக்கு அளித்த அயோத்தியின் அரசாட்சியை தீய வினையால் வந்தது எனக் கருதி கவலை தோய்ந்த முகத்துடனே வனம் நோக்கி வந்துள்ளாய். உன் நல்லியல்புகளை ஆராய்ந்து பார்த்தால் ஆயிரம் இராமனும் உன் ஒருவனுக்குச் சரிநிகர் ஆவார்களோ?” என உள்ளம் நெகிழ்ந்து கூறினான் வேடுவ வேந்தன். ஆம், இங்கு பரதன் கொண்ட இயல்பாளுமைகளின் மேன்மைகளை குகன் உரைப்பதன் ஊடாக அறிந்துகொள்ள முடிகிறது.

**குகன் பரதனை ஆரத்தழுவி அன்பு பாராட்டுதல்**

கங்கையின் வடகரையிலே வந்து தன்னை வணங்கி நின்ற பரதனைக் குகன் வணங்கினான். திருமாலின் நாபியில் இருந்து உண்டான தாமரை மலரில் வீற்றிருக்கும் வேதியனான பிரம்மனும் வணங்கத்தக்க சிறப்புப் பெற்ற பரதனும் குகனது திருவடிகளில் வீழ்ந்து வணங்கினான். அது கண்ட குகனும் பெற்ற தந்தையைக் காட்டிலும் அதிக மகிழ்ச்சி பொங்கிட பரதனை ஆரத்தழுவித் தன் மார்போடு அணைத்துக் கொண்டான். ஆம், அண்ணன் இராமனுக்கு இனிய துணைவன் குகன். ஆகையால் தனக்கு அண்ணன் என்பது கருதி பரதன் குகன் பாதங்களில் வீழ்ந்து வணங்கினான் என்பதை நாம் இயல்பாகவே கண்டு கொள்ளலாம் அல்லவா?

**பரதன், இராமன் இடையேயான அன்பின் சிறத்தல்**

கங்கையாற்றைக் கடந்து இராமன் இருப்பிடம் வந்தடைந்த பரதன் தன் தந்தை தசரதனை மீண்டும் கண்டது போன்று இராமனைக் கண்டு இன்பக் களிப்படைந்தான். தாமரை மலர் போன்ற திருவடிகளில் வீழ்ந்து வணங்கினான். இது கண்ட இராமனும் உயிர் உண்டோ இல்லையோ என்று சொல்லும் படியாக, காண்பவர் நினைக்கும் அளவுக்கு மெலிவு அடைந்துள்ள பரதனைத் தூக்கியெடுத்து அருட் தெய்வம் தர்ம தேவதையை தழுவிக் கொண்டது போலக் கண்களில் இருந்து கண்ணீர் பெருகி மனம் கரைந்துருக அன்புடன் ஆரத்தழுவிக் கொண்டான். பின் இராமனும் பரதனிடம் இங்கு வந்த தன் காரணம் யாதென வினவிடவே, “தாங்கள் மீண்டும் அயோத்தி திரும்பி அரசாட்சியை பெற்று முடி சூடி அரசு பதவியை ஏற்றிடல் வேண்டும்.” என்று பரதன் கூறி நின்றான்.

**பரதன் மேற்கொண்ட தவ வாழ்க்கை**

பரதனின் வார்த்தைகளை கேண்மையுற்ற இராமன், “தந்தையின் ஆணையை ஏற்றுத் தான் மேற் கொண்ட தவ வாழ்வை முடித்து அரசாட்சியைப் பெறமாட்டேன். ஆகவே, நான் வரும் வரைக்கும் நீயே அயோத்தியின் அரியணையில் அமர்ந்து ஆட்சி அதிகாரம் செய்திடுவாய். இது என் கட்டளையாகும்.” என பரதனிடம் எடுத்துரைத்தான். இராமனின் வார்த்தைகளை முதலில் மறுத்துரைத்த பரதன் பின்பு தேவர்களின் வாக்கின் படி அண்ணனின் ஆணையை ஏற்றுக்கொண்டான். இராமனது திருவடிப் பாதுகைகளைப் பெற்று அவற்றை தன் சிரசின் மேல் சுமந்தவாறு அயோத்தியை வந்தடைந்தான். அயோத்தியின் அரியணையில் இராமனது திருவடிப் பாதுகைகளை வைத்து விட்டு, அயோத்தயின் எல்லையில் உள்ள நந்திக் கிராமத்தில் மரவுரி ஆடை தரித்து இராமன் வனவாசம் முடித்து அயோத்தி திரும்பும் வரையில் தவவாழ்வை மேற்கொண்டான்.

**பரதன் கொண்ட மேன்மைத்துவம்**

இவ்வாறு உயர் பண்புகளின் இருப்பிடமாக, மேன்மையான நற்குணம் கொண்டவனாக, வஞ்சனையான மண்ணாசையைப் போக்கியவனாக, ஒளி இழந்த நிலவைப் போல் துயரால் தோய்ந்த முகம் படைத்தவனாக,இராமன் மீது அளவற்ற அன்புடையவனாக கம்பராமாயணத்தில் இழையோடுகின்ற பரதன் என்ற கதாபாத்திரம் எல்லோருடைய மனமோகனங்களிலும் என்றும் நிறைந்திருக்கின்றான். வாழ்வியலின்- மகத்துவங்களைச் சிறப்புற எடுத்துரைக்கின்றான்.



கே.எஸ்.சிவஞானராஜா

# சாகித்திய வீணாலய விரலிசை அரங்கம்!

## சங்கீத ஸ்வரங்களின் அலங்கார சொரூபமாய் ஜொலித்த நிகழ்வு

ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் ஏய உணர்விக்கும் என்னம்மையின், நளினரம்மிய சௌபாக்கிய ஐஸ்வர்ய அலங்கார அட்சரமனோலய வடிவங்களைக் கைலாசபதி அரங்கிலே கண்டுகொள்ள முடிந்தமை சரஸ்வதி தேவியின் அருட் கடாட்சம் என்றே சொல்ல வேண்டும். ஆம், யாழ்ப்பாணத்தில் அண்மையில் இடம்பெற்ற ஒரு அபரிமிதமான சாதனை முயற்சியே சாகித்திய வீணாலயாவின் விரலிசை நாத வந்தனமாகும். மிகவும் பிரமாண்டமான முறையில், ஆற அமர இருந்து திட்டமிடப்பட்டு ஒவ்வொரு நிமிடத்தையும் தவமாக்கிய விரலிசை நிகழ்ச்சியாக அமைந்திருந்தது.

அடேயப்பா! 58 மாணவர்கள் கலைமகளின் அருட்சொரூபங்களாக வீற்றிருந்து வீணை இசையில் வீணாகான நர்த்தனம் புரிந்தனர். கைலாசபதி அரங்கின் ஒவ்வொரு இருக்கைகளும் இசைகேட்டு அசைந்தன. பெண்களின் வருகையால் மண்டபம் குளிர்ந்தது. கைலாசபதி மண்டபம் கலைமகள் உறையும் திருக்கோவிலானது. மேடைமுழுவதுமாக வீணைகள் நாதமுறப் பேசிக் கலகலத்தன. நீலநிற அழகான வண்ண உடையலங்காரம் மேடையை ஞான நிலையுடைய சமுத்திரமாக்கியது. அந்தச் சமுத்திரத்தில் ஒவ்வொரு சந்திரன் ஒளிசிந்துவது போல கலைமகள் கடாட்சம் அருள்பாலித்தது.

**குரு**

சாகித்திய வீணாலய இயக்குநர் திருமதி விதுஷா கோபிகிருஷ்ணா தானே சரஸ்வதி கடாட்சமாக இருந்து, அன்றைய தினம் அரங்கேற்றம் கண்ட ஐம்பத்தெட்டுப் பிள்ளைகளையும் மேடைக்கு உரியவாறு உபகாரம் செய்தமை மிகமிக அற்புதம். ஒரு குருவுக்கு உரிய முக்குணங்களோடும், கலை கலாசாரப் பண்புகளோடும் மேடையாளுமை நிரம்பியவாறு நாதவந்தனத்தை ஒப்பேற்றியமை இந்த வருடத்தின் சாதனையாகும்.

ஆம், வீணை என்ற இசைவாத்தியம் யாழ்ப்பாணத்தின் முதுசெமாக ஒரு காலத்தில் திகழ்ந்தது. இடைப்பட்ட காலத்தில் அதன் பெறுமதி உணரப்படவில்லை. உணர்த்தப்படவும் இல்லை. இதன் தாற்பரியத்தை யாழ் மாவட்டக் கலாசாரப் பேரவைக்கோ அல்லது நல்லூர் பிரதேசக் கலாசார மட்டத்துக்கோ நகர்த்திச் செல்வதற்கு வழிவகை புரிவது காலத்தின் வேண்டுதலாகும். 2008இல் ஆரம்பிக்கப்பட்ட இம்மன்றம் 2018ஆம் ஆண்டில் பத்தாம் ஆண்டுப் பூர்த்தியின் பிரகாரம் இந்த நிகழ்வு இறைவனின் கிருபையால் வரமாகியது.

2019இல் எழுபத்தைந்து மாணவர்களும், 2020இல் நூறு மாணவர்களும் கிடைப்பதற்குப் பெற்றோர்களின் ஒத்துழைப்பு அவசியம் வேண்டப்படுகிறது. குருவான ஸ்ரீமதி நந்தினி விஜயரட்ணத்தின் ஆசியும், சாகித்திய வீணாலயாவின் இயக்குநரும் அதன் குருவானவருமான ஸ்ரீமதி விதுஷா கோபிகிருஷ்ணாவின் முயற்சியும் 2020இல் நூற்றுக்கு நூறு மாணவர்களை உள்வாங்குவதில் வெற்றி பெறுவார்களாக.



**நிகழ்ச்சி நிதர்சனம்**

நல்லூரின் நேரமுகாமைத்துவம் போல, உரிய வேளையில் நிகழ்வுகள் ஆரம்பித்தமை முதற்கண் விசேட அம்சமாகும். மங்கள விளக்கேற்றல், தமிழ்மொழி வாழ்த்து, ஆசியுரை, வரவேற்புரை யாவும் எந்தவித தடங்கலும் இல்லாமல் மெல்லெனப் பாயும் கங்கை போல மண்டபத்தைச் சாந்தமும் சௌபாக்கியமும் அடைய வழிகாட்டின. 'இதுவோ எமையாளுமாறு ஈவது எமக்கொன்று' என்று மேடை பார்வையாளர்களுக்கு விருந்தாகியது.

சரஸ்வதி உபதேசத் திருக்கோவில் ஆரம்பகர்த்தாவும், முதன்மைச் சிவாச்சாரியருமான சிவஸ்ரீ சபா வாசுதேவக் குருக்கள், கலைமகளுக்கு ஓர் ஆலயத்தை அமைத்த பின்னர் இயற்கை அவருக்கு அளித்த ஒரு பரிசாகக் கருதலாமோ என்ற மாதிரியாக, ஆசியுரைக்குத் தகுதியும் வெகுமதியும் பெற்றுக்கொண்டார். மண்வாசனையின் அடையாளமாக நிகழ்வைப் பாராட்டிப் பேறளித்தார்.

வரவேற்புரைக்கு மதிப்பளித்து அனைவரையும் கௌரவமாக அழைத்து உளங்குளிர மண்டபத்தைச் செப்பனிட்டார் திருமதி மதிவாணி விக்கினராஜா.

**வீணை இசை**


இருபத்தெட்டு வீணைகளை மீட்டவந்த இருபத்தெட்டுக் கலைமகள் செல்விகளும், சரஸ்வதி கடாட்சம் மிக்க தேவகன்னியர்கள் போல மூன்றடுக்கு மாடங்களில் 'பத்து+ஒன்பது+ஒன்பது' என்ற அமைப்பில், அழகான நீலச்சேலை கட்டி மேடையை அலங்கரித்தனர். ஸ்வரங்களின் சுரங்கமாகத் தேன் இசைப்பாடல்களைத் தித்திக்குமாறு அனுபவிக்க வடிவமைத்து மெய், வாய்,கண்,மூக்கு,செவி புரியுமாறு அமுதாக்கினார்கள். விரலிசையில் அற்புதங்கள் புனைந்து மோகன, பிலஹரி, சங்கராபரண இராக பந்தத்துக்குள் இரசிகர்களை மூழ்கடிக்க வைத்தனர்.

'எறின் கிளன்சியா, பிரியந்தி, விஸ்வாதிகா, சங்கவி, தேவகி, டக்சிகா, அம்சனா, ஆரபி, இந்துமதி, சரண்யா, கம்சிகா, கார்த்திகா, அப்சறா, அபிராமி, நிவேதிதா, மிஷாலி, துளசிப்பிரியா, அக்சயா, நிஷாயினி, ஹனோஜா, துருஸ்திகா, இந்துஜா, கயல்விழி, அங்கனி, நிவேதா, அஞ்சனா, பிரணவிக்கா, ஆராதனா' ஆகிய இருபத்தெட்டுச் செல்விகளும் எந்தவித பயமோ தடுமாற்றமோ இல்லாமல், உருப்படிகள் நோதப்படாமல் கர்நாடக சங்கீத சுகானுபவத்தைப் போதும் போதுமென அனுபவிக்க மேடையை உபகாரம் செய்தார்கள்.

இரண்டாவது வீணை இசை சாம்ராஜ்ஜியத்தில், 'மோகன கல்யாணி, குந்தலவராளி, திலங், ஆபேரி' இராகங்கள் நல்லாட்சி புரிந்தன. இந்த சங்கீத அரண்மனையில் இருபது ராணிகள் ஆட்சி புரிந்தனர். மேடையை இரண்டு அடுக்காக மாடியிட்டு பத்துப் பத்தென இருபது கலைவாரிசுகள் அலங்கரித்தனர்.

'அம்பிகை, நிருபா, துவாரகா, சுமங்கலி, சித்திரா, விதுஷா, அபிநயா, சகானா, நிரோஜினி, துஷாந்தினி, திவ்யா, சதீஸ்வரி, வைஷ்ணவி, சுபோதினி, வினோத், கோகுலன், அமலராஜா, நிலானி, நிருக்சாயினி, பிரணவி' ஆகியோர் அரங்கை ஒரு படிமான வடிவத்துக்குக் கொண்டு வந்து மூன்றாவது விரலிசை நந்தவனமாகிய நாத வந்தனத்துக்கு அழைத்துச் சென்றனர்.

மூன்றாவது அரங்கு நன்கு பரிச்சயமான, சங்கீத இன்பத்துள் மூழ்கிய பத்துக் கலைவாணிகளும் அவர்களுடன் இணைந்து கொண்ட வேணு வயலின் அனுசரணையாளர்களும், ராஜவாத்தியத்தை ஆரோகணிக்கச் செய்தனர்.



ஆலயங்களில் நடைபெறும் கொடியேற்றம் போல, மூன்றாவதாக இசைக்கருவிக் குழு (பல்லியம்) அமைந்து சபையோரை புது உலகுக்கு அழைத்துச் சென்றது. 'ஹம்சத்வனியும், ரவிச்சந்திரிக்காவும், ரேவதியும், தனாஸ்ரீயும், பக்திப்பாடலும், திருப்புகழும் மண்டப ஆர்வலர்களின் கைகளைப் பதம் பார்த்தன.

"போ ஷம்போ" என்ற உருப்படியை வாசிக்கும் போது, 'சித்திரா, கீர்த்தனா, குகேந்தினி, சுமங்கலி, கஜந்துகா, துவாரகா, விதுஷா, அபிநயா, லொயலா, பரிங்ரன், ஷர்மிளா, உமா, ஜெஸ்லின்' ஆகிய பதின் மூன்று கலை சிருஸ்டிகர்த்தாக்களும் பிருந்தகானத்தில் வார்த்தெடுத்து அருளிய பஞ்சாமிர்தம் போன்று சப்த உருப்படிகளும் நெஞ்சை அள்ளிற்று. உச்சத்தைத் தொட்டுவிட்ட உருப்படிகள் இரசிகர்களின் உள்ளத்தைக் கொள்ளையடித்துச் சென்றுவிட்டன. ஆம்! இத்தகையோருக்கு சாகித்திய வீணாலயா பீடம் பதக்கமும், சான்றிதழ்களும், வழங்கி உரியவாறு மதிப்பளித்தது.

பின்னணி இசை வழங்கிய இசைக்கலைஞர்களாக, 'மிருதங்கம் திரு.அனந்தகோபன், கெஞ்சிரா திரு.டினுக்சன், கடம் திரு.சுலக்சன், மோர்சிங் திரு. மோகனதர்சன்' ஆகியோர் சோடை போகாமல் கனகச்சிதமாகவும், ரம்மியமாகவும் வாசித்து சபையோரின் கரகோஷங்களைத் தமதாக்கினர்.


> சாகித்திய வீணாலய இயக்குநர் திருமதி விதுஷா கோபிகிருஷ்ணா தானே சரஸ்வதி கடாட்சமாக இருந்து, அன்றைய தினம் அரங்கேற்றம் கண்ட ஐம்பத்தெட்டுப் பிள்ளைகளையும் மேடைக்கு உரியவாறு உபகாரம் செய்தமை மிகமிக அற்புதம். ஒரு குருவுக்கு உரிய முக்குணங்களோடும், கலை கலாசாரப் பண்புகளோடும் மேடையாளுமை நிரம்பியவாறு நாதவந்தனத்தை ஒப்பேற்றியமை இந்த வருடத்தின் சாதனையாகும்.

முதன்மை விருந்தினராகக் கலந்து சிறப்பித்த இந்தியத் துணைத் தூதுவர் சங்கர் பாலச்சந்தரும், துறைசார் விருந்தினராக விளங்கிய முன்னாள் யாழ் பல்கலைகழக நுண்கலைத் துறை மூத்த விரிவுரையாளர் ஸ்ரீமதி நந்தினி விஜயரட்ணமும், சிறப்பு விருந்தினராக விளங்கிய பேராசிரியர் அருள் திரு. நீ. மரியசேவியர் அடிகளாரும் விழாவைப் பெறுமதியாக்கி அனைவரையும் வாழ்த்தி ஆசீர்வதித்தனர். இசையின்றி அசையாது இவ்வுலகு. இந்த நிகழ்வின் சிறப்புக்கு வாய்த்த ஒலி, ஒளி, மேடையமைப்பு மிகவும் பிரம்மாதம். 2019 இல் 'வீணாலயா'வின் படைப்புக்காக இந்த மண் ஆவலோடு காத்திருக்கிறது.

# கலைஞர் வேல் ஆனந்தன்

## ஆடற்கலை வாழ்வில் மாட்சி விதப்பு விழாக்காணும் நாயகன்

ஆடற்படைப்புகள் குறித்த சமூகப் பார்வை



செ.மகேஷ்

**கலைத்துவமான கல்விச் சோ(சா)லை!**
கலை கலைக்காக அல்ல, கலை மக்களுக்காக என்ற கருத்தின் வெளிப்பாடாகத் திகழ்பவர் கலைஞர் வேல் ஆனந்தன். 1995ஆம் வருடத்தில் நான் நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் கற்றுக் கொண்டிருந்த காலம் என நினைக்கிறேன், அமரர் சீ.வீ. நவரத்தினசிங்கம் அதிபராக இருந்து கல்வியோடு கலையும் கட்டுப்பாட்டோடு ஒழுக்கமும் சிறந்திருந்த காலம். அது நெடுந்தீவு மகாவித்தியாலயத்தின் எழுச்சிக் காலம் எனலாம். பாடசாலையின் மணல் நிலத்தின் வடகோடியில் ஆழவேரூன்றிப் பனைதழுவி விழுதெறிந்து கிளைபரப்பி நின்ற ஆலமரமும், அதன் நிலைத்திருப்பும் இன்றும் எம்மை மகிழ்விக்கின்றன.



அந்த அழகிய ஆலமரத்தின் மீது நாம் கொண்ட விருப்பும், அதன் நிழலில் பள்ளி மாணவன் வேல் ஆனந்தனோடு அன்று நாடகம் பயின்ற நினைப்பும் இன்றும் பசுமையாக நினைவில் நிழலாடுகின்றன. ஆம், நான் பெண் வேடந்தாங்கி வேல் ஆனந்தனின் நெறியாள்கையில் அவரது தங்கையாக, தாயாக, காதலியாக நடித்த அந்த நாட்கள் எண்ணங்களோடே தொடர்ந்து வருகின்றன. நடிப்பின் மகத்துவத்தை மதிப்போடு தெரிந்து கொள்ள வைத்த அவரது கலைத்துவச் சிந்தனையை இன்றும் பெருமையுடன் நினைத்துப் பார்க்கின்றேன்.
அன்று சக மாணவர்களாக அவருடன் கல்வி கற்று, நாடக விருப்புடையோராய் இணைந்து பயணித்து, மகிழ்ந்திருந்து பகிர்ந்துண்டு நாடகம் போட்டுப் புகழ்சிறந்த நாட்களை எண்ணிப் பார்க்கிறேன்.

**கலைத்தாயின் உன்னதமான குழந்தை!**
உண்மையில் அவர் கல்வியோடு கலையையும் ஆழமாக நேசித்தார். ஆடற்கலையைத் தொழிலாக அன்றி, ஆடற்கலையை உயிராகவே கருதினார். உலகை மிளிர வைக்கும் ஒளியாகப் பெற்று அதற்கெனவே தன்னை அர்ப்பணித்தார்.
பாடசாலைக் கல்வியைத் தொடர்ந்து ஆடற்கலையை புதுடில்லி கேரளா வரை சென்று கற்றுச் சிறப்புப் பட்டம் பெற்றுக் கொண்டார். அதன் பின்னர் 1966 ஆம் வருடம் தொடக்கம் 1976 ஆம் வருடம் வரையான பத்து ஆண்டு காலப்பகுதியில் தான் கற்றுக்கொண்டவற்றை வெளிப்படுத்தி ஊரெங்கும் ஒளிர்ந்தார்.
மக்களின் வாழ்வுக்கு வளம் தரும் ஆக்கங்களைத் தந்து பயனுற வேண்டும் என்ற ஆவல் அவரிடம் நிறைவாகவே இருந்தது. அதன்வழிப்பட்டு அவரது உற்சாகமான இளமைக் காலத்தில் ஆடற்கலையின் ஊடாகப் புதியனவற்றை மக்களுக்குக் கொடுத்தார். ஆடற்கலையின் மகத்துவத்தை வெளிப்படுத்தி அதனூடாக மக்களின் மேன்மைக்குப் பயன் தரும் கலைப்படைப்புகளை வெளிக்கொணர்ந்து பணியாற்றினார்.

**சமூக விடுதலைக்கான ஆடற்கலைப் படைப்புகள்**
ஆடற்கலையின் மூலம் நல்ல கருத்துக்களையும், எமது சமூகம் விடிவு காணும் வகையில் வல்ல பல ஆக்கங்களையும் மக்கள் முன் கொணர்ந்து மேடையேற்றினார். ஈழத்தமிழ் மக்களின் பண்பாட்டு அடையாளங்களை வெளிக்காட்டும் வகையில் ஆடற்கலையின் கோலங்களுக்கு நவீன வடிவம் கொடுக்க ஆர்வத்தோடு செயலாற்றினார். மக்கள் கலையாக ஆடற்கலையை மக்களுக்கு அருகில் எடுத்துச் செல்ல அயராது உழைத்தார். அவரது பணி இன்றும் ஓய்வின்றித் தொடர்கிறது.

தமிழ் மக்கள் தம் விடுதலைக்காக எழுச்சி கொண்டு போராடும் வேளையில் அவரும் அவர்தம் ஆடற்கலைஞர்களும் இணைந்து ஆக்கி மேடையேற்றிய அத்தனை ஆக்கங்களும் மேடையில் மிளிர்ந்தன. பார்த்தோர் மனங்களில் புதிய சிந்தனைகளை விதைத்தன.
கடவுளின் பெயரால் சாதி,மத பேதங்கள் பேணப்படுவது கண்டு அவற்றுக்கெதிரான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட காலகட்டத்தில் 'ஆலயப்பிரவேசம்' தொடர்பாக இவரால் ஆக்கப்பட்ட 'ஆலயமணி' என்ற நாட்டிய நாடகம் நெல்லியடி மத்திய கல்லூரியில் மேடையேற்றப்பட்டபோது மக்களின் பேராதரவைப் பெற்றது. மக்கள் மனங்களில் உண்மையான விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

தொடர்ந்து கரவெட்டி பொன்னில்லம் பொன்னையா இந்த நிகழ்ச்சியை கிழவி தோட்டம் பிள்ளையார் ஆலய முன்றலில் அரங்கேற்ற ஆதரவு தந்து அனைத்து உதவிகளையும் வழங்கினார். ஈழத்தமிழர்களைக் கொடுமை செய்து கொன்றொழித்த இனக்கலவரம் நிகழ்ந்த அந்த நாட்களின் துயரப் பதிவுகளை, மக்களின் உணர்வுகளை தனது ஆடற்கலையின் ஊடாக வெளிப்படுத்தி விடுதலை வேட்கையை வீறு கொள்ளச் செய்தார்.

பல்நிலைப்பட்ட இயக்கங்களின் ஒற்றுமை இன்மையே ஈழத்தமிழர்கள் அனுபவித்து வருகின்ற துன்பங்களுக்கான காரணம் என்பதை விளக்கும் "என்ன தான் முடிவு" என்ற நாடகத்தை 1986 இல் பல மேடைகளில் அரங்கேற்றினார்.
அந்த நாடகம் 'துன்பத்தை நீக்க ஒரே அணியில் தமிழர் ஒன்றாக நிற்க வேண்டும். இல்லையேல் நமக்கு விடிவில்லை' என்ற யதார்த்தத்தை விளக்கி மக்கள் முன்வைத்த கலைப்படைப்பாக உயர்ந்தது. எனினும் இன்றும் நீங்காத துயரத்துக்கு ஒற்றுமையின்மையே முதன்மைக் காரணம் என்பதை உணராத நிலையையே காணுகின்றோம்.



உட்பகை நிலைக்கும் வரைக்கும் வெளிப்பகையை வெல்ல முடியாது என்ற கருத்தைக் கலைவடிவமாக்கி, 1994 இல் "முழங்கும் முரசு" என்ற நாட்டிய நாடகமாய்ப் பல இடங்களிலும் மேடையேற்றினார். பதினைந்து தடவைகளுக்கு மேல் மேடையேறிய இந்த நாடகம் பலரது பாராட்டுக்களைப் பெற்றுப் புகழ் பெற்றது. யாழ்ப்பாணத்தில் இன்றும் சாக மறுத்துக் கொண்டிருக்கும் சீதனக் கொடுமையைச் சாடி "நீறு பூத்த நெருப்பு" என்ற கலைப்படைப்பு கலைஞர் வேல் ஆனந்தன் குழுவினரால் மேடையேற்றப்பட்டது.

**பாராட்டு**
1977ஆம் வருடத்தில் நிகழ்ந்த இனக்கலவரத்தைப் பின்னணியாகக் கொண்டு 1978 இல் அவரால் மேடையேற்றப்பட்ட "பஸ்மாசுரன் 1977" எனும் நாட்டிய நாடகம் அந்தத் துயர உண்மையை வெளிப்படுத்தி வென்றது. இதை மேடையிலே கண்ட அமரர் கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை "அகதி வாழ்க்கையை வண்ணத்தில் ஆடற்கலையின் ஊடாக மேடைக்குக் கொண்டுவந்த ஆடற்கலைஞர் வேல் ஆனந்தன்" எனப் புகழாரம் சூட்டினார்.

**பணிச் சிறப்பு**
இத்தனைக்கும் மேலாக வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சில் அவர் ஆற்றிய கலைப்பணியின் ஊடாக யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, முல்லைத்தீவு ஆகிய இடங்களில் ஆடற்கலையின் மகத்துவத்தை அறிந்து கற்று மக்கள் பயன்பெறும் வகையில் இளைஞர்களுக்குப் பயிற்சிகளையும் உதவிகளையும் வழங்கினார்.

இதற்கென அன்று ஊக்கம் தந்த அந்நாள் கல்விச் செயலாளர் சுந்தரம் டிவகலா லாவை கலைஞர் என்றும் நினைவு கூருகின்றார். ஈழத்தமிழர்களின் பாரம்பரியத்தைப் பேணவும், ஈழத்தமிழர் தம் கலைச் சிறப்புகள் பறைசாற்றவும், புதிய ஆடற்கோலங்களை அறிமுகம் செய்யவும் அவர் முன்னெடுக்கும் முயற்சிகள் என்றும் பாராட்டுக்குரியவையாகும்.

**'மாட்சி விதப்பு' விழா**
இன்று அவருக்காக அவரது கலைச்சிறப்பைப் பாராட்டி அவருடன் பழகித் துணை நின்ற நடனக் கலைஞர்கள் ஒன்றிணைந்து 'மாட்சி விதப்பு' என்ற பெயரில் விழா ஒன்றை முன்னெடுக்கிறார்கள். அவர்களோடு இணைந்து நாமும் கலைஞர் வேல் ஆனந்தனின் மாட்சி விதப்பு விழாவைச் சிறப்பிக்கவோம். கலைஞர்கள் வாழும்போதே பாராட்டப்படுதல் தமிழர்தம் கலைவளர ஊக்கம்தரும் உன்னத செயற்பாடாகும் என்பதை உணர்ந்து செயலாற்றுவோம்.

*பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல் மண்புக்கு மாய்வது மன்.*

பா.கலையரசி

# திருமந்திரத்தில் அரசாட்சி!

நாயன்மார்கள் அறுபத்து மூவருள் திருமூலரும் ஒருவர். சித்தர் உலகின் தலைமைச் சித்தராக வாழ்ந்து சைவ நெறியில் தனக்கென ஓர் இடத்தைப் பிடித்துக் கொண்டவர். பன்னிரு சைவத்திருமுறைகளில் சாத்திர நூலாக விளங்கும் திருமந்திரத்தை இயற்றி, அதன் வாயிலாகப் பல 'அருளியல் ஒழுக்கங்களை' தமிழ்ச் சமூகத்துக்குக் கற்றுக் கொடுத்தவர். இந்தத் தவ மனிதர் குறிப்பிட்டிருக்கும் 'அரசாட்சி முறைகளை' ஆராய்ந்தறிவதையே இந்தக் கட்டுரை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**திருமந்திரத்தில் அரசாட்சி முறை**

திருமூலரின் திருமந்திரம் மனிதனுடைய வாழ்க்கைக்குத் தேவையான பல நல்ல இயல்புகளைக் குறிப்பிடுகிறது. இறைவனுடைய திருவருளைப் பெற்று வாழ்வதற்கு, 'சரியை, கிரியை, யோகம், ஞானம்' எனப் பல வழிமுறைகளையும் கற்றுக் கொடுக்கிறது. ஒன்பது தந்திரங்களை உடைய இந்த நூலின் முதல் தந்திரத்தில் பெரும்பாலும் பொதுவான இயல்புகளைப் பற்றியே பாடியுள்ளார் திருமூலர். முதல் தந்திரத்தின் ஏழாவது பகுதியாக அமைந்திருப்பது 'அரசாட்சி முறை' என்ற தலைப்பாகும் .

**அரசியலின் இரண்டு வகை**

பொதுவாக அரசியலை, 'அன்றன்று நிகழக்கூடிய நிகழ்வுகளோடு தொடர்புடைய நடைமுறை அரசியல், எல்லாக் காலத்துக்கும் பொருந்தும் பொதுவான அரசியல்' என இரண்டாகப் பிரிக்கலாம்.

திருக்குறளின் பொருட்பாலில் வள்ளுவர் எடுத்துரைத்திருப்பதும், திருமந்திரத்தில் திருமூலர் குறிப்பிட்டிருப்பதும் இந்த இரண்டாவது வகை அரசியல் கருத்துக்களே ஆகும். அப்படியானால், இரண்டாவது வகை 'அரசியல் நூல்களால் விளக்கம் பெறுவது' என்பது தெளிவு.

**திருவள்ளுவர், திருமூலரின் அரசியல் பார்வை**

அரசனைப் பற்றிய இலக்கணங்களில், தனி மனிதன் என்ற முறையில் அவனுக்கு இருக்க வேண்டிய இயல்புகள் ஒருவகையாகவும், குடிகளைப் பாதுகாக்கின்ற கடமையை மேற்கொண்ட ஆட்சித் தலைவனுக்கு அமைய வேண்டிய இயல்புகள் இன்னொரு வகையாகவும் குறிப்பிடப்பட்டுள்ளன. இவ்விருவகை இயல்புகளையும் வள்ளுவர் பொருட்பாலில் விரிவாகக் குறிப்பிட்டுள்ளார். திருமூலரோ அரசனிடம் உள்ள மனிதப் பண்பை ஒரு பாட்டிலும், ஆட்சி முறையை மேற்கொண்டு அவன் செய்ய வேண்டிய கடமைகளை ஒன்பது பாட்டிலும் எடுத்துரைக்கிறார்.

**அரசன் கொண்டிருக்க வேண்டிய முக்கிய தகுதி கல்வி**

ஒரு அரசன் கல்வியில் சிறந்தவனாக இருந்தால், முதலில் உள்ளம் ஒளி பெறும். அவன் எண்ணங்கள் ஒளிபெறும். அதனால், அவன் மேற்கொள்ளும் செயல்களால் நாட்டுக்கு நலம் உண்டாகும். இதை உணர்த்த முற்பட்ட திருமூலர்,

*கல்லா அரசனுங் காலனும் நேரொப்பர்*
*கல்லா அரசனிற் காலன் மிகநல்லன்*
*கல்லா அரசன் அறம்ஓரான் கொல்லென்பான்*
*நல்லாரைக் காலன் நணுகநில் லானே!*

*(திருமந்திரம் -95)*

என்று குறிப்பிட்டுள்ளார்.

அதாவது, "நேரடியாக அரசன் கல்வியில் சிறந்திருக்க வேண்டும் என்று சொல்லவில்லை. மறைமுகமாக, அரசன் கல்லாமல் இருந்தால் தீங்கு உண்டாகும்." என்று சொல்கிறார்.

முதல் அடியில் காலனும், கல்லாத அரசனும் சரிசமமானவர்கள் என்று சொன்னவர், அப்படிச் சொன்னதனால் காலனை அவமதித்ததாக எண்ணிவிட்டார். உடனே, ஓர் திருத்தமொன்றைக் குறிப்பிடுகிறார். 'கல்லாத அரசனைக் காட்டிலும் காலன் மிகவும் நல்லவன்' என்று கூறியிருப்பது ஒன்றுக்கொன்று முரண்பாடு உள்ளதாகத் தோன்றினாலும், அதற்கான காரணத்தையும் தொடர்ந்து அடுத்தபடியே விளக்குகிறார்.

"காலன் மனம் போனபடி யாரையும் கொல்வதில்லை.



யாருடைய விதி முடிகிறதோ அவருடைய உயிரையே ஈர்த்துச் செல்லக் கூடியவன் யமன். அவன் ஒருபோதும் நல்லவர்களை அணுக மாட்டான். ஆனால், கல்லாத அரசன் செங்கோன்மையை விடுத்துக் கொடுங்கோலனாக வாழ்வான். அவனுக்கு எட்டிய அறிவால் அவன் அனைவரையும் துன்புறுத்துவான். ஆதலால், அவன் காலனை விடக் கொடியவன்" என்கிறார் திருமூலர். திருவள்ளுவரும் 'கல்வி' அதிகாரத்தை அரசியலில் வைத்துள்ளமை இவ்விடத்து ஒப்புநோக்குதற்குரியது.

*தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்*
*கற்றனைத் தூறும் அறிவு! (திருக்குறள் – 396)*

**அரசன் கொள்ள வேண்டிய கடமை**

அரசனுடைய கடமைகளில் மிகவும் முக்கியமானதாகத் திருமூலர், "மக்கள் கடவுளை மறவாமல் வாழும்படி வேண்டியவற்றைச் செய்வது, நாட்டில் தவ முனிவர்கள் ஒரு குறையும் இல்லாமல் வாழ வகை செய்வது." போன்றவற்றைக் குறிப்பிடுகிறார்.

மக்கள் பலருக்கும் நலம் உண்டாக, நாட்டில் தவநெறி வாழவேண்டும். அதற்கு அரணாக அரசன் இருக்க வேண்டும். இராமனைப் பெற்ற தசரதச் சக்கரவர்த்தி வசிட்டருடைய அறிவுரையைக் கேட்டு வாழ்ந்தமை இவ்விடத்து நினைவு கொள்ளத்தக்கது.

அதே சமயத்தில், 'உண்மையான தவம் உடையவர்கள் இன்னார்' என்பதை இனங்கண்டு மன்னனும், மக்களும் பயன்பெறுவது அவசியம் என அறிவுறுத்தும் திருமூலர்,

*நாள்தோறும் மன்னவன் நாட்டில் தவநெறி*
*நாள்தோறும் நாடி யவன்நெறி நாடானேல்*
*நாள்தோறும் நாடு கெடுமூட நண்ணுமால்*
*நாள்தோறும் செல்வம் நரபதி குன்றுமே!*

*(திருமந்திரம் 96)*

என்று அரசனின் செல்வம் குறைவதற்கான காரணத்தையும் குறிப்பிடுகிறார்.

**போலி வேடதாரிகளின் வேடத்தை பழிப்பது முறையல்ல**

தவ வேடம் பூண்டவர்கள் அதற்கு ஏற்றபடி ஒழுக்கத்தில் சிறந்து வாழாவிட்டால், அத்தகைய போலிகளைக் கண்டு வேடத்தையே பலர் பழிக்கிறார்கள். இது முற்றிலும் தவறான அணுகுமுறை என்கிறார் திருமூலர். "வேடம் நல்லவர்களை அடையாளங் காட்டவும், தன்னை ஏற்றவர்களுக்குரிய கடமைகளை நிலைநிறுத்தவும் உதவுவது. ஆதலால், அரசன் போலி வேடதாரிகளைத் திருத்தி வேடத்துக்கு ஏற்ற நெறியில் வைக்க வேண்டும்." என அறிவுறுத்துகிறார் இத்திருமூலஞானி. இதை,

*வேடநெறி நில்லார் வேடம்பூண் டென்பயன்*
*வேடநெறி நிற்போர் வேடம்மெய் வேடமே*
*வேடநெறி நில்லார் தம்மை விறல்வேந்தன்*
*வேடநெறி செய்தால் வீடது வாகுமே!*

*(திருமந்திரம் -97)*

எனத் தெளிவுபடுத்துகிறது திருமந்திரம். சேரமான் பெருமாள் நாயனார் உவர் மண்ணால் நனைந்து போய் நின்ற வண்ணான் ஒருவனைப் பார்த்து 'சிவனடியாரோ?' என்று வணங்கிய வரலாற்றை இவ்விடத்து ஒப்பு நோக்குவது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

**அரசனுக்கான அறநெறிகள்**

மன்னர், வேந்தர் இவர்களுக்கு மேற்பட்டு உருவாகக் கூடியதையே 'அரசு' என்பர். பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன் மாறனை மருதனிள நாகனார், "வேந்து மேம்பட்ட பூந்தார் மாறனே! யானை, குதிரை, தேர், காலாள் ஆகிய நால்வகைப் படைகளுடன் அரசு சிறப்புற்றதாக இருந்தாலும் ஆட்சியில் பின்பற்றப் பெறும் அறநெறியால் தான் சிறப்புறும்" (புறநானூறு-55) எனக் குறிப்பிடுகிறார். அத்தகைய அரிய அறநெறிகளைத் திருமூலர் ஒன்றன் பின் ஒன்றாக இவ்வதிகாரத்தில் விளக்கியுள்ளார். அவையாவன,

- பசுக்களைப் பாதுகாக்க வேண்டும்.
- மகளிரைக் காப்பாற்ற வேண்டும்.
- அறவோர்க்குத் தீங்கு வராமல் அரண் செய்ய வேண்டும்.
- சிவ வேடம் உடையவர்களைத் தேவர்களும் போற்றுவார்கள் என்பதால், அத்தகையவர்களையும் மன்னவன் காக்க வேண்டும்.

ஒரு வேளை, இவர்களைப் பாதுகாக்காமல் ஒழிந்தால் அரசனுக்கு ஏற்படும் துன்பத்தையும் எடுத்துரைத்து வழிகாட்டுகிறார் திருமூலர்.

*காவலன் காப்பவன் காவா தொழிவனேல்*
*மேவும் மறுமைக்கு மீளா நரகமே!*

*(திருமந்திரம் -100)*

என்பது திருமந்திரம்.

**செங்கோல் மாறாத அரசன்**

ஒரு நாட்டை ஆளும் அரசன் மக்களைக் காப்பாற்றும் கடப்பாடு உடையவனாக இருக்க வேண்டும். ஏனெனில், குடிமக்களைப் பாதுகாப்பாகக் காக்க வேண்டியது அரசின் தலையாய கடமை ஆகும். மன்னன் மனம் போன போக்கில் நடவாமல், தன் வாழ்வைக் கருதி ஆட்சி புரியாமல், சிந்தை முழுதும் குடிமக்களின் மீது கொண்டு ஆட்சியை மேற்கொள்வதே நலம் பயக்கும். மேலும், காற்றை அடக்கி மூலக் கனலை மேலே ஏற்றி, ஆதாரங்கள் ஆறையும் கடந்து, அமுதப்பாலை உண்ணக் கூடியவர்களே 'யோகியர்கள்' என அடையாளப்படுத்தும் திருமூலர் போலிகளைப் பற்றிக் கூறாமல் விடவில்லை.

"யோகியர்களைப் போல் அமுதுண்டு மகிழ்ந்திராமல், மரத்திலிருந்து இறக்கும் 'பாலை' (கள்) உண்ணக் கூடியவர்கள் இந்தப் போலிகள்." என்கிறார் திருமூலர். அதுமட்டுமின்றி கள்ளுண்ணும் கயவர்களைத் தண்டித்தல் வேந்தனுக்குரிய கடமை எனக் குறிப்பிடுகிறார். இதைப் போன்றே, 'கள்ளுண்ணாமை' அதிகாரத்தை தனிமனிதனுடைய ஒழுக்கத்தை வரையறுக்கும் அறத்துப்பாலில் வைக்காமல், அரசனால் நிகழும் ஆட்சி முறையைச் சொல்லும் பொருட்பாலில் வைத்துள்ளார் வள்ளுவர். இவ்விரு யோகிகளின் பார்வையிலுமே கள்ளுண்ணாமல் இருக்கவேண்டும் என்பது தனிமனிதனின் ஒழுக்கத்தைக் குறிக்கும் நீதி தான். ஆனால், அது நடைமுறையில் நடக்காது என்பதை அறிந்து, அரசினரே கள்ளுண்ணாமையை நிலைநிறுத்த வேண்டுமென்று எண்ணியிருப்பது மேற்கண்ட சான்றாதாரங்களால் தெளிவாகிறது.


*கள்ளுண்ணாப் போழ்தில் களித்தானைக் காணுங்கால்*
*உள்ளான்கொல் உண்டதன் சோர்வு!*

*(திருக்குறள் -930)*

ஆகவே, ஒரு நாட்டில் வாழும் மக்களுக்கு எவ்வகையால் துன்பம் ஏற்படினும், அதை நீக்கி மக்களைக் காப்பதே அரசனின் கடமை ஆகும். 'நாட்டின் நலம்' என்ற இலட்சியத்தின் வழி செல்லும் இலட்சியத் தலைவனாக ஒவ்வொரு அரசனும் ஆட்சி புரிய வேண்டும்.

*கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்*
*உடையனாம் வேந்தர்க் கொளி!*

*(திருக்குறள் – 390)*



அந்த வகையில், அரசன் தீயவர்களைத் திருத்தி, அவர்களால் மற்றவர்களுக்குத் தீங்கு வராமல் காப்பாற்றும் செயலையே சிறப்பாக எடுத்துக் கூறியுள்ளார் திருமூலர்.

'பயிருக்கு வேலி போல மக்களுக்கு வேலியாக நிற்பவன் அரசன்' திருமூலரின் திரு வாக்கினால் உணர்ந்துகொள்ள முடிகிறது.

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

எப்போது வட மாகாண சபையின் ஆயுட்காலம் முடிவடையும் அதன் முழுமையான அதிகாரம் தனது கைக்கு வரும் என்று காத்திருந்தவர்போல தற்போதைய ஆளுநரின் அண்மைய செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன. நான் முன்னர் எச்சரித்ததுபோல இனிவரும் காலம் ஆபத்தானது. எமது மக்களை பல்வேறு வழிகளிலும் ஏமாற்றும் நடவடிக்கைகளும் பிழையாக வழிநடத்தும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படலாம் என்று அஞ்சுகின்றேன். பெரும்பான்மையோர் மேலாதிக்கத்தைப் பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கின்றேன். எமது மக்கள் விழிப்பாகவும் முன்னெச்சரிக்கை யுடனும் இருக்கவேண்டும். வட மாகாண சபைக்கான தேர்தலைக் காலவரையறை இன்றிப் பிற்போடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம். இதற்கு மக்கள் இடமளிக்கக்கூடாது.

**தியாக வரலாற்றைக் கேட்டு அறிந்து கொண்டவன் நான்**

ஒரு நீதியரசராக இருந்து ஓய்வு பெற்றபின் அரசியலுக்கு வந்தவன் நான். எவ்வெவற்றுக்காகப் பாடுபடுவேன் என்று எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் மக்களுக்கு வாக்குக் கொடுத்து வெற்றிபெற்றேனோ அந்த உறுதிமொழிக்குக் கட்டுப்பட்டவன் நான். தமிழ் தேசியக் கோட்பாடுகளுக்காகப் பல்லாயிரக்கணக்கான எமது மக்கள் தமது இன்னுயிர்களைத் தியாகம் செய்த வரலாறுகளைப் பற்றிக் கேட்டு அறிந்து கொண்டவன் நான். பாதிக்கப்பட்ட மக்களின் கண்ணீரைக் கண்டவன் நான். ஆகவே 'இதுதான் யதார்த்தம் இதற்கு மேல் எங்களுக்குக் கிடைக்காது' என்று கூறி எமது மக்களுக்குப் பொய் கூறி ஏமாற்றுவதற்கு எனக்குத் தெரியாது. இந்த அடிப்படையில்தான் எனது செயற்பாடுகளுக்கும் எனது கட்சியின் தலைமைகளின் செயற்பாடுகளுக்கும் இடையே இடைவெளி அதிகரித்தது. இதை எனது மக்கள் நன்கு அறிவர். எமக்கு இடையிலான இந்த விரிசல்களுக்காக என்னைப் பழிவாங்க வேண்டும் என்று செயற்பட்டு எமது மக்களின் தலைவிதியுடன் எவரும் விளையாடக்கூடாது. இது தொடர்பில் சில விடயங்களை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்

1. முதலமைச்சர் நிதியத்துக்கான நியதிச்சட்டத்தை நிறைவேற்றுவதற்கு நாடாளுமன்றத்திலும் அதற்கு வெளியேயும் எமது தலைவர்கள் வலியுறுத்தத் தவறியதுடன் எந்தவிதமான முயற்சிகளையும் எடுக்கவில்லை. நாம் தான் இந்த அரசைக் கொண்டுவந்தோம். எதிர்க்கட்சித் தலைவர் பதவி மற்றும் பல முக்கிய பத்விகளையும் வைத்துள்ளோம். ஆனாலும் கூட முதலமைச்சர் நிதியத்தை உருவாக்குமாறு வலியுறுத்த எம்மால் முடியவில்லை.

2. மக்களால் அங்கீகரிக்கப்பட்ட வட மாகாண சபை ஓர் அரசியல் தீர்வுத் திட்டத்தை முன்மொழிந்திருந்தும் அதைக் கிஞ்சித்தும் சீர்தூக்கிப் பார்க்கவில்லை அதிகாரத்தில் இருந்தோர். குறைந்தபட்சம் அரசமைப்பு வழிநடத்தல் குழுவால் வெளியிடப்பட்ட இடைக்கால அறிக்கையில் கட்சிகள் சமர்ப்பித்த யோசனைகள் என்ற பின்னிணைப்புடன் கூட எமது முன்வரைவுகளை எவரும் இணைக்க முயன்றிருக்கவில்லை.

3. வடகிழக்கு அபிவிருத்திக்கான அரசதலைவர் செயலணிக் கூட்டங்களில் பங்குபற்றாமைக்கு நான் முன்னர் கூறிய காரணங்களைக் காட்டி அதைப் புறக்கணிக்க வேண்டும் என்றும் எனது முடிவுக்கு ஒத்துழைக்க வேண்டும் என்றும் கோரியிருந்தேன். வடக்கு கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எந்த ஒரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரையும் உள்வாங்கியிராத இந்த செயலணியில் நான் அதனைப் புறக்கணித்ததன் பின்னரே எமது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான அழைப்பு விடுக்கப்பட்டது. ஆனால் நான் சுட்டிக்காட்டிய காரணங்கள் மற்றும் அவற்றின் விளைவுகள் பற்றி சிந்திக்காது அதற்கோர் அங்கீகாரத்தை வழங்க எமது தலைமைகள் இன்று முற்பட்டுள்ளன. ஆகக்குறைந்தது இந்த செயலணியில் இராணுவத்தினரின் சமமான பங்குபற்றுதல் பொருத்தமற்றது என்று கூட அவர்களால் நிபந்தனை இடக் கூட முடியவில்லை.

4. வட மாகாணசபையில் நாம் ஆட்சியமைத்த கடந்த 5 வருடங்களில் எமது கட்சித் தலைமை எம்மை அழைத்து எமது செயற்திட்டங்கள் என்ன, எத்தகைய பிரச்சினைகளை நாம் எதிர்கொள்கின்றோம், அவற்றை எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றீர்கள், நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் இவற்றுக்காக ஏதேனும் செய்ய முடியுமா என்றெல்லாம் கேட்க எத்தனிக்கவில்லை என்பது மனவருத்தத்தை தருகின்றது. எந்தவித அரசியல் அனுபவமும் இல்லாத என்னை அரசியலுக்கு அழைத்து வந்து 'நீந்தப் பழகிக்கொள்' என்று நீரில் தள்ளிவிட்டதே எனக்கு நேர்ந்த கதி.

5. எந்த ஒரு புதிய அரசும் தனது ஆட்சியின் முதல் இரண்டு வருடங்களுக்குள்ளாகவே தேச நலன் சார்ந்த முக்கிய திட்டங்களை நடைமுறைப்படுத்த எத்தனிக்கும். ஏனெனில் மக்களின் எதிர்பார்ப்புக்கள் பூர்த்தியாகவில்லை யெனில் அவ்வரசு மீதான மக்களின் வெறுப்பு இத்தகைய முக்கிய திட்டங்கள் நிறைவேற்றப்ப டுவதைப் பாதித்துவிடும். இன்றைய கொழும்பு அரசு இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்று கூறிக் காலம் தாழ்த்திக் கொண்டுவந்துள்ள அரசமைப்பு மாற்றம், உருப்படியான எந்த முன்னேற்றமும் இன்றி அரசின் ஆட்சி இன்னமும் ஒன்றரை வருடங்களில் காலாவதியாகப்போகும் நிலையில் ஆமை வேகத்தில் நகர்ந்துவருகிறது. இந்த அரசியலமைப்பு திருத்த நடவடிக்கையானது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகளின் ஆலோசனை இன்றி அதன் எல்லா பாராளுமன்ற உறுப்பினர்களினதும் பங்குபற்றுதல் இல்லாமல் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட வட மாகாண சபையின் பிரதிநிதித்துவம் இன்றி. இரு தனி நபர்களின் விருப்பு வெறுப்புக்களையே ஒட்டுமொத்த தமிழ் மக்களின் பிரதிபலிப்புக்களாக ஜனநாயக விரோதமான முறையில் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது.

அரசமைப்பு மாற்றத்தை இனப்பிரச்சினைக்கான தீர்வாக ஏற்றுக்கொண்டு அதில் கலந்துகொண்டதன் மூலம் 70 வருடகாலத் தமிழ்த் தேசிய அரசியல் மற்றும் ஆயுத ரீதியான போராட்டங்கள் மூலம் கட்டி எழுப்பப்பட்ட 'சிங்கள தமிழ்' தரப்புக்களின் பேச்சுவார்த்தை மூலமாகப் 'பேரம் பேசும்' நிலைமை இன்று இல்லாமல் செய்யப்பட்டுள்ளது. அத்துடன், வடக்குக் கிழக்கு இணைப்பு, சமஷ்டி என்பவற்றைக் கைவிட்டு ஒற்றையாட்சி முறையை எமது மக்களின் எந்த அங்கீகாரமும் இன்றி ஏற்றுக்கொண்டுள்ளார்கள் எமது தலைவர்கள்.

**மக்களின் எண்ணங்களும் விருப்புகளும் புறக்கணிக்கப்பட்டுள்ளன**

பௌத்தத்துக்கு முதலிடம் என்பதையும் இந்த அரசமைப்பு உத்தேசத் திருத்தத்தில் ஏற்றுக்கொண்டதன் மூலம் கட்டமைப்புரீதியானதும், கலாசார ரீதியானதுமான தொடர் இன அழிப்புக்கான வழியை ஏற்படுத்தியுள்ளார்கள் எம்மவர்கள். இதனையா நாம் 'சாணக்கிய அரசியல்' என்று ஏற்றுக்கொள்வது? எமக்கான இலக்கைத் தாமே நிர்ணயித்துவிட்டா. தீர்வு முயற்சிகளில் இவர்கள் பங்குபற்றியுள்ளார்கள்? எத்தனை துறைசார் புத்திஜீவிகளின் ஆலோசனைகளை இதற்காகப் பெற்றிருந்திருக்கின்றார்கள் எமது தலைவர்கள்? மக்களின் எண்ணங்களும் மனோநிலையும் எமது தலைமைகளால் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டுள்ளன. இத்தகைய ஒரு ஆபத்தான நிலைமையை சீர்குலைக்கக்கூடாது என்பதற்காகவா இப்போது ஒற்றுமையை வலியுறுத்துகின்றார்கள்? எமது இனத்தை அழிப்பதற்கா அல்லது பாதுகாப்பதற்கா ஒற்றுமை வேண்டும் என்பதை நாம் தீர்மானிக்க வேண்டிய காலம் வந்துவிட்டது. எமது இனத்தை அழிந்து போக விடும் ஆலோசனைகளை ஆமோதிக்கும் எம்மவர் அவர்களின் ஆலோசனைகளின் அடிப்படையில் எம்மை அணி சேருமாறு கோருவதும் ஒற்றுமையை வலியுறுத்துவதும் விந்தையாக இருக்கின்றது. எமது அடிப்படைக் கொள்கைகளை அடையாளங்கண்டு அவற்றின் அடிப்படையில் ஒற்றுமை பிறந்தால் அன்றி தவறான அடிப்படைகளில் ஏற்படும் ஒற்றுமை ஆபத்தாக முடியும். இன்று தமிழ் மக்களுக்கு முன்பாக ஒரு வேண்டுகோளை நான் முன்வைக்கின்றேன்.

அதாவது தமிழ் மக்களின் தனித்துவத்தின் பால் பற்றுள்ளவர்கள் அனைவரும் வேறுபாடுகளைக் களைந்து, மனித உரிமைக் கோட்பாடுகளை மனதில் நிறுத்தி, கொள்கை அடிப்படையில் ஓரணியில் திரள வேண்டும். காலாதி காலமாக நாம் வலியுறுத்தி வந்த கொள்கைகளின் அடிப்படையில் பிரிக்கப்படாத வடக்குக் கிழக்கில் சமஷ்டி முறையிலான தீர்வு ஒன்றை அடைவதற்கு நீங்கள் யாவரும் முன்வரவேண்டும் என்று அழைக்கின்றேன். அது முடியாது என்று முணுமுணுக்கும் முக்கியஸ்தர்களின் முனகல்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காதீர்கள் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

பன்னாட்டுச் சமூகம் மற்றும் உலகெங்கும் வாழுகின்ற தமிழ் மக்களின் உதவியுடனும் நாம் எமது செயற்பாடுகளை நிறுவனமயப்படுத்தப்பட்ட அரசியல், பொருளாதார நடவடிக்கைகளினூடாக இனிமேல் முன்னெடுக்க வேண்டும். போர்க் குற்ற விசாரணை மற்றும் உண்மையை கண்டறியும் பொறிமுறைகளை ஏற்படுத்த நாம் பாடுபட்டு முயன்று அவற்றுக்கூடாக, தொடர்ந்தும் இருளில் வைக்கப்பட்டுள்ள சிங்கள மக்களுக்கு உண்மைகளைப் புரியவைத்து எமக்கான தீர்வை வென்றெடுக்க நாம் உழைக்கவேண்டும். முடியாதென்று எதுவுமில்லை. முயன்றால் முடியும்

(15ஆம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்ட வருடத்துக்குள் செலவழிக்காமல் அந்த நிதியை நிலையான வைப்புகளில் இட்டுவிட்டு நிதி முற்றாக குறிக்கப்பட்ட வேலைத்திட்டங்களுக்காகச் செலவழிக்கப்பட்டு விட்டது என ஆரம்பகாலங்களில் சபைக்கும் எமக்கு வாக்களித்த மக்களுக்கும் பொய்யான தகவல்களைக் கூறியதைக் கண்டித்து நான் கணக்காளர் நாயகத்துக்குக் கூட அறிவித்திருந்தேன். என்னுடைய அன்றைய செயற்பாடு தான் தொடர்ச்சியாக அவ்வாறான செயற்பாடுகளுக்கு முற்றுபுள்ளி வைக்க வழிசமைத்தது. எமது அசட்டைத்தனமான செயற்பாடுகளாலும், சில சேவைகளுக்கான பிரமா ணக்குறிப்புக்கள் இன்னும் தயார் செய்யப்படமையாலும் 3ஆயிரத்துக்கும் மேற்பட்ட வெற்றிடங்கள் இன்னும் நிரப்பப்படாமல் இருக்கின்றன.

**ஊழல், மோசடி அமைச்சர்கள் மீது இதுவரை நடவடிக்கையில்லை**

அமைச்சர்களுக்கு எதிரான குற்றச்சாட்டு க்களை விசாரிக்க அமைக்கப்பட்ட விசாரணைக்குழுவின் அறிக்கையில் சிபார்சு செய்யப்பட்ட சட்டபூர்வமற்ற மற்றும் ஊழல் நடவடிக்கைகள் தொடர்பாக மேலதிக விசாரணைகள் மற்றும் நடவடிக்கைகள் தேவையெனக் குறிப்பிடப்பட்டிருந்தும் இதுவரை அவ்வாறான மேலதிக விசாரணைகளோ, நடவடிக்கைகளோ ஏன் மேற்கொள்ளப்படவில்லை என்பது மாகாணசபை மீது மக்களுக்கு இருக்கும் நம்பிக்கையை மேலும் இழக்கச் செய்துள்ளது.

வருடத்துக்கு வெறும் 20 மில்லியன் ருபாவை எமது மக்களின் பயன்பாட்டுக்குப் பெற ஒப்பந்தமிட்டு பளையின் காற்றலை அமைப்பதற்கு யூலிப்பவர், பீற்றாபவர் என்ற நிறுவனங்களுக்கு அவர்கள் வருடம் ஒன்றுக்கு ஏறத்தாழ 1400 மில்லியன் இலாபத்தைப் பெறுவதற்குக் காணியை வழங்குவதற்கு ஒப்புதலை வழங்கியதன் மூலம் எம்மக்களுக்கு செய்த மகா தவறுக்கு மாகாணசபை என்ன பிரயத்தனம் மேற்கொள்ளப் போகின்றது.

இராணுவத்தினரின் பாவனைக்குத் தான் காணியை வழங்கவில்லையென முதலமைச்சர் தனது உரையில் குறிப்பிட்டார். அப்படியெனில் ஏன் பளையின் காற்றாலை அமைப்பதற்குக் காணியை வழங்கினீர்கள்?

எம்மால் அமைக்கப்பட்ட விசாரணைக்குழு வின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள விடயங்கள் எத்தனை பெரிய குற்றச்சாட்டுகள் இருந்தும் அதுதொடாபர்பாக ஏதாவது தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா? சுன்னாகம் நிலத்தடி நீர் தொடர்பான விடயம், மூங்கில் நடுகைத்திட்டத்தை நிராகரித்தமை, அனுமதி பெறத்தேவையற்ற விடயங்களுக்கெல்லாம் அனுமதி பெற வேண்டுமென ஓர் அமைச்சர் வலியுறுத்தியமை, அதிகார துஸ்பிர யோகங்கள், நிதிமோசடிக் குற்றச்சாட்டுக்கள் இவை தொடர்பாகத் தொடர் நடவடிக்கை எடுக்காமை பனங்காட்டு நரியைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளாகவே பார்க்க வேண்டியுள்ளது.

**ஓர் அமைச்சரவையைக்கூடக் கூட்ட முடியாத மோசமான செயற்பாடு**

கடந்த நான்கு மாதங்களாக ஓர் அமைச்சரவையைக் கூடக் கூட்ட முடியாத நிலைமைக்கு நம்மை நாமே இட்டுச் சென்றது எமது வினைத்திறனற்ற செயற்பாட்டின் உச்சக் கட்டமென்றே கருத வேண்டியுள்ளது.

இந்தத்தருணத்தில் நாங்கள் நிறைவேற்றிய பிரேரணைகள் பற்றியும் குறிப்பிட வேண்டும். இதுவரை 544 பிரேரணைகள் நாங்கள் நிறைவேற்றியிருக்கின்றோம். இவற்றில் ஒரு சிலவற்றைத் தவிர பெரும்பான்மையானவை எதுவித பிரயோசனமற்றவை. எமது சபை நேரத்தை வீணாக்கியதே நாம் கண்டவை. இருந்தும் சபையின் ஐக்கிய செயற்பாட்டுக்குக் குந்தகமாகச் செயற்படக்கூடாது என்பதானாலேயே அந்தப் பிரேரணைகளை நான் எதிர்த்து நிற்கவில்லை. மாகாண சபையின் சில பிரேரணைகள் ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை சாசனம் வரை தாக்கத்தை கொடுத்திருக்கின்றது என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

**நான் எதிர்த்தது எதிர்க்கட்சித் தலைவர் என்பதற்காககவல்ல!**


தொடர்ச்சியாக எமது மாகாண சபை வினைதிறனற்றே செயற்பட்டிருக்கின்றது என்று கூறுகின்றேன் என்று கருத வேண்டாம். அரசமைப்பு மாற்றத்துக்கான மாகாணசபையின் வரைவு மற்றும் முதலமைச்சரைப் பிரதிநிதித்துவப்படுத்தி நான் அரசமைப்பு வழிகாட்டல் குழுவின் முன்சென்று எமது மக்களுக்கு வேண்டிய அரசமைப்பு மாற்றம் தொடர்பாகப் பிரஸ்தாபித்தது மட்டுமல்ல அரசமைப்பு மாற்றத்துக்கான மாகாண சபையின் வரைவை கௌரவ முதலமைச்சருடன் சென்று சபாநாயகரிடம் கொடுப்பதிலும் எனது பங்கை வகித்துள்ளேன். ஆதலால் எதிர்க்கட்சித்தலைவர் என்பதற்காகவோ, அல்லது அரசியல்காழ்ப்புணர்விலேயோ நான் விடயங்களை எதிர்க்கவில்லை மாறாக எமது பல வீனங்கள், எமது வினைதிறனற்ற செயற்பாடுகள் தவறுகள் இழந்த சந்தர்ப்பங்களைச் சுட்டிக்காட்டுவதன் மூலம் இந்த மாகாணசபையை வினைதிறனுள்ள தாக செயற்பட வைப்பதற்கு முனைந்து ள்ளேன் என்பதைத் தான் என்னால் கூறி வைக்க முடியும்.

**அரசியல் நடத்தியதன் விளைவே தோல்வி**

அவைத்தலைவர் அவர்களே! எமது தோல்விக்கு முக்கிய காரணங்களில் ஒன்று ஒவ்வொரு விடயத்தையும் திறந்த கண்ணோட்டத்துடன் அணுகாமல் அரசியலாக்க முனைந்ததன் விளைவு என்றே கருதக்கூடியதாக இருக்கின்றது. ஒரு சம்பவத்தைக் கூறி எனது உரையை முடிவுக்குக் கொண்டு வருகின்றேன்.

சைவர்களுக்குத் திருவாசகம் ஒரு புனிதநூல். எமக்கு அண்மையில் திருவாசக அரண்மனை கூட இருக்கின்றது. இந்தத் திருவாசகத்தை மாணிக்கவாசகப் பெருமானார் இயற்றியது தொடர்பாக ஒரு வரலாற்றுச் சம்பவம் கூறப்படுகின்றது. குருந்த மர நிழலுக்குக் கீழே மாணிக்கவாசகர் அமர்ந்திருந்த போது சிவபெருமான் அங்கு வந்து அவரை 'வா' என அழைத்து இருக்கின்றார். முழுமையான ஆத்ம நிலையை அடையாத மாணிக்கவாசகருக்கு இறைவன் தான் அழைக்கின்றார் என்று தெரியாமையால் அவருடன் போக மறுக்கின்றார். சிவபெருமான் ஏனைய சிவனடியார்களை அழைத்துக் கொண்டு சென்று விடுகின்றார். அதன் பின்பு தான் மாணிக்கவாசகருக்குத் தெரியவருகி;ன்றது. தன்னை அழைத்தது சிவபெருமான் என்று. தனக்குக் கிடைத்த பெரிய வாய்ப்பை இழந்துவிட்டேன் என்று கதறிய கதறலே திருவாசகம் என்று கூறப்படுகின்றது. அதேபோல் ஐந்து வருடங்களாக எமக்குக் கிடைத்த வாய்ப்புக்களை இழந்ததை நினைத்து கதறுவோமாயின் ஒரு பெருவாசகமே உருவாக்கலாம்.

# நெஞ்சகலா நினைவுகளுடன்
# பதின்னான்காம் ஆண்டு



குலம் மகிழ 25 . 06 . 1946

குவலயம் நெகிழ 27 . 10 . 2004

## அமரர் சுப்பிரமணியம் செல்வராசா

(உரிமையாளர் - வாணி ரெக்ஸ், சாவகச்சேரி)

திதி: பூரணை (24.10.2018)

நிலையற்ற மானுடவாழ்வில் நிலைத்து நின்ற எங்கள் அப்பா!
நினைவுகளைக் கனவாக்கி நீண்ட தூரம் சென்றதென்ன?
ஆண்டுகள் எத்தனை தான் சென்றாலும்
ஆறுமோ எம் துயரம் அகிலமதில் வாழும்வரை
"செல்வம்" எனும் பெயருக்கு இலக்கணமாய் வாழ்ந்துவிட்டு.
சொல்லொணா துன்பத்தை பரிசாக தந்தீர்களேயப்பா!
அணுவணுவாக வதைக்கும் தீராத உங்கள் நினைவுகள் தான் - நாம்
உங்கள் மீது கொண்ட அன்பிற்கு நீங்களளிக்கும் தண்டனையாப்பா?
சிரித்த உம் வதனமெண்ணித் தினமும் வேதனையில் வாடுமெமக்கு
சிரித்து வாழ்ந்த காலமெல்லாம் கானலாகி
- பதின்னான்கு ஆண்டு கடந்து விட்டதப்பா!

(aja8131) (13.17)

கென்ஸ்மன் லேன்,
டச்சு றோட், சாவகச்சேரி.

கண்ணீர்பூக்களுடன் ஆத்ம அஞ்சலிக்காகப் பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்.

After A/L's Join PLATINUM PARTNER No.1 BTEC Centre in Sri Lanka

Pearson | BTEC | University of Wolverhampton | RICS | CIOB

20 வருடகால தொழிற்துறை சார்ந்த
உயர்கல்வித்துறையில் நம்பகமும், சிறப்புமிக்கதுமான
BCAS Campus உடன் இணைந்து UGC அங்கீகாரம்
கொண்ட UK பட்டப்படிப்புகளை தொடருங்கள்...



BTEC HND in Quantity Surveying / Civil Engineering

MSc or MEng
BSc (Hons) BEng (Hons)
BTEC HND in QS / Civil
After A/L

UGC Recognized / TVEC Approved

- நவீன கற்கை வசதிகளுடன் கூடிய பிரத்தியேக Civil Engineering, QS கற்கை நிலையத்தில் வழங்கப்படும் பாட நெறி
- பல்கலைக்கழக விரிவுரையாளர்களையும் அனுபவமிக்க Civil Engineering, QS நிபுணர்களையும் கொண்ட முழுநேர விரிவுரையாளர்கள்
- அங்கீகரிக்கப்பட்ட Laboratory களில் Material, Hydraulic, Soil நடை முறைப்பயிற்சிகள்

20 YEARS

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

MADHU 0777 692318
SANCHU 0777 102131
INTAKE NOW ON

BCAS Jaffna Campus,
#. 16, Point Pedro Road, Jaffna

BCAS Ranked "Platinum Partner" No.1 once again

Best Employer Brand Award 2017 | No.1 BTEC Centre in Sri Lanka 2016 | Best Academic & Industry Interface 2016 | Academic Impact Winner 2016 | No.1 Higher Education Provider 2014 | BTEC Gold Partner 2013 | Performance Excellence Award 2011 | Fastest Growing BTEC Centre 2010

021 221 9910 | 011 259 7217 | info@bcas.lk | www.bcas.lk

## யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்

திருமண பட்டுப் புடைவைகளின் பூங்காவனம்

# இந்தியன் செலக்ஷனின்

## தீபாவளி விசேட தள்ளுபடி

புத்தம் புதிய ஆடைத் தெரிவுகள்



| | | |
|---|---|---|
| கொட்டன் டொப் (Top) | - ~~1500/=~~ | 1000/= |
| டெனிம் டொப் (Top) | - ~~1500/=~~ | 1000/= |
| 2 in 1 சல்வார் துணி | - ~~1500/=~~ | 1000/= |
| 3 in 1 சல்வார் துணி | - ~~2000/=~~ | 1500/= |
| கொட்டன் சல்வார் | - ~~4000/=~~ | 2000/= |
| நெற் சல்வார் பெரியது | - ~~5000/=~~ | 2000/= |
| நெற் சல்வார் சிறியது | - ~~3500/=~~ | 1000/= |

15% - 50% வரை விலைக்கழிவு

15000/= இற்கு மேல் கொள்வனவு செய்யும் ஒவ்வொருவருக்கும் அழகிய சுவர் கடிகாரம் இலவசம்

லெகீன்ஸ் 3 இற்கு 1000/=

15000/= பெறுமதியான பட்டுச் சாறி
ஒன்றிற்கு 5000/= பெறுமதியான சாறி ஒன்று
இலவசம்

கொட்டன் Top. டெனிம் Top. மொடன் Top. சல்வார்கள், சல்வார் துணிகள், பட்டுச் சாறிகள், கொட்டன் சாறிகள், சில்க் சாறிகள், சேட், T-சேட், ரவுசர் வகைகள், பார்ட்டி புரொக்ஸ் என இன்னும் ஏராளமான ஆடைத் தெரிவுகள்



ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்

இடம் : யாழ் வீரசிங்கம் மண்டபம்
காலம்: 16.10.2018 - 06.11.2018 வரை

## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்
## தடைகளை வாடகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்வி கோரல் - 2018

சத்தியக் காட்டு சந்தைத்தொகுதி மற்றும் சங்கரத்தை சந்தைத்தொகுதிகளில் சபையினால் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கீ குறிப்பிடப்படும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட கடைகளை விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பீடு செ யப்பட்ட மாதாந்த வாடகைக்கு அமைவாக வாடகைக்கு வழங்குவதற்கான ஆகக் குறைந்த ஒரே முறையில் செ த்தக்கூடிய தொகைக்கான கேள்விகள் கீழ்காட்டப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக வலிகாமம் மேற்கு பிரதேச சபையினால் கோரப்படுகின்றது.

| தொ. இல | கடை இல | ஆகக்குறைந்த கேள்வித்தொகை (VAT,NBTவரிநீங்கலாக) | கேள்விவைப்புப் பணம்(மீளளிக்கக் கூடியது) | மீளளிக்கமுடியாதகேள்விப் படிவக்கட்டணம் (VAT,NBTவரிநீங்கலாக) |
|---|---|---|---|---|
| சத்தியக்காட்டுசந்தைகடைத்தொகுதி | | | | |
| 01 | 01 | 540,000.00 | 10,800.00 | 1,000.00 |
| 02 | 02 | 540,000.00 | 10,800.00 | 1,000.00 |
| 03 | 03 | 540,000.00 | 10,800.00 | 1,000.00 |
| | | | | |
| சங்கரத்தைசந்தைகடைத்தொகுதி | | | | |
| 01 | 01 | 585,000.00 | 11,700.00 | 1,000.00 |
| 02 | 02 | 585,000.00 | 11,700.00 | 1,000.00 |
| 03 | 03 | 585,000.00 | 11,700.00 | 1,000.00 |
| 04 | 04 | 585,000.00 | 11,700.00 | 1,000.00 |
| 05 | 05 | 585,000.00 | 11,700.00 | 1,000.00 |

கேள்விப்படிவம் வழங்கப்படும் திகதி :- 07.11.2018ம் திகதி பி.ப 2.00 மணிவரை
கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :- 08.11.2018 ம் திகதி நண்பகல் 12.00 வரை
கேள்விப்படிவம் திறக்கப்படும் திகதி :- 08.11.2018 ஆம் திகதி 2.00 மணிக்கு

**நியந்தனைகள்**

1. அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படும் கேள்விவைப்புப்பணம். மீளளிக்கப்படாத கட்டணங்கள், பெறுமதி சேர்வரி ஆகியவற்றைப் பணமாகசெலுத்தி ஆள் அடையாள அட்டையைச் சமர்ப்பித்து 25.10.2018 ஆம் திகதியில் இருந்து ஒரேமுறையில் செலுத்தக்கூடிய தொகைக்கான கேள்விப்படிவம் இணைப்பிரதிகளில் பெற்று 08.11.2018 ஆம் திகதி ந.ப.12.00 மணிக்கு முன்னர் விண்ணப்பித்தல் வேண்டும். தாமதமானவை நிராகரிக்கப்படும்.

2. அலுவலகத்தில் இணைப்பிரதிகளில் வழங்கப்படும் கேள்விப்படிவங்களிலேயே கேள்விகள் சமர்ப்பித்தல் வேண்டும். அலுவலகத்தால் விநியோகிக்கப்படும் படிவங்களில் விண்ணப்பதாரர் எவ்விதமாற்றங்களும் செய்தல் ஆகாது.

3. படிவத்தை பூரணப்படுத்துவதில் ஏற்படும் திருத்தங்கள் விண்ணப்பதாரரால் ஒப்பமிட்டு உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

4. கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்வோர் மூலப்பிரதி, இணைப்பிரதி ஆகிய இரண்டினையும் பூரணப்படுத்தி தமது கேள்விகளை கடித உறையிலிட்டு அரக்கு முத்திரையிட்டு மூலப்பிரதியை "தவிசாளர், வலிகாமம் மேற்கு பிரதேச சபை சுழிபுரம்" என முகவரியிட்டு கேள்வியடங்கிய கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக குறிப்பிடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படலாம் அல்லது அலுவலகத்தில் இதற்கென வைக்கப் பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடலாம். மற்றைய இணைப்பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

ʬ 08.11.2018 ஆம் திகதி ந.ப.12.00 மணிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படும் கேள்விப்பத்திரங்கள் மட்டும் அன்று பி.ப. 2.00 மணிக்கு கேள்விச் சபையின் முன்னிலையில் திறக்கப்படும். விண்ணப்பதாரர் அல்லது அவரின் எழுத்து மூல அதிகாரம் பெற்ற பிரதிநிதி அவ் வேளையில் சமுகமளிக்கலாம்.

6. 08.11.2018 ஆம் திகதி ந.ப 12.00 மணிக்கு பின்னர் இவ்வலுவலகத்திற்கு கிடைக்கும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

7. ஒரு விண்ணப்பப்படிவத்தில் ஒருகடைக்கு மட்டும் விண்ணப்பிக்கவேண்டும். ஒன்றுக்குமேற்பட்ட கடைகளுக்கு விண்ணப்பிப்பதாயின் ஒவ்வொரு கடைக்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் உரியமுறையில் சபையில் பெற்று விண்ணப்பிக்கலாம்.

8. அரசநிறுவனங்களும், கூட்டுத்தாபனங்களும், கூட்டுறவுச்சங்கங்களும் இக்கேள்வி நடைமுறைக்கு அமைவாக விண்ணப்பிக்கலாம்.

9. எக்கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்றுக்கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.

10. கேள்விதாரர்கள் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

11. கடந்தகாலங்களில் தவறுநர் பட்டியலில் (Defaulters list) அட்டவணைப் படுத்தப்பட்டோர் அல்லது இச் சபைக்கு குத்தகையாக, வாடகையாக, வரியாக நிலுவையிலுள்ளோர் கேள்விகள் கோர அருகதையற்றவர் ஆவார். அத்தகையோர் மறைமுகமாக இன்னொருவர் ஊடாக கேள்வி சமர்ப்பிப்பது கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் கேள்வி நிராகரிக்கப்பட்டு செலுத்திய வைப்புப்பணம் அரச உடமையாக்கப்படும். பிரதேசசபையுடனான சகல எழுத்து மூல, வாய்மூல தொடர்பாடல்கள் யாவும் குத்தகைக் காரராலேயே மேற்கொள்ளப்படவேண்டும். அவரது பிரதிநிதி ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

12. கேள்விகாரரால் சமர்ப்பிக்கப்படும் கேள்வித்தொகைகள் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிர்ணயத் தொகையைக் காட்டிலும் அதிகரித்ததாயிருத்தல் வேண்டும். ஆகக் கூடிய கேள்வித்தொகை ஏற்றுக்கொள்ளப்படும்.

13. ஏற்றுக்கொள்ளப்படும் சித்திகரக் கேள்விக்காரர் தமது கேள்வித்தொகையின் 15% பெறுமதிசேர் வரியாகவும் (VAT) 2% தேசத்தை கட்டியெழுப்புதல் வரியாகவும் (NBT) வலிமேற்கு பிரதேசசபை மூலம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்துதல் வேண்டும்.

14. வாடகை ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் விலை மதிப்பீட்டுத்திணைக்களம் மதிப்பிட்ட கடைக்கான மாதாந்த வாடகையும் மற்றும் 15 % பெறுமதிசேர் வரி (VAT), 2 % தேசத்தை கட்டியெழுப்புதல் வரி (NBT) ஆகியவற்றைப் பணமாக மாதாந்தம் செலுத்துதல் வேண்டும்.

15. மாதாந்த வாடகைப் பணத்தை அந்தமாதம் 30ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். அவ்வாறு செலுத்தத் தவறின் கட்டுப்பணத்தின் 10 சதவீதம் தண்டப்பணமாகச் மேலதிகமாக செலுத்துதல் வேண்டும். தொடர்ந்து இரு மாதங்களுக்கு வாடகைப் பணத்தினை செலுத்தத் தவறுவோரது ஒப்பந்தம் மறு அறிவித்தலின்றி இரத்துச்செய்யப்படும்.

16. முற்குறிப்பிடப்பட்ட 14வது 15வது நிபந்தனைப் பிரகாரம் நடக்கத்தவறுமிடத்து வாடகை ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டுச் செலுத்தப்பட்ட பணத்தொகைகள் மீளளிப்புச் செய்யப்படமாட்டாது என்பதுடன் அவர்களது பெயர் தவறுநர் பட்டியலில் அட்டவணைப்படுத்தப்படும்.

17. தங்களால் நடாத்த உத்தேசிக்கப்படும் வியாபாரத்தின் தன்மை சபையால் பரிசீலிக்கப்பட்ட பின்னரே அனுமதி வழங்கப்படும்.

18. குத்தகையாளர் தான் நடத்தும் தொழிலின் அல்லது வியாபாரத்தின் வருடாந்த உத்தரவுக் கட்டணத்தை வலி மேற்கு பிரதேச சபையினால் தொகை குறித்து அறிவிக்கப்பட்டதும் குறித்தகாலத்தில் செலுத்தப்படல் வேண்டும்.

19. வாடகைக்குகொடுப்பவர் குறைந்தது 05 வருடங்களுக்கு ஒருமுறையும் அல்லது தேவையேற்படின் காலத்திற்கு காலம் வாடகையை மீள் பரிசீலனை செய்வதற்கு அத்தொகையை அறவீடு செய்வதற்கும் பூரண அதிகாரமுண்டு. அதற்கு வாடகைக்காரர் மறுப்பு தெரிவிக்கமுடியாது.

20. குத்தகைக்குப் பெற்றகடையினர் மின்சார இணைப்புக்கட்டணங்கள் மற்றும் மாதாந்தக் கட்டணங்கள் யாவும் குத்தகையாளரின் பொறுப்பில் அமையும்.

21. கடையை வேறு ஒருவருக்கும் சாட்டுதல் செய்யவோ அல்லது உப வாடகைக்கு வழங்கவோ இயலாது. அவ்வாறு உப வாடகைக்கு வழங்கப்பட்டிருத்தல் தொடர்பாக சபையினால் கண்டுபிடிக்கப்படின் எந்த ஒரு அறிவித்தலும் இன்றி கடை மீளப்பெறப்படும்.

22. கேள்வித் திகதிக்கு முந்திய ஐந்து வருட காலத்திற்குள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்செயல்களுக்காக நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்ட ஒருவர் எந்தக் கடைக்கும் கேள்விகள் சமர்ப்பிப்பதற்கு அருகதையற்றவராவார்.
* மிகை இலாபம் ஈட்டியகுற்றம்
* நிறுத்தல் முகத்தலளவைக் கட்டளைச் சட்டத்தை மீறியகுற்றம்
* சந்தை உப விதிகளை மீறிய குற்றம்

23. உள்ளூராட்சி மன்றங்களுக்கு சொந்தமான சந்தைக்கடைகளை குத்தகைக்கு விடுதல் தொடர்பான 1980/40 ஆம் இலக்க சுற்றறிக்கையில் குறிப்பிடப்படும் நியந்தனைகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

24. சித்திபெற்ற கேள்விதாரர் குறித்த காலத்தில் கட்டுப்பணம் செலுத்தத் தவறின் எந்தவித அறிவித்தலுமின்றி கறுப்புப்பட்டியலில் சேர்க்கப்படுவதுடன் கேள்விவைப்புப்பணமும் மீளளிக்கப்படாது சபை நிதிக்குமாற்றப்படும்.
மேலதிக விவரங்களை அலுவலக நாள்களில் கடமைநேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**த.நடனேந்திரன்,**
**தவிசாளர்,**
**வலிகாமம் மேற்குபிரதேசசபை, சுழிபுரம்.**
**24.10.2018**




VAROD
VANNI REHABILITATION ORGANIZATION FOR THE DIFFERENTLY ABLED

## சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு வரோப் அமையம் சமூகத்திற்கிடையிலான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் நடத்தும் கட்டுரைப் போட்டி - 2018

* பாடசாலை மட்டத்திலிருந்து தரம் 10 – 13 மாணவர்கள் பங்குபற்றலாம்.
* ஆர்வமுள்ள 18 வயதிற்கு மேற்பட்டஅனைவரும் பங்குபற்றலாம்
* தெரிவு செய்யப்பட்ட சிறந்த கட்டுரை பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

பாடசாலை மட்டத்தில் பங்குபற்றும் போட்டியாளர்கள் தமது விண்ணப்பப் படிவத்தில் பாடசாலை அதிபரின் கையொப்பத்துடனும் ஏனையவர்கள் கிராம சேவையாளர் அல்லது மதகுருமாரின் கையொப்பத்துடன் நிறைவேற்று இயக்குனர், VAROD 4ஆம் கட்டை, மன்னார் வீதி, பம்பைமடு, வவுனியா எனும் முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

**கீழ்வரும் தலைப்புக்களில் போட்டிகள் இடம் பெறும்.**

**18 வயதிற்கு மேற்பட்டோருக்கான கட்டுரை .. லைப்பு (பாடசாலை மாணவர் அல்லாதோர்)**
1. மாற்றுத் திறனாளிகளுக்காக அரச.அரசசார்பற்ற, சமூக .தின் கடமைகளும்,பொறுப்புக்களும்
2. மாற்றுத் திறனாளிகளுக்காக அரசு ஏற்படுத்தியுள்ள கல்வி, சுகாதார, பொருளாதார, அரச வேலை வாய்ப்பு தொடர்பானவசதிகள்.

**பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரைத் தலைப்பு**
1. மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள்,தேவைகள்,அனுகும் வசதிகள்
2. இலங்கையில் சாதனை படைத்த மாற்றுத்திறனாளிகள் (துறைசார் ரீதியாக)

| இல | வயதுபிரிவு | கட்டுரை சொற்கள் |
|---|---|---|
| 01 | தரம் 10 | 300 - 500 |
| 02 | தரம் 11 | 500 - 750 |
| 03 | க.பொ.த.உ/த | 750 - 1000 |
| 04 | 18 மேல் | 1000 - 1500 |

தெரிவு செய்யப்படும் போட்டியாளர்களுக்கு வெகுமதியான பரிசுத் தொகை வழங்கப்படும்

| இல | வயது பிரிவு | இடம் | தொகை |
|---|---|---|---|
| 01 | பாடசாலை மாணவர்கள் | 1 ஆம் பரிசு | 10.000.00 |
| | | 2ஆம் பரிசு | 6.000.00 |
| | | 3ஆம் பரிசு | 3.000.00 |
| 02 | 18 மேல் | 1ஆம் பரிசு | 20.000.00 |
| | | 2ஆம் பரிசு | 12.000.00 |
| | | 3ஆம் பரிசு | 6,000.00 |

* இதனைவிட ஆறு சிறந்த கட்டுரைகளுக்கு ஆறுதல் பரிசில்களும் வழங்கப்படும்.
* கட்டுரைகள் யாவும் ஐப்பசி மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னதாக எமது அலுவலகத்திற் கிடைக்குமாறு பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கவேண்டும்.
* விண்ணப்பப் படிவத்தினை கட்டுரையுடன் இணைத்து அனுப்பி வைக்க வேண்டும்.
* கட்டுரையின் முடிவில் உசாத்துணை நூல்கள் குறிப்பிடப்பட வேண்டும்.
* கட்டுரையில் பெயர் விவரம் குறிப்பிடலாகாது.

**தகவல் :- நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர்**
**மேலதிக தொடர்புகளுக்கு-**
**அருட்தந்தை கிறிஸ்டி ஜோன் CMF**
**திரு.கஜேந்திரன்**

**தொலைபேசி இலக்கம் -**
**077 220 7346,**
**077 236 3532**

**விண்ணப்பப்படிவம்** **அலுவலகப் பயன்பாட்டிற்கு**

**சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு வரோட் அமையம் சமூகத்திற்கு இடையிலான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் நடத்தப்படும் கட்டுரைபோட்டி– 2018**

01. முழுப் பெயர் :..........................................
02. மாவட்டம் :-..........................
03. தற்போதைய முகவரி : ..........................................
04. பாடசாலை:- ..........................................
05. கற்கும் தரம் : ..........................
06. தேசியஅடையாளஅட்டை இலக்கம்:
07. தொலைபேசி இலக்கம் :
08. பால் :
09. பிறந்த ஆண்டுதிகதி : ஆண்டு மாதம் திகதி

..........................
போட்டியாளர் கையொப்பம்

..........................
திகதி

உறுதிப்படுத்தும் உத்தியோகத்தர் அல்லதுமதகுருவானவரின் கையொப்பம்

பதவி :..........................

முகவரி :..........................................

திகதி :..........................

(IN/8083)(11,17)

## தையல் பயிற்சிகள் ஆரம்பம்

NAITA நிறுவனத்துடன் இணைந்து தையல் கலையை அடிப்படையில் இருந்து விளங்கிக் கொள்ளக்கூடிய முறையில் பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவுள்ளது.

*மேலதிக விவரங்களுக்கு,*

**KAIS தையல் பயிற்சி நிலையம்**
**இல. 79, கதீற்றல் வீதி (யாழ். ஆயர் இல்லம் முன்பாக)**
**யாழ்ப்பாணம். 077 666 5628/ 021 222 7897**

## மரண அறிவித்தல்



### திருமதி இந்திராணி ஸ்ரீரங்கன்

**(ஓய்வுபெற்ற பிரதி அதிபர் - யா/ மெதடிஸ் பெண்கள் பாடசாலை)**

அல்வாய் வடமேற்கு, திக்கத்தைச் சேர்ந்த திருமதி இந்திராணி ஸ்ரீரங்கன் (ஓய்வுபெற்ற பிரதி அதிபர் - யா/ மெதடிஸ் பெண்கள் பாடசாலை) கடந்த (22.10.2018) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் திருவாளர் கனகசிவநாயகம் ஸ்ரீரங்கனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி வேலுப்பிள்ளை - நாகபூஷணி அம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி கனக சிவநாயகம் - திலகவதி அம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ் சென்ற ஜீவகராணி, வினாயகமூர்த்தி (முன்னாள் ஆசிரியர் - ஹாட்லிக் கல்லூரி, முன்னாள் அதிபர் - அல்வாய் வடக்கு றோ.க.த.க.பாடசாலை) ஆகி யோரின் ஆருயிர் சகோதரியும், திருமதி சுமதி இளங்கோஞானியாரின் (ஆசிரியர் - யா/ இந்துமகளிர் கல்லூரி) ஒன்றுவிட்ட சகோதரியும், திருமதி ஞானச்செல்வி வினாயகமூர்த்தி, சுகேந்திராதேவி மாணிக்கவாசகர், Dr.இளங்கோஞானியார் ஆகியோரின் அன்பு மைத்துனியும், சனந்தன், சிவோத்தமபூஷணி, வித்யாபூஷணி ஆகியோரின் பாசமிகு அத்தையும், மதூரி, கதிர்ஞானியார் ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.10.2018) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக திக்கம் இந்து மயானத்துக்கு எடுத்துச் சென்று தகனம் செய்யப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS/18493)(11.17)

**தகவல்:- குடும்பத்தினர்.**

## கண்ணீர் அஞ்சலி



எமது சக உத்தியோகத்தர்
**ம.சரிதாஸ் (முகாமை. உதவியாளர்)**
அவர்களின் பாசமிகு தந்தையார்

அமரர்
### செல்லப்பா மகேந்திரன்

அவர்களின் பிரிவினால்
துயருற்றிருக்கும் அவரது
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அவரது ஆத்ம சாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்...

**- ஊழியர் நலன்புரிச் சங்கம் -**
**மாகாணத் திறைசேரி, வடக்கு மாகாணம்**

## மரண அறிவித்தல்

### பர்னாந்து றோமான்



தோற்றம் 09.08.1942 — மறைவு 22.10.2018

உயரப்புலம், ஆனைக்கோட்டையைச் சேர்ந்த பர்னாந்து றோமான் கடந்த (22.10.2018) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பர்னாந்து - வெரோணிக்கம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான ஞானப் பிரகாசம் - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் அப்புலோணிக் கம்மாவின் அன்புக் கணவரும் பிறிஜிற்றா (சுவிஸ்), யூடிற்றா, ஜனகன் (கொலன்ட்) ஆகியோரின் அன்புத் தந்தையும் அருள் (சுவிஸ்), ஞானசேகர், ரூபினா (கொலன்ட்) ஆகியோரின் அன்பு மாமனாரும் மார்கிரேட், அன்னமேரி (கனடா), ஆனந்தராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும் அந்தோனிப்பிள்ளை, கிறிஸ்தோப்பர் (கனடா), வசந்தா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்க ஆராதனைக்காக இன்று (24.10.2018) புதன்கிழமை பி.ப. 3.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர் காக்கைதீவு சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**உயரப்புலம், ஆனைக்கோட்டை.**

**தகவல்: குடும்பத்தினர்.**

## மேல் மாடி வீடு வாடகைக்கு

திருநெல்வேலிச் சந்தை அருகில் சகல வசதியும் கொண்ட வீடு பல்கலைக்கழக மாணவிகளுக்கு அல்லது குடும்பத்தினருக்கு மட்டும். வாடகைக்குண்டு நேரில் பேசித் தீர்க்கப்படும்

(cs 20776) (13.17) **021 205 2237**

## வீடு வாடகைக்கு

நல்லூருக்கு அருகில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு நாள், மாத அடிப்படையில் வாடகைக்கு வழங்கப்படும்.

(cs 20776) (13.17) **077 170 3741**

## உடன் தேவை

கொழும்பில் உள்ள உயர் தர உணவகம் ஒன்றில் யாழ்ப்பாண உணவு வகைகளை மட்டும் தயாரிக்கக் கூடிய சமையல்காரரும் உதவியாளரும் ஆண்கள் உடன் தேவை.

077 525 1226

## பெண் விற்பனையாளர் தேவை

யாழ்நகருக்கு அருகில் இயங்கும் பல்பொருள் விற்பனை நிலையத்துக்கு பெண் விற்பனையாளர் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

077 038 8336

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட IT முதுமாணி, Consultant in A Leading New York Based Co இல் தொழில்புரியும் மணமகனுக்கு, வயது - 30-33, உயரம் -5'5" -5'8", மெல்லியவர், நிறம் முக்கியமல்ல, பல்கலைப் பட்டம் பெற்ற மணமகள் தேவை.

**754 252 0213 (அமெரிக்கா)**




## மரண அறிவித்தல்

# திருமதி சாரதாதேவி (லலி) பேரின்பநாதன்



சுவாமியார் வீதி, ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும், வேலணை வடக்கு, மணியகாரன் வீட்டிலும், கிளிநொச்சி, கொழும்பு பதிவாளர் வீதி, திருநெல்வேலி ஆகியவற்றை வதிவிடமாகவும், கோண்டாவில் கிழக்கு, நாகபூஷணி அம்மன் வீதியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சாரதாதேவி (லலி) பேரின்ப நாதன் கடந்த (21.10.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரமசாமி யோகம்மா (மகேஸ்) தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான கணபதிப் பிள்ளை பூமணி தம்பதியரின் அன்புமருமகளும் பேரின்ப நாதனின் (தேவிகாஸ்) அன்புமனைவியும் பிரசாந்தன், துஷிக்கா (கனடா), ருசாந்தன் (சுவீடன்) ஆகியோரின் அன்புத்தாயும் தனுஜா, துர்க்காயினி ஆகியோரின் அன்புமாமியும் தகேஷின் அன்பு அப்பம்மாவும் சமூக பாலன் (பாலு, பிரான்ஸ்), காலஞ்சென்ற சுலோஜனாதேவி (ரதி) மற்றும் சந்திரபாலன் (பிரான்ஸ்), ஜெயபாலன் (நெதர்லாண்ட்), இந்திர பாலன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச்சகோதரியும் இராஜமலர், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் அருந்ததி, கௌசல்யா, திலகா, நகுலசபாநாதன் (கொழும்பு), சபாநாதன் (ஜேர்மனி), சாந்தினி, (கனடா), சிவாநாதன் (கொழும்பு), நாகேஸ்வரி (கிளிநொச்சி), நந்தினி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் அபி, கபி ஆகியோரின் அன்பு அன்ரி அம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.10.2018) புதன் கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல்தகனக்கிரியைக்காகவேலணைசாட்டிஇந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : மகன் (பிரசாந்தன், 077 719 1108), மகள் (துஷிக்கா, 0016 477190951), மகன் (ருசாந்தன், 0046 7355 90828)**

சர்வதேச முதியோர் மாத நிகழ்வை முன்னிட்டு

**வடமாகாணத்தில் 100,90 வயதிற்கு மேற்பட்டோர்களை கௌரவித்து முதியோர் மலர் வெளியிடும் நிகழ்வு**

காலம் : 26.10.2018 - வெள்ளிக்கிழமை
நேரம் : முற்பகல் 9.30 மணி
இடம் : தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான ஆலய முன்பாக உள்ள இலங்கை முதியோர் சுக வாழ்வுக்கழக மண்டபம்

தொடர்புகளுக்கு:
தலைவர் : 077 606 8656
செயலாளர் : 077 663 6596

அனுசரணை: POSSIBLE GREEN (Pvt)Ltd

ராசி அதிர்ஷ்டம்
திகதி 23.10.2018 வெற்றி வாரம் 2387 வர்ணம் நீலம்
சிம்மம்
வெற்றி இலக்கங்கள் 26 44 51 59
புதன் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3,415,872/=
2018.10.24 ம் திகதி புதன் கிழமை பச்சை நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

கோடிபதி சனிதா KOTIPATHI SHANIDA
சீட்டிழுப்பு வாரம்: 358
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2018.10.23
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 99,181,288/-
F 12 37 71 73
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 412
வர்ணம் : நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2018.10.23
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 62,818,390/-
வெற்றி இலக்கங்கள்
07 10 15 49 S
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>AK என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

# புலிகள் இன்னமும் இயங்குகின்றனர்

## பொதுபலசேனா கூறுகிறது

விடுதலை புலிகள் அமைப்பின் அரசியல் தலைமைத்துவம் தொடர்ந்தும் செயற்புட்டுக்கொண்டே இருக்கின்றது. அவர்களை முற்றாக அளிக்கவில்லை.

இவ்வாறு பொதுபலசேனா அமைப்புத் தெரிவித்துள்ளது. கொழும்பில் பொதுபலசேனா அமைப்பு ஏற்பாடு செய்திருந்த செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோது வித்தாரந்தெனியே நந்த தேரர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது

புலிகள் அமைப்பில் போர் செய்தவர்கள், அரசியல் தலைமைத்துவம், சர்வதேச தலைமைத்துவம் என 3 பிரிவுகள் காணப்பட்டன.

இறுதிப் போரின் நிறைவில் போர் செய்த விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் கொல்லப்பட்ட பின்னர் மூன்று தசாப்தகாலமாக நாட்டில் காணப்பட்ட பயங்கரவாதம் முடிவடைந்து விட்டது என்றே அனைவரும் கருதினார்கள்.

ஆனால் புலிகள் அமைப்பில் போருக்குத் தலைமை வகித்த பிரிவு மட்டுமே தோற்கடிக்கப்பட்டது. அரசியல் தலைமைத்துவம், சர்வதேச தலைமைத்துவம் என்பன தொடர்ந்தும் இயங்கி கொண்டேதான் இருக்கின்றன.

2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டபோதிலும், நாட்டில் பயங்கரவாதம் முற்றாக ஒழிக்கப்படவில்லை - என்றார். (ற)

### அனந்தியால்...

அரசுக் கட்சியிலிருந்து விலகுவதாக கட்சியின் செயலருக்கு அறிவித்துள்ள நிலையில், கட்சியின் செயலரால் எனக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அவர் இன்றைய தினத்துக்குப் பின்னர் கட்சியிலிருந்து விலகுவதை அறிவித்திருக்கலாம் என்பது எனது தனிப்பட்ட நிலைப்பாடு என்றார்.

இதன்போது குறுக்கிட்ட ஆளும் கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், கட்சிச் செயலர் உங்களுக்கு தனிப்பட அனுப்பியதை இங்கு ஏன் அறிவிக்கின்றீர்கள் என்று கேள்வி எழுப்பினார். கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன், கட்சி விடயத்தை இங்கு ஏன் பேசுகின்றீர்கள் என்றார்.

கட்சிகள் ஊடாகத்தான் இங்கு பிரதிநிதிகளாக உள்ளீர்கள் என்று அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் சுட்டிக்காட்டினார். அதை இங்கு எடுக்க வேண்டாம் என்று மீண்டும் சர்வேஸ்வரன் கூறினார். இதன்போது குறுக்கிட்ட ஆளும் கட்சி உறுப்பினர் கே.சயந்தன், இது சபை விவகாரத்துடன் சம்பந்தப்பட்டது. உறுப்பினர் ஒருவருக்கான கொடுப்பனவு உள்ளிட்ட விடயங்கள் சபையால் முன்னெடுக்கப்படுகின்றது என்பதைத் தெரிவித்தார். மீண்டும் கருத்துத் தெரிவித்த சிவாஜிலிங்கம், எந்தப் பதவிநிலை உறுப்பினராக இருந்தாலும், தேர்தல் ஆணையம் பதவி நீக்கும் வரை அவர் உறுப்பினர் தான் என்று கூறினார்.

அன்பாகக் கேட்கின்றேன் இது விவாதமில்லை. என்னுடைய அறிவித்தல் மட்டும் என்று தெரிவித்து விடயத்தை முடிவுக்கு கொண்டு வந்தார். (5.21.26)

### முடிந்தது...

என்றே ஒவ்வொருமுறையும் அறிவிக்கப்பட்டாலும், உரிய நேரத்துக்கு ஆரம்பமாகவில்லை. நேற்றைய அமர்வும் உரிய நேரத்துக்கு ஆரம்பமாகவில்லை.

தேநீர் இடைவேளைவரையில் முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. தேநீர் இடைவேளையைத் தொடர்ந்து முதலமைச்சர் உரை ஏனைய உறுப்பினர்களின் உரைகள் தொடர்ந்தன. உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் உரையாற்றுவதற்கு 3 தொடக்கம் 5 நிமிடங்கள் நேரக் கட்டுப்பாடு அவைத் தலைவரால் விதிக்கப்பட்டபோதும் மூன்று உறுப்பினர்களைத் தவிர ஏனையோர் அதனைப் பின்பற்றவில்லை. இதனால் சபை அமர்வு இரவு வரை நீடித்தது. சபை அமர்வு அவைத் தலைவரின் உரையுடன் 7.25 மணிக்கு நிறைவுக்கு வந்தது. இதன் பின்னர் புதிதாக உருவாக்கப்பட்டு காலையில் அனுமதிக்கப்பட்ட மாகாணக் கீதம் இசைக்கப்பட்டது. முதலாவது மாகாண சபையின் அமர்வு 7.30 மணியுடன் நிறைவு பெற்றது. (5.21)

### இன்று...

என்றா படம் எடுக்கிறியள் என்று சிரித்துக் கொண்டே கேட்டு விட்டு முதலமைச்சர் நகர்ந்தார். (5)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

இன்று ஆடற்கலை வாழ்வின் மாட்சி விதப்புவிழா காணும் முதுநிலை ஆடலாசான் ஆற்றுகையாளன்

**கலைஞர் வேலானந்தன்**

அவர்களை வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
கலைக்கோயில் ஆடல் நிறுவனம்
ஆசிரியர், மாணவர்கள்




## மரண அறிவித்தல்

### திருமதி சின்னம்மா செல்லையா



பிறப்பு 22.11.1919 — இறப்பு 23.10.2018

காரைநகர் தங்கோடையைப் பிறப்பிட மாகவும், கொக்கு வில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மா செல்லையா நேற்று (23.10.2018) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை பொன்னுப்பிள்ளை தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான ஆனந்திமுருகேசு சீதாப்பிள்ளை தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்ற செல்லையாவின் அன்புமனைவியும் சிவஞானசுந்தரம் (பாணந்துறை), தியாகராஜா (லண்டன்), Dr.பாலசுப்பிரமணியம் (கொழும்பு), மகேஸ்வரி (கொக்குவில்) ஆகியோரின் அன்புத்தாயும் சுசிலாவதி, தனலட்சுமி, சுசி, சபாரத்தினம் ஆகியோரின் அன்பு மாமியும் பத்மராஜ், லோகேந்திரா, சுகந்தி, தரங்கி, சிறிலதா, சிறிவேணி, சிறிகரன், சிறிசைலா, கிருத்திகா, கஜேந்திரவர்மன், கலைச்செல்வன், ரவீந்திரன், பாஸ்கரன், சசிகரன் , அனுசா, நிறஞ்சலா, சகுந்தலா, ஜனக, பியந்த, சிவானந்தராஜா, நித்தியானந்தம், புஸ்பராணி, தவேந்திரன், Dr.சிவகுமாரன், சாந்தினி, சித்திரா, தர்சினி, தவரூபன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் அசேல், சேசான், அலோன்சா, கேசித்த, றெமேகா, ஜெசாணி, சதீஸ், நிவேதியா, ரசிகா, கீர்த்தி, கலையா, சயன், தர்சிகா, தாருகா, அஸ்வின், துபிஷன் ஆகியோரின் அன்புப்பூட்டியும் காலஞ்சென்றவர்களானதாமோதரம்பிள்ளை, சிவபாக்கியம், மனோன்மணி ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை, தங்கம்மா, பொன்னம்மா, மாரிமுத்து, இராசையா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.10.2018) வியாழக்கிழமை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நாகலிங்கம் வீதி,
கொக்குவில்.**

**தகவல் :
குடும்பத்தினர்.**

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



25.09.2018 அன்று சிவபதமெய்திய எமது குடும்பத்தலைவி


அமரர்

**நவரத்தினம் கனகசபை**

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (24.10.2018) புதன்கிழமை காலை 6 மணியளவில் தாமரைக்குளத்தடி (கல்லூரி வீதி) அந்தியேட்டி மண்டபத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நாளை (25.10.2018) வியாழக்கிழமை காலை 9 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம். அத்துடன் எமது துயரில் பங்கு கொண்டு இறுதி அஞ்சலியில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது நெஞ்சம் மறவா நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஐயனார் கலட்டி, பருத்தித்துறை. — குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த (24.09.2018) திங்கட்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்

**மார்க்கண்டு ஸ்ரீதர் (பாபு)**

(இ.போ.ச. (CTB) கோண்டாவில் சாலை சாரதி)

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (24.10.2018) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

நாச்சிமார் வீதி,
நவாலி வடக்கு, மானிப்பாய்.

குடும்பத்தினர்.

## மணிவிழா நாயகனை
## உளமார பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கல்விப்புலத்தில் ஆசிரியராகவும். ஆசிரிய ஆலோசகராகவும், உதவிக்கல்விப்பணிப்பாளராகவும் பணியாற்றி நேற்று (23.10.2018) மணிவிழா காணும் நாயகன்



**திரு.**
**தவமணி சிவகுமார்**

அவர்களை உளமார பாராட்டுவதுடன் அவரது ஓய்வுக்காலத்தில் சீரும் சிறப்பும் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

**Congratulations!**



வாழ்த்துவோர் : உடற்கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர், உடற்கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர், உடற்கல்வி ஆசிரியர்கள், தென்மராட்சி கல்வி வலயம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**பூபாலசிங்கம் உதயகுமார்**

எம் உயிரின் பாதி
உன்னுடன் உதிர்ந்ததப்பா
ஆண்டுகள் ஆயிரம் அகன்றாலும்
ஆருயிர் தந்தையே
நீர் தந்த அன்பின் நிழலில்
வாழும் உன்...

தோற்றம் 27.02.1961 | மறைவு 04.11.2017

11, கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
06 . 02 . 1940



இறப்பு
03 . 11 . 2017

**திரு. கந்தையா சிவஞானம்**

திதி : 24.10.2018

அன்புடனும் பண்புடனும் பாசத்துடனும்
வழி நடத்திய எங்கள் அன்புத் தந்தையே
நீங்கள் இல்லாத உலகம் இருள் மயமானதே
எங்கே காண்போம் உங்கள் முகத்தை?
உங்கள் பிரிவைத் தாங்குமா எங்கள் இதயம்?

58, ஹாமஸ் அவனியு,
வெள்ளவத்தை

தகவல்
மனைவி, பிள்ளைகள்
011 2503552

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
06 . 03 . 1938



இறப்பு
24 . 10 . 2008

**வேலுப்பிள்ளை ஜெகதீசன்**


திதி : ஐப்பசிமாத தேய்பிறை ஏகாதசி

நேசத்துடனும் அன்பு பாசத்துடனும்
ஒரு கூட்டுக்கிளியாக
எமை வளர்த்து ஆளாக்கி
நேர் வழியில் வாழவைத்த
எம் அன்புத் தெய்வத்தை
எம் உள்ளங்களில் இருத்தி
என்நாளும் வணங்குகின்றோம்

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம்
17 . 04 . 1956



மறைவு
21 . 10 . 2018

**வீரசிங்கம் செல்வராசா**

**(தம்பி கடை உரிமையாளர், ஊரெழு)**

ஊரெழுவைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வீரசிங்கம் செல்வராசா கடந்த (21.10.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரசிங்கம் மனோன்மணி தம்பதியரின் ஏகபுத்திரனும் காலஞ்சென்றவர்களான இரத்தினம் இராச லட்சுமி தம்பதியரின் அன்புமருமகனும் தர்சினியின் (ரதி) அன்புக்கணவரும் வவசியா (லண்டன்), நிரோஷ்வர்மன், சதுஷ்வர்மன் ஆகியோரின் அன்புத்தந்தையும் ரமேஸ்குமாரின் (லண்டன்) அன்புமாமனும் அக்ஷராவின் (லண்டன்) அன்புப்பேரனும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.10.2018) வியாழக் கிழமை மு.ப. 11மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பொக்கனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஊரெழு கிழக்கு, ஊரெழு.
077 749 0947, 021 224 0806.

தகவல்
குடும்பத்தினர்.

## உடனடியாகத் தேவை

எமது தனியார் காரியாலயத்துக்கு பின்வரும் பதவிகளுக்கு ஆள்கள் தேவை.

- Accounts Clerks - பெண்
- Management Assistant - பெண்

க.பொ.த. உயர்தரம் படித்தவர்கள் விரும்பத்தக்கது. தகுதியுடையவர்கள் சுயவிவரக் கோவையுடன் திங்கள் மற்றும் செவ்வாய்க் கிழமை (29.10.2018. 30.10.2018) மு.ப. 10.30 மணிக்கு இல. 758, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு சமுகம் தரவும்.

**பணிப்பாளர்.**

(IN 8133/15/17)


SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் ▶ 872

சீட்டிழுப்பு திகதி ▶ 2018.10.22 திங்கட்கிழமை


M 48 61 69 74

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 56,058,448/-

தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
தாளியங்கி குரல் பதிலுக்கு 0114 825 825 ஐ அழையுங்கள்.

பச்சை நிற டிக்கட்டுகள் 2018.10.25ம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.


## மரண அறிவித்தல்



### கருணாநிதி ராஜநிதி

இல.152/7. இராமநாதன் வீதி. கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும். பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட கருணாநிதி ராஜநிதி 18.10.2018 வியாழக்கிழமை பிரான்ஸில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கருணாநிதி மற்றும் பரமேஸ்வரி தம்பதிகளின் அன்புப் புதல்வரும். சாந்தியின் அன்புக் கணவரும். லூட்சியாவின் அன்புத் தந்தையும். பராநிதி. தயாநிதி ஆகியோரின் பாசமிகு சகோதரரும். சந்திரகுமார். உதயராசா ஆகியோரின் மைத்துனரும். விதுசா. நிதுர்சியா. குதாஜலன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.10.2018) புதன்கிழமை காலை 9 மணியளவில் பிரான்ஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**தகவல்:- உதயராசா (குமார்)**
**தயாநிதி குடும்பம்**

**077 985 3438, 077 969 0933**

## வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை
## பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகம், பண்டத்தரிப்பு
## ஆதனப்பெயர் மாற்ற அறிவித்தல்

**வட்டாரம் - 04**
**உத்தேச ஆதன இல - 4/34**
**வீதி - முல்லையடி றோட்**
**கிராம சேவையாளர் பிரிவு - J/ 146, பண்டத்தரிப்பு**

வட்டாரம் 04. முல்லையடி றோட். உத்தேச ஆதன இல 4/34 இல் அமைந்துள்ளது. உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம். வலிகாமம் மேற்கு (தற்போது வலிகாமம் தென்மேற்கு) பகுதி சங்கானை கோவிற்பற்று சங்கானை இறை J/146 கிராம சேவகர் பிரிவிலுள்ள "வியாவத்தை" என்னும் பெயருள்ள நிலப்பரப்பு 6 குழி $13\frac{1}{2}$ கொண்ட இவ்வாதனம் பிரான்பற்று பண்டத்தரிப்பைச் சேர்ந்த சித்திரசேனனும் பெண் இராசசுலோசனாவும் அவர்களால் அதே ஊரைச் சேர்ந்த சித்திரசேனன் மகள் சுகந்தமலர் அவர்களுக்கு நன்கொடை உறுதி மூலம் பிரசித்த நொத்தாரிஸ் சி.இளங்கீரன் அவர்கள் முகதாவில் நிறைவேறிய. 6061 ஆம் இலக்க 24.08.2016 ஆம் திகதிய நன்கொடை உறுதி மூலம் தமக்குச் சொந்தம் எனத் தெரியப்படுத்தி எமது பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலக ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளனர். நிலஅளவையாளர் திரு. A. கந்தசாமி அவர்களால் வரையப்பட்ட 2018/1060 ஆம் இலக்க 28.08.2018 ஆம் திகதிய நில அளவைப் படத்தின் பிரகாரம் இவ் ஆதனம் ஆனது " வியாவத்தை" நிலப்பரப்பு 6 குழி 12.54 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர்மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் பிரசுரித்த திகதியிலிருந்து 30 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமைகோராதவிடத்து குறித்த ஆதனமானது சித்திரசேனன் மகள் சுகந்தமலர் எனும் பெயருக்குப் பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.




அ.ஜெயநேசன்
தவிசாளர்
வலி.தென்மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண்ணில் 19 . 05 . 1955



விண்ணில் 24 . 09 . 2018

கடந்த 24.09.2018 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

### திருமதி சிவபாக்கியம் கனகேஸ்வரன்
**(ஆயுள்வேத வைத்தியர்)**

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (24.10.2018) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சிவன்வீதி,
ஆவரங்கால் மேற்கு, புத்தூர்.

**குடும்பத்தினர்.**

(CS/20725/11/17)

## கிணற்றில் வெடிபொருள் மீட்பு

முல்லைத்தீவு. ஒக்.24

முல்லைத்தீவு. கேப்பாபிலவு மாதிரிக் கிராமத்தில் கிணறு ஒன்றில் வெடிபொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று தெரி விக்கப் படுகின்றது.

நேற்றுமுன்தினம் அங்குள்ள கிணறு ஒன்றைத் துப்புரவாக்கியபோது வெடிபொருள்கள் சில தென்பட்டுள்ளன. அது தொடர்பாக முள்ளியவளைப் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

முள்ளியவளைப் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். வெடிபொருள்களை அகற்றுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(ற-ரி3)

## நாகபூஷணி திருமணசேவை

மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தெரிவு செய்து தரப்படும்.

**257, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**
**021 222 9306. 077 138 7596**

(CS 18781/15/17)

## மாடிவீடு விற்பனைக்கு (நல்லூர்)

நல்லூர் துர்க்கா மணி மண்டபத்துக்கு அருகில் உயர்தரமிக்க மாடிவீடு விற்பனைக்கு உண்டு.

(CS/20762) (11,17)

**071 142 4831, 077 334 1857**

## காணி விற்பனைக்கு

மட்டுவில் வடக்கு, சந்திரபுரத்தில் 07 பரப்பு தென்னங்காணி விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு - 077 315 1645, 076 558 1462**

## வீடு வாடகைக்குண்டு

பருத்தித்துறை வீதி. புத்தூர் மக்கள் வங்கிக்கு (ஆவரங்கால்) அருகில் 4 அறைகள். குளியலறை. வாகன தரிப்பிடம் கொண்ட விசாலமான புதிய வீடு வாடகைக்குண்டு. அரச. அரச சார்பற்ற நிறுவனங்களின் அலுவலக பாவனைக்கு உகந்தது. விரும்பத்தக்கது. தரகர் தேவையில்லை.

**தொடர்பு - 077 399 6345**

## இறைச்சிக்கோழி விற்பனை

புறொய்லர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். சுத்தம் செய்யப்பட்டது. 1Kg 350/= மட்டும்

**U.S.A பாம் (குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.)**
**T. P : 077 8689 500**




## அடுத்த...

வடக்கு மாகாண சபையின் இறுதி 134 அமர்வு. கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. சுமார் 9.30 மணி நேரம் சபை அமர்வு இடம்பெற்றது. சபையில் உறுப்பினர்கள் எல்லோரும் உரையாற்றினர்.

அவர்கள் எல்லோரது உரைகளிலும் பல விடயங்கள் ஒத்துப் போயிருந்தன. குறிப்பாக மாகாண அரச அதிகாரிகள் எல்லோரையும் பாராட்டினார்கள். முதலமைச்சர் மாத்திரம் விதிவிலக்காக அதிகாரிகள் மீது குறைகூறியிருந்தார். இங்குள்ள அதிகாரிகளும் தமிழ் உணர்வுமிக்கவர்கள். தமிழ்த் தேசிய உணர்வுடன் தான் அவர்கள் பணியாற்றுகின்றார்கள். எஞ்சிய காலத்திலும் சரியாகச் செயற்படுவார்கள் என்று உறுப்பினர்கள் எல்லோரும் கருத்துத் தெரிவித்தனர். அவர்கள் தமது உரைகளில் முக்கியமாக வடக்கு மாகாண தலைமைச் செயலர் அ.பத்திநாதனைப் பாராட்டி நன்றி தெரிவித்தனர். அவரது திறமையைப் பயன்படுத்தியதைப்போன்று ஏனைய அதிகாரிகளின் திறமையைப் பயன்படுத்தியிருந்தால், இந்த மாகாண சபை இன்னும் திறம்படச் செயற்பட்டிருக்கும் என்று குறிப்பிட்டனர்.

மேலும், தங்களால் யாருக்காவது பாதிப்பு ஏற்பட்டிருந்தால் பகிரங்க மன்னிப்புக் கோருவதாகவும் உறுப்பினர்கள் தமது உரைகளில் குறிப்பிட்டனர்.

உரிமைக்குச் சமாந்திரமாக பொருளாதார விடயங்களையும் கையாண்டிருக்கவேண்டும். அதனை மாகாணசபை செய்யவில்லை என்பதை ஒப்புக் கொண்ட உறுப்பினர்கள், மக்கள் எவ்வளவோ எதிர்பார்ப்பில் இந்த மாகாண சபைக்கு தங்களைத் தெரிவு செய்தனர் என்பதையும் அவர்களின் முழுமையான எதிர்பார்ப்பை நிறைவேற்ற முடியவில்லை என்றும் வருத்தம் தெரிவித்தனர்.

அடுத்துவரும் மாகாணசபையாவது மிகவும் திறம்படச் செய்ய வேண்டும் என்று வலியுறுத்துவதாக உரையாற்றிய அத்தனை உறுப்பினர்களும் தெரிவித்தனர். (5)

## வெண்ணை...

வடக்கு மாகாணசபையின் இறுதி அமர்வில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது. முதலமைச்சர் அண்மையில் உரையாற்றும்போது தனது அரசியல் பயணத்தில் நானும் கைகோர்ப்பேன் என்று நம்புவதாகக் கூறியிருந்தார். அதற்கு நான் அந்தக் கூட்டத்தில் வைத்தே பதில் சொன்னேன். இன்றும் சொல்கின்றேன். ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும். இப்போது ஒற்றுமையைச் சீர்குலைக்கக் கூடாது. தேர்தல் அரசியலில் நாங்கள் குழம்பிக் கொண்டிருக்கக் கூடாது. முதலமைச்சரும், சம்பந்தன் ஐயாவும் இரட்டைக் குழல் துப்பாக்கிகள். நாங்கள் அவர்களுக்குப் பலமாக இருக்கவேண்டும். நாங்கள் எல்லோரும் பல்குழல் போன்று எங்கள் மக்களின் உரிமைக்காக முழங்கவேண்டும் என்றார்.

முன்னாள் அமைச்சர் டெனீஸ்வரன் உரையாற்றும்போது, நாம் இவ்வளவுதூரம் ஒற்றுமையாக இருக்கும்போதே எவ்வளவோ விடயங்களை எங்களால் தடுக்க முடியாமல் இருக்கின்றது. நாம் இன்னும் பலவீனப்பட்டால் நிலமை என்னவாகும் என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும் - என்றார். (5)

## இனத்தைக்...

அரசமைப்பு மாற்றத்தை இனப்பிரச்சனைக்கான தீர்வாக ஏற்றுக்கொண்டு அதில் கலந்து கொண்டதன் மூலம் 70 வருடகால தமிழ்த் தேசிய அரசியல் மற்றும் ஆயுத ரீதியான போராட்டங்கள் மூலம் கட்டி எழுப்பப்பட்ட 'சிங்கள தமிழ்' தரப்புக்களின் பேச்சு மூலமாகப் 'பேரம் பேசும்' நிலைமை இன்று இல்லாமல் செய்யப்பட்டுள்ளது. வடக்கு கிழக்கு இணைப்பு, கூட்டாட்ச்சி என்பவற்றைக் கைவிட்டு ஒற்றையாட்சி முறையை எமது மக்களின் எந்த அனுமதியும் இன்றி ஏற்றுக்கொண்டுள்ளார்கள் எமது தலைவர்கள். பௌத்தத்துக்கு முதலிடம் என்பதையும் இந்த அரசமைப்பு உத்தேசத் திருத்தத்தில் ஏற்றுக்கொண்டதன் மூலம் கட்டமைப்பு ரீதியானதும், கலாசார ரீதியானதுமான தொடர் இன அழிப்புக்கான வழியை ஏற்படுத்தியுள்ளார்கள் எம்மவர்கள்.

இதனையா நாம் 'சாணக்கிய அரசியல்' என்று' ஏற்றுக்கொள்வது? எமக்கான இலக்கைத் தாமே நிர்ணயித்துவிட்டா தீர்வு முயற்சிகளில் இவர்கள் பங்குபற்றியுள்ளார்கள்? எத்தனை துறைசார் புத்திஜீவிகளின் ஆலோசனைகளை இதற்காக பெற்றிருந்திருக்கின்றார்கள் எமது தலைவர்கள்? மக்களின் எண்ணங்களும் மனோநிலையும் எமது தலைமைகளால் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

இத்தகைய ஒரு ஆபத்தான நிலைமையை சீர்குலைக்கக்கூடாது என்பதற்காகவா இப்போது ஒற்றுமையை வலியுறுத்துகின்றார்கள்? எமது இனத்தை அழிப்பதற்கா அல்லது பாதுகாப்பதற்கா ஒற்றுமை வேண்டும் என்பதை நாம் தீர்மானிக்கவேண்டிய காலம் வந்துவிட்டது. எமது இனத்தை அழிந்து போக விடும் ஆலோசனைகளை ஆமோதிக்கும் எம்மவர் அவர்களின் ஆலோசனைகளின் அடிப்படையில் எம்மை அணி சேருமாறு கோருவதும் ஒற்றுமையை வலியுறுத்துவதும் விந்தையாக இருக்கின்றது. எமது அடிப்படைக் கொள்கைகளை அடையாளங்கண்டு அவற்றின் அடிப்படையில் ஒற்றுமை பிறந்தால் அன்றி தவறான அடிப்படைகளில் ஏற்படும் ஒற்றுமை ஆபத்தாக முடியும் - என்றார். (5)

**(முதலமைச்சரின் முழுமையான உரை- பக்.14)**

## சபையின்...

இந்த ஆண்டு ஆரம்பத்தில் தனக்கு மின்னஞ்சல் அனுப்பியிருந்ததாகவும் அதில் இரண்டு கதைகளைக் கூறியிருந்தாகவும் குறிப்பிட்டு. அதனை இன்றைய அமர்வில் வெளிப்படுத்த வேண்டிய தேவை இருப்பதாகவும் தெரிவித்தார்.

'நீங்கள் பிழை செய்யவில்லை என்பதைக் ஏற்றுக் கொள்கின்றேன். ஆனால் உங்களின் பதவியை நான் நினைத்தால் கூட காப்பாற்ற முடியாது. முற்பிறப்பில் நீங்கள் செய்த பாவம் தான் உங்கள் அமைச்சுப் பதவி பறிபோகக் காரணம். நீங்கள் இந்தப் பிறவியில் பாவம் செய்யவில்லை' என்று மின்னஞ்சலில் கூறியதாக சபையில் அம்பலப்படுத்தினார்.

அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், சிவாஜிலிங்கத்தின் இனப்படுகொலை தீர்மான வரைவு, தாமதப்படுத்தப்பட்;டமைக்கு முதலமைச்சர் காரணம் என்று கூறினார். இது தொடர்பில் முதலமைச்சர் அனுப்பிய கடிதங்கள் இப்போதும் இருப்பதாகத் தெரிவித்தார். இதன் போது ஆளும் கட்சி உறுப்பினர் சயந்தன், முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுடன் நாங்கள் அந்தக் காலத்தில் நெருக்கமாக இருந்தோம். அப்போது அவர், நாளை சிவாஜியின் பிரேரணை இருக்கின்றது. நீங்கள் எப்படியாவது பேசி அதனைத் தடுங்கள். நான் தொடர்ந்து பேசுகின்றேன் என்று எங்களுக்கு கூறினார். இதனால்தான் நாங்கள் சிவாஜிலிங்கத்தின் தீர்மான வரைவை எதிர்த்தோம். அதற்காக சிவாஜிலிங்கத்திடம் இப்போது பகிரங்க மன்னிப்புக் கோருகின்றேன் என்று குறிப்பிட்டார். (5)

## முதலமைச்சராக...

யாழ்ப்பாணம், ஒக். 24

வடக்கு மாகாண சபையின் பதவிக் காலம் இன்று நள்ளிரவுடன் முடிவுக்கு வருகின்றது. முதலமைச்சராக விக்னேஸ்வரன் பங்கேற்கும் இறுதி நிகழ்வு இன்று மாலையே நடைபெறவுள்ளது.

காரைநகர் பிரதேச சபையின் கசூரினா சுற்றுலா மையத்தில், முதலமைச்சரின் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியில் அமைக்கப்பட்ட பாரம்பரிய உணவகக் கட்டடம் இன்று மாலை 4 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக, முதலமைச்சர் விக்னேஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார். அவர் முதலமைச்சராகப் பங்கேற்கும் இறுதி நிகழ்வு இதுவாகும். (5)

## தேநீர்...

4.30 மணிக்கு தேநீர் விருந்துபசாரம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், மதியபோசனத்தின் பின்னர் தனது உரை நிகழ்த்துவதற்காக காத்திருந்தார். தனது உரையை நிகழ்த்தி முடிந்ததும், எதிர்க்கட்சித் தலைவரின் உரை முடியும் வரை இருந்தார். அந்த உரை முடிந்ததும் உடனடியாகப் புறப்பட்டுச் சென்றார். முதலமைச்சர் தனது மெய்பாதுகாவலரையும் பேரவைச் செயலகத்தில் விட்டுவிட்டு தனது வாகனத்தில் ஏறிப் பறந்து விட்டார். அதன் பின்னர் பேரவைச் செயலகத்துக்கு அவர் வரவில்லை. (5)

## இறுதி...

மூண்டது. அமைச்சர் சர்வேஸ்வரனும், ஆளும் கட்சி உறுப்பினர் சிவாஜிலிங்கமும் அனந்திக்குப் பரிந்து பேசினார். ஆளும் கட்சி உறுப்பினர் சயந்தன் அதனை எதிர்த்து தர்க்கம் புரிந்தார். முதலமைச்சரின் தீர்மான வரைவு மீதான விவாதத்தில், ஆளும் கட்சி உறுப்பினர் சயந்தனுக்கும் அவைத் தலைவர் மற்றும் முதலமைச்சருக்கு இடையே மோதல் ஏற்பட்டது!

# ஊழல் மோசடியாளர்களிடம் ஆட்சியை வழங்கக் கூடாது

### வலியுறுத்துகின்றது ஜே.வி.பி. கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஒக்.24

ஊழல் மோசடிகளில் ஈடுபடும் ஒரு தரப்பினரிடமிருந்து மற்றோரு ஊழல் தரப்பினருக்கு மக்கள் ஆட்சி அதிகாரத்தை வழங்கிவிடக் கூடாது இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுராகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

வாழ்க்கை செலவு, நாட்டில் வரிச்சுமை அதிகரிக்கப்பட்டுள்ளமை, எரிபொருள் விலை அதிகரிப்பு, போக்குவரத்து கட்டண அதிகரிப்பு, சிங்கப்பூர் எட்கா உள்ளிட்ட நாட்டை தாரை வார்க்கும் ஒப்பந்தங்கள், அம்பாந்தோட்டை துறைமுகம், மத்தள விமான நிலையம், திருகோணமலை எண்ணை தாங்கிகள் உள்ளிட்ட தேசிய வளங்களை சர்வதேச நாடுகளுக்கு விற்பனை செய்தல் மற்றும் அரசின் ஊழல் மோசடிகள் ஆகியவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று மக்கள் விடுதலை முன்னணி கொழும்பில் ஆர்ப்பாட்டம் நடத்தியது.

கொழும்பு புஞ்சி பொரல்ல சந்தியிலிருந்து மருதானை ஊடாக கோட்டை தொடருந்து நிலையம் நிலையம் வரை எதிர்ப்பு ஊர்வலம் நடத்தப்பட்டது. கோட்டை தொடருந்து நிலையத்திற்கு முன்பாக கோசங்கள் எழுப்பியவாறு பதாதைகள் ஏந்தியும் ஆர்ப்பாட்டமும் நடத்தப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுராகுமார திசாநாயக்க, பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, பரப்புரைச் செயலாளர் விஜித ஹேரத் உட்படக் கட்சிப்



பிரமுகர்களும், ஆதரவாளர்களும், பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தின் போது கருத்துத் தெரிவித்த போதே அநுரகுமார திசாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவது

மைத்திரிபால சிறிசேன ரணில் விக்ரமசிங்க இணைந்த கூட்டரசு மூன்று வருடங்களை நிறைவு செய்துள்ளது. அவர்கள் ஆட்சிக்கு வந்ததிலிருந்து மக்கள் சந்தோசமாக இருப்பதாகத் தெரியவில்லை.

கல்வி தகைமை இருந்தும் வேலையின்றி நூற்றுக்கணக்கான பட்டதாரிகள் காணப்படுகின்றனர். மோசடிகளில் ஈடுபடும் ரணிலின் பொருளாதாரக் கொள்கையே இவற்றுக்கான காரணமாகும்.

எதிர்வரும் காலங்களில் ஊழல் மோசடிகளில் ஈடுபடும் ஒரு தரப்பினரிடமிருந்து மற்றோரு ஊழல் தரப்பினருக்கு மக்கள் ஆட்சி அதிகாரத்தை வழங்கிவிடக் கூடாது - என்றார். (ற)

மதியபோசன இடைவேளையின் பின்னர், எதிர்க்கட்சித் தலைவர் உரையாற்றினார். இதன்போது மாகாணசபைக்கு கிடைக்கட வேண்டிய நன்மையை முதலமைச்சர் தடுத்து விட்டார் என்று கூறும்போது முதலமைச்சர் எழுந்து எதிர்க்கட்சித் தலைவருடன் தர்க்கித்தார். இதனால் சிறிது நேரம் இருவருக்கும் இடையில் கடும் மோதல் நடந்தது. இதன் பின்னர் சபை அமர்வு சுமுகமாக இடம்பெற்றது. (5,21)

## தனிப்பட்ட...

களை நிரந்தரமாக்கும் தீர்மானம் வரைவு முன்மொழியப்பட்டது.

ஆளும் கட்சி உறுப்பினர் கே.சயந்தன், இது அரசியலமைப்பின் உறுப்பிரை 12 ஐ மீறும் செயல் என்று குறிப்பிட்டார். முதலமைச்சர், அவைத் தலைவர், அமைச்சர்களுக்கு மாத்திரம் முகாமைத்துவ உதவியாளர்கள், அலுவலக உதவியாளர்கள் இருப்பதில்லை. சபை உறுப்பினர்களுக்கும்தான் இருக்கின்றனர். சபை உறுப்பினர்களின் முகாமைத்துவ உதவியாளர்கள், அலுவலக உதவியாளர்கள் ஆகியோருக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும். இல்லாவிடின் எல்லோரும் சமம் என்ற அரசியலமைப்பு உறுப்புரிமையை மீறுவதாக அமையும் என்று குறிப்பிட்டார்.

இது அரச சுற்றறிக்கை. அப்படியானால் நீங்கள் கொழும்பு அரசுக்கு எதிராகத்தான் வழக்குத் தாக்கல் செய்யவேண்டும் என்று அவைத் தலைவர் தெரிவித்தார். அரச சுற்றறிக்கை ஒன்றும் வேதாந்தம் அல்ல. அது வழிப்படுத்தத் தான். தேவைப்பட்டால் நாம் அதில் திருத்தங்கள் செய்யலாம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா யோசனை முன்வைத்தார்.

இந்த யோசனையை ஏனைய உறுப்பினர்களும் ஏற்றுக் கொண்டனர். அதற்கு அமைவாக, முதலமைச்சர், அவைத் தலைவர், அமைச்சர்கள், உறுப்பினர்கள் ஆகியோரின் தனிப்பட்ட ஆளணியையும் நிரந்தரமாக்க வேண்டும் என்று தீர்மானம் திருத்தப்பட்டது. இதன்போது அவைத் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர்களையும் இந்தத் திருத்தத்தில் உள்ளடக்க வேண்டும் என்று குறிப்பிட்டார். அதற்கு ஒரு தொகுதி உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காக நாங்கள் ஏன் கதைக்கவேண்டும் என்று சர்ச்சையைக் கிளப்பினர். இறுதியில் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அதில் உள்ளடக்கி திருத்தம் மேற்கொள்ளப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**அவைத் தலைவரின் தீர்மானம்**

இதனை விட அவைத் தலைவரால் முன்மொழியப்பட்ட தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. முதலாவது வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்களுக்கு அலுவலக வசதிகள் இல்லாமையினால் 2015ஆம் மற்றும் 2016ஆம் ஆண்டுகளில் காரணிகள் அடிப்படையான திட்டத்தின் கீழ் (சி.பி.ஜி) 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வீதம் ஏற்பாடு செய்து, உறுப்பினர்களுக்கு வழங்கிய பொருள்களை, பொருள் பதிவிலிருந்து நீக்கிவிட வேண்டும் எனவும், 2017ஆம் ஆண்டு முதல் அலுவலகப் படியாக மாதாந்தம் 50 ஆயிரம் ரூபா வழங்கப்படுவதைக் கருத்தில் கொண்டு, இந்தக் கொடுப்பனவு வழங்கப்பட ஆரம்பித்ததிலிருந்து, புதிய உறுப்பினர்களுக்கு இந்த வழங்கல்கள் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும், ஏற்கனவே இந்த நிலைப்பாடே ஏற்றுக் கொள்ளப்பட்டமையாக இருந்ததை கருத்திற்கொண்டு அவற்றை மீளப் பெறவேண்டிய தில்லை என்று தீர்மான வரைவு முன்வைக்கப்பட்டது. எதிர்ப்பு இன்றி நிறைவேற்றப்பட் டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த அவைத் தலைவர், எந்தக் கடிதங்கள் வந்தாலும், யார் என்ன சொன்னாலும் உங்கள் அலுவலகப் பொருள்களை நீங்கள் திருப்பி ஒப்படைக்கத் தேவையில்லை. அதிகாரிகள், இதில் சபை தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றது என்பதை தங்களுக்கான பாதுகாப்புக் கவசமாகப் பாவித்துக் கொள்ளலாம் என்றும் குறிப்பிட்டார்.

ஆளும் கட்சி உறுப்பினர் து.ரவிகரன், பொருள்களைக் கேட்டால் கொடுக்க வேண்டியதுதானே. இதில் ஏன் பிரச்சினைக்குப் போவான் என்றார். அதேகருத்தையே அமைச்சர் திருமதி அனந்தி சசிதரனும் கூறினார். ஆளும் கட்சி உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், பொருள்களைத் திருப்பிக் கேட்டால் அதன் தேய்மானப் பெறுமதியைக் கணித்து, எஞ்சிய பெறுமதியைக் கட்டம் கட்டமாக வழங்கலாம் - என்றார். (5,21,26)

## விக்கியின்..

விழுந்தமையினாலேயே தீர்மானம் மீளப் பெறப்பட்டது என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில் சிவாஜிலிங்கம் தனது உரையில், மக்கள் கிளர்ச்சியால் முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீளப் பெறப்பட்டது என்று சொல்லமாட்டேன். அதே போன்று, சம்பந்தன் ஐயாவின் காலில் முதலமைச்சர் வீழ்ந்ததால் இது நடக்கவில்லை.

சம்பந்தன் ஐயாவின் இராஜதந்திர நடவடிக்கை ஊடாகவே இது நடந்தது. அவர் எனக்கு அழைப்பை ஏற்படுத்தி இந்த விடயத்தைப் பேசித் தீர்க்கச் சொன்னார். அதைப்போன்று சித்தார்த்தனுடன் பேசினார். சித்தார்த்தன் ஊடாக முதலமைச்சரிடம் சம்பந்தன் ஐயா பேசினார். இறுதியில் மதத் தலைவர்கள் தலையிட்டு இந்த விடயம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது - என்றார். (5)




# மானிப்பாய் ஏஞ்சல் இலகுவான வெற்றி

யாழ்ப்பாணம், ஒக். 24
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் மாணவர் முதல்வர் சபையால் நடத்தப்படும் பொன் விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கூடைப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலை அணி வெற்றிபெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலை அணியை எதிர்த்து சென். ஜோன்ஸ் கல்லூரி அணி மோதியது. 74:20 என்ற புள்ளிகளின் அடிப்படையில் மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலை அணி வெற்றிபெற்றது. (ம-23)

# மன்னார் 'ஏ' அணி கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், ஒக். 24
மன்னார் மாவட்ட கால்பந்தாட்டச் சங்கத்தால் வடக்கு - கிழக்கு ரீதியாக நடத்தப்பட்ட தொடரில் மன்னார் மாவட்ட ஏ அணி கிண்ணம் வென்றது. மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் மன்னார் மாவட்ட ஏ அணியை எதிர்த்து மன்னார் மாவட்ட பி அணி மோதியது. 2:0 என்ற கோல் கணக்கில் மன்னார் மாவட்ட ஏ அணி வெற்றிபெற்றுக் கிண்ணம் வென்றது. (ம-23)



# பற்றிக்ஸை வென்றது கொக்குவில் இந்து

யாழ்ப்பாணம், ஒக். 24
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் மாணவர் முதல்வர் சபையினால் நடத்தப்படும் பொன் விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கூடைப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி வெற்றி பெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்றுமுன்தினம் மாலை 5.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதியது. 68:39 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி வெற்றிபெற்றது. (ம-23)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஒக். 24

**ஏ.பி. கழக துடுப்பாட்டம்**

ஏபி விளையாட்டுக் கழகம் நடத்தும் துடுப்பாட்டத் தொடரின் ஆட்டமொன்று யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இன்று காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. இந்த ஆட்டத்தில் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**கிளிநொச்சி பிறீமியர் லீக்**

கிளிநொச்சி மாவட்ட துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் கிளிநொச்சி பிறீமியர் லீக் துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டம் இன்று புதன்கிழமை கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இந்த ஆட்டத்தில் மகாதீபம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**யாழ். லீக்கின் கால்பந்தாட்டம்**

யாழ்ப்பாணம் கால்பந்தாட்ட லீக்கின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்டப் பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ். பாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஞானகலா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)




# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சம்பியன்




யாழ்ப்பாணம், ஒக். 24
இலங்கை கூடைப்பந்தாட்டச் சம்மேளனம் பாடசாலை அணிகளுக்கு இடையில் நடத்திய கூடைப்பந்தாட்டத் தொடரில் 19 வயதுப் பிரிவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி கிண்ணம் வென்றது.

நாலந்தாக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்றுமுன்தினம் மாலை 4 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் தெகிவளை கேட்வேக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி மோதியது. 62:33 என்ற புள்ளிகளின் அடிப்படையில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி வெற்றிபெற்றது. (ம-23)



## வீழ்ந்தார் கெர்பர்

உலக சம்பியன்ஷிப் ரென்னிஸ் தொடரில் நேற்று இடம்பெற்ற ஆட்டமொன்றில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட வீராங்கனையான கெர்பர் தோல்வியடைந்தார்.

பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதல் எட்டு இடங்களிலும் உள்ள வீராங்கனைகளுக்கு இடையே இந்தச் சம்பியன்ஷிப் தொடர் நடைபெற்று வருகிறது. நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் நெதர்லாந்து வீராங்கனை பெர்டென்ஸை எதிர்த்து ஜேர்மனிய வீராங்கனை ஏஞ்சலிக் கெர்பர் மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 6:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் கெர்பர். எனினும் அடுத்த இரண்டு செற்களையும் அவர் 4:6, 3:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இழந்ததை அடுத்து 1:2 என்ற செற் கணக்கில் தோல்வியடைந்தார். (ம)



# என்ன காரணத்துக்காகவும் டோனியை நீக்க முடியாது

## வில்லியர்ஸ் வெளிப்படைப் பேச்சு

“இப்போதல்ல எப்போதும் டோனியை அணியில் இருந்து நீக்க முடியாது. என்ன காரணத்துக்காகவும் அவரை அணியில் இருந்து நீக்க முடியாது” என்று தெரிவித்தார் தென்னாபிரிக்க அணியின் முன்னாள் தலைவர் வில்லியர்ஸ்.

பன்னாட்டு ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில், “டோனி ஓய்வை அறிவிக்கும் நேரம் வந்து விட்டதல்லவா?” என்று கேட்கப்பட்ட கேள்விக்குப் பதில் வழங்குகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

“டோனிக்கு வயதாகவில்லை. அவர் இன்னமும் ஓர் அபாயகரமான வீரர். அவரின் சாதனைகள் அவரைப்பற்றிச் சொல்லும். இப்போது மட்டுமல்ல எப்போதும் அவரை அணியில் இருந்து நீக்க முடியாது. என் அணியில் டோனிக்கு 80 வயதிலும் அதற்கு அப்பாலும்கூட இடமுண்டு. அப்போது அவருக்கு வயதாகியிருக்கலாம், நடக்க முடியாதவராக சக்கர நாற்காலியில் அமர்ந்திருக்கலாம் அப்போதும்கூட டோனியை நீக்குவதற்கு முடியாது” என்று வில்லியர்ஸ் மேலும் தெரிவித்தார். (ம)

## ஐயனார் இறுதியில்

யாழ்ப்பாணம், ஒக். 2

பிரான்ஸ் தமிழர் கால்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் தொடரில் வேலணை துறையூர் ஐயனார் விளையாட்டுக் கழக அணி இறுதிக்குத் தகுதி பெற்றது.

இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் ஐயனார் அணியை எதிர்த்து இளவாலை சென். லூட்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது துறையூர் ஐயனார் அணி. (ம-23)

## யங்ஹென்றிஸ் அபார வெற்றி

பிரான்ஸ் தமிழர் கால்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணி இறுதிக்குத் தகுதி பெற்றது.

இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற முதலாவது அரையிறுதியாட்டத்தில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.

5:0 என்ற கோல் கணக்கில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-23)

## ஆஸி. - பாக். ரி20 இன்று

ஆஸ்திரேலியா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான முதலாவது ரி20 ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.

ஆஸ்திரேலிய அணி ஐக்கிய அரபு இராச்சியத்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட் தொடர் முடிவடைந்ததைத் தொடர்ந்து மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி20 தொடரின் முதலாவது ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது. (ம)

## ஓசாகாவை வென்றார் ஸ்ரீபன்ஸ்



உலக சம்பியன்ஷிப் ரென்னிஸ் தொடரில் நேற்று இடம்பெற்ற ஆட்டமொன்றில் வெற்றிபெற்றார் அமெரிக்க வீராங்கனை ஸ்ரீபன்ஸ்.


பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதல் எட்டு இடங்களிலும் உள்ள வீராங்கனைகளுக்கு இடையேயான உலக சம்பியன்ஷிப் தொடர் சிங்கப்பூரில் நடைபெற்று வருகிறது.

நேற்று நடைபெற்ற ஆட்டமொன்றில் அமெரிக்க வீராங்கனை ஸ்ரீபன்ஸை எதிர்த்து ஜப்பான் வீராங்கனை ஒசாகா மோதினார்.

மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை பலத்த போராட்டத்தின் பின்னர் 7:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் ஸ்ரீபன்ஸ்.

அடுத்த செற் 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் ஒசாகாவின் வசமானது.

மூன்றாவது செற்றை 6:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றார் ஸ்ரீபன்ஸ். (ம)



## லெவன்டேயிடம் மட்ரிட் தோல்வி

ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ரியல் மட்ரிட் அணி தோல்வியடைந்தது. இந்த ஆட்டத்தில் லெவன்டேயை எதிர்த்து ரியல் மட்ரிட் மோதியது. லெவன்டேயை மட்ரிட் இலகுவில் தோற்கடிக்கும் என்ற கருத்துக் கணிப்புத்தான் ஆரம்பம் முதல் நிலவியது. நாகொல்ஸ் 6ஆவது நிமிடத்திலும் றோயர் 13ஆவது நிமிடத்திலும் கோல்களைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது லெவன்டே. இரண்டாம் பாதியில் 72ஆவது நிமிடத்தில் மார்செலோ கோலொன்றைப் பதிவுசெய்தார். எனினும் வேறெந்தக் கோல்களும் பதிவுசெய்யப்படாததை அடுத்து முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் லெவன்டே வெற்றிபெற்றது. (ம)

# இங்கிலாந்துக்கு இலங்கை அணி ஒற்றை அடியானாலும் நெற்றியடி

இங்கிலாந்துக்கு எதிரான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரின் ஐந்தாவதும் இறுதியானதுமான ஆட்டத்தில் இலங்கை அணி 219 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது. இந்த வெற்றியின் மூலம் 4:0 என்று இங்கிலாந்தால் வழித்துத் துடைக்கப்படுவதைத் தவிர்த்து மதிப்புறு வெற்றியைப் பெற்றது.



முடிவடைந்த முதல் நான்கு ஆட்டங்களில் மூன்று ஆட்டங்களில் இங்கிலாந்து வெற்றிபெற்று (ஓர் ஆட்டம் மழையால் கைவிடப்பட்டது) 3:0 என்று முன்னிலையில் இருந்தது. ஐந்தாவது ஆட்டத்தின் முடிவு எவ்வாறு அமைந்தாலும் கிண்ணம் இங்கிலாந்திடம் இருந்து செல்லாது என்ற அடிப்படையில் தொடரின் ஐந்தாவதும் இறுதியானதுமான ஆட்டம் நேற்று நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்ப வீரர்களாக டிக்வெல்ல மற்றும் சமரவிக்கிரம. ஆரம்பம் முதல் இருவரும் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள். 6.3 பந்துப்பரிமாற்றங்களில் 50 ஓட்டங்களையும், 13.5 பந்துப்பரிமாற்றங்களில் 100 ஓட்டங்களையும் இலக்குச் சரிவில்லாமல் தொட்டது இலங்கை அணி. அணி 137 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது 54 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் சமர விக்கிரம. அடுத்த சில நிமிடங்களில் 95 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் டிக்வெல்ல. அதன் பின்னர் சந்திமல், குசல் மெண்டிஸ் இருவரும் இணைந்து சிறந்த ஆட்டத்தை வழங்கினர். நீண்ட காலத் தடுமாற்றத்தை நேற்றுடன் முடிந்து வைத்தார் குசல் மெண்டிஸ். அவர் 33 பந்துகளில் 6 சிக்சர்கள் உள்ளடங்கலாக 56 ஓட்டங்களை விளாசினார். முடிவில் 6 இலக்குகளை இழந்து 366 ஓட்டங்களை இலங்கை அணி பெற்றது.

பந்துவீச்சில் கரன், மொயின் அலி இருவரும் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குக் களமிறங்கிய இங்கிலாந்து அணி, ஆரம்பத்தில் பெரியளவில் தடுமாறியது. முதல் பந்துப்பரிமாற்றத்திலேயே ஆரம்ப வீரர் பேல்ஸ் ஓட்டமெதையும் பெறாமல் சமீரவின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். றோய் 4 ஓட்டங்களுடனும், பட்லர் ஓட்டமெதையும் பெறாமலும் ஆட்டமிழந்தனர். ரூட்டால் முடிந்தது வெறும் 10. 28 ஓட்டங்களில் 4 இலக்குகளை இழந்து தவித்தது இங்கிலாந்து அணி. மத்திய வரிசையில் ஸ்ரோக்ஸ், மொயின் இருவரும் இணைந்து ஓரளவு போராட்டம் காட்டினார்கள். ஸ்ரோக்ஸ் அரைச்சதம் கடந்தார். அவர் 67 ஓட்டங்களுடனும், மொயின் அலி 37 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். இங்கிலாந்து அணி 132 ஓட்டங்களுக்கு 9 இலக்குகளை இழந்திருந்த போது மழை குறுக்கிட இலங்கை அணி டக்வேர்த் லூயிஸ் முறைப்படி 219 ஓட்டங்களால் வென்றது. (ம)

## மோர்கன் இல்லை தலைவராக பட்லர்

இங்கிலாந்து அணியின் தலைவரான மோர்கன் நேற்றைய ஆட்டத்தில் விளையாடவில்லை. இதனால் பொறுப்புத் தலைவராக பட்லர் செயற்பட்டார்.

இந்தத் தொடரில் மோர்கன் மிகச் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தினார். இரண்டாவது ஆட்டத்தில் 92 ஓட்டங்களை விளாசி ஆட்டநாயகனாகத் தெரிவாகியிருந்தார். மூன்றாவது ஆட்டத்தில் 58 ஓட்டங்களைக் குவித்தார். நான்காவது ஆட்டத்தில் ஆட்டமிழக்காமல் 31 ஓட்டங்களைப் பெற்று வெற்றிக்கு வித்திட்டார். இங்கிலாந்து தொடரைக் கைப்பற்றுவதை உறுதி செய்த காரணத்தால் நேற்றைய ஆட்டத்தில் மோர்கனுக்குக் கட்டாய ஓய்வு வழங்கப்பட்டது. பட்லர் தலைவராகச் செயற்பட்டார். (ம)



மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் ஆட்டம் இன்று நடைபெறவுள்ள நிலையில் இந்த ஆட்டத்துக்காக நேற்றைய தினம் கடும் வலைப் பயிற்சியில் ஈடுபட்டது இந்திய அணி. கடந்த சில ஆட்டங்களாக டோனி சரிவரத் துடுப்பெடுத்தாடவில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் உள்ள நிலையில், அவர் நேற்று அதிக நேரம் வலைப் பயிற்சியில் ஈடுபட்டார். (ம)

## இந்தியா மே.இ.தீவுகள் இரண்டாவது ஆட்டமின்று

இந்தியா - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரின் இரண்டாவது ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.

மேற்கிந்தியத் தீவுகள் அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட் தொடரை இந்திய அணி முழுமையாகக் கைப்பற்றியது. ஒருநாள் தொடரின் முதலாவது ஆட்டத்திலும் இந்திய அணி வெற்றிபெற்று 1:0 என்ற அடிப்படையில் தொடரில் முன்னிலையில் உள்ள நிலையில், தொடரின் இரண்டாவது ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது. இன்றைய ஆட்டத்திலும் இந்திய அணி வெற்றிபெற்றால் அடுத்த மூன்று ஆட்டங்களிலும் வெற்றிபெற்றாலேயே மேற்கிந்தியத் தீவுகளால் கிண்ணத்தைக் கைப்பற்றக்கூடிய நெருக்கடி நிலை ஏற்படும். (ம)



## லசித் மலிங்க நேற்று நீக்கம்

இங்கிலாந்துக்கு எதிராக நேற்று நடைபெற்ற ஐந்தாவதும் இறுதியுமான ஒருநாள் ஆட்டத்தில் இருந்து மலிங்க நீக்கப்பட்டார்.

நீண்ட நாள்களுக்குப் பின்னர் இங்கிலாந்துக்கு எதிரான தொடருக்கான அணியில் மலிங்கவுக்கு இடம் கொடுக்கப்பட்டது. இதன்படி மலிங்கவும் முன்னைய ஆட்டங்களில் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தினார். நான்காவது ஒருநாள் ஆட்டத்தில் மலிங்க தடுமாற்றத்தை வெளிப்படுத்தியதை அடுத்து அவர் அணியில் இருந்து நீக்கப்படலாம் என்று கருதப்பட்டது. இதன்படி அவர் நேற்று அணியில் இடம்பிடிக்கவில்லை. மலிங்கவுக்குப் பதில் அணியில் சேர்க்கப்பட்ட ராஜித நேற்றுச் சிறந்த பந்துவீச்சை வெளிப்படுத்தினார். இதனால் அடுத்தடுத்த ஆட்டங்களில் மலிங்க நீக்கப்பட்டு ராஜிதவுக்கு வாய்ப்பு வழங்கப்படலாம் என்று கருதப்படுகிறது. (ம)

அமெரிக்க லொத்தர் இலவச விசா
உடனடியாக பதிவு செய்யுங்கள்
இந்த வருடமே இறுதி வருடம்
இன்னும் 7 நாட்களே உள்ளன!
எமக்கு இன்று குடும்பத்துடன் அமெரிக்காவில் நிரந்தரமாக குடியேற வாய்ப்பினை உருவாக்கித்தந்த V2 TRAVELS நிறுவனத்தினருக்கு எமது நன்றிகள்.
பிரியங்கா-குடும்பம்
V2 TRAVELS
0768226243

ஆள்கள் தேவை
நகரின் மத்தியில் அமைந்துள்ள பிரபல கல்வி நிறுவனம் ஒன்றிற்கு இரவு நேர காவல் வேலை செய்யக்கூடிய ஆண் வேலையாள் தேவை
தகுதியுடையவர்கள் இத்தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்
071 777 5444

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.10.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.